[illegible]

[illegible]

[illegible] 2002

D
V211,31'P02
P02.24.2
224376

வெளியீடு : 06-12-2002 Issued : 06-12-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 25, 2002 – தொகுதி 24 – எண் 2

**Thursday the 25th April, 2002 – Volume 24 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

*விலை ரூ. 3.00]* [Price Rs. 3.00

53/2003

**25-4-2002**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. தகவல் கோரல்—** | |
| கார் ஓட்டுநர் மற்றும் பக்கப் பயணி பெல்ட் அணிய அவையில் அறிவிக்காமல் செய்தித்தாளில் வெளிவந்துள்ளது | 271-272 |
| **2. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு | 272 |
| (ஆ) மனுக்கள் குழு | 272 |
| **3. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 21 - காவல்—தொடர்ச்சி<br>(ஆ) கோரிக்கை எண் 22 - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்—தொடர்ச்சி | 273-395 |
| திரு. லா. சந்தானம் | 273-280 |
| திரு. எச். ராஜா | 280-286 |
| திரு. ஜி. பழனிசாமி | 286-298 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 299-312 |
| திரு. ஜி.கே. மணி | 312-327 |
| * மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 296, 305, 320-321, 328-351, 355-384 |
| **4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 395 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 12, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 25, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

**"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை''**

எல்லா வகைகளிலும் நிறைந்ததாகவும், இடையூறுகளுக்கு அஞ்சாமல் கடமையாற்றக் கூடியதாகவும் உள்ள படைதான் ஓர் அரசின் மிகச் சிறந்த செல்வமாகும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. தகவல் கோரல்

**கார் ஓட்டுநர் மற்றும் பக்கப் பயணி பெல்ட் அணிய அவையில் அறிவிக்காமல் செய்தித்தாளில் வெளிவந்துள்ளது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய எல்லா செய்தித் தாள்களிலும் கார் ஓட்டுகிற ஓட்டுநர் அதேபோல முன்பக்க இருக்கையிலே அமரக்கூடிய பயணி இவர்கள் எல்லாம் பெல்ட் அணிய வேண்டும் என்கின்ற ஓர் அறிவிப்பு தமிழக அரசினுடைய செய்திக் குறிப்பு செய்தியாக வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வேளையில் அதுவும் காவல் துறை மானியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த வேளையில் இப்படி ஏதோ சட்டமன்றத்தில் புதிதாக ஒரு சட்டம் வந்தது போன்ற ஒரு தோற்றத்தை அது உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற நிகழ்வுகளை ஒரு

அறிக்கையாகவோ அல்லது இதே சபையிலே எப்பொழுதுமே announce செய்வதுதான் ஒரு மரபாக இருந்து வந்திருக்கிறது. இப்படி மரபுகளை மீறி வரக்கூடிய செய்திகளைக் குறித்து தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அரசிடமிருந்து அதனுடைய விளக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன என்று விசாரிக்கிறேன்.

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 63 முதல் 67 வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வணங்குகிற தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 1 முதல் 3 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

224376.
சென்னை 600 009
நூலகம்



## 3. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 22 - உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறைகளின் சார்பிலே நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே கலந்து கொண்டு எங்களது அகில இந்திய பார்வார்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறை என்பதுதான் ஓர் அரசுக்கு நல்ல பெயரை ஈட்டித் தருகின்ற ஒரு துறை. அதனால்தான் நமது சங்க இலக்கியங்களிலேகூட "நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று குறிப்பிட்டார்கள். ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவும், நீரும் எவ்வளவு அவசியமோ அதேபோல் அந்த நாட்டை காவல் செய்கின்ற அரசும் மிக முக்கியமானது என்று சொன்னார்கள். ஒரு மனிதன் வாழ்வதற்கு உணவும் நீரும் அவசியம் என்றாலுங்கூட, அவனுடைய உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பது இந்தக் காவல் துறை என்கின்ற காரணத்தினால், இந்தக் காவல் துறை சிறப்பாக இயங்கினால்தான் நாட்டு மக்கள் நலமாக இருக்க முடியும், நிம்மதியாக இருக்க முடியும், நிறைவாக இருக்க முடியும் என்கின்ற நிலையினால்தான், அதுதான் மிக உயர்ந்தது என்பதை நம்முடைய சங்க இலக்கியங்கள் கோடிட்டுக் காட்டின. ஆனால், கடந்த ஓரிரு மாதங்களாக பத்திரிகைகளிலே வந்த செய்திகள் எல்லாம் சற்றுக் கவலையை ஏற்படுத்துவதாகக்கூட இருந்தன. தமிழகத்தினுடைய காவல் துறை மிகச் சிறப்பான காவல் துறை என்று பெயர் பெற்ற காவல் துறை நிர்வாகத்திலே கடந்த ஓரிரு மாதங்களாக சென்னை மாநகரத்திலேகூட நடந்த சில சம்பவங்கள் மனதைப் புண்படுத்துகின்ற அளவிலே இருந்தன.

V21, 31 P02
P02 24.2

சென்ற சில நாட்களுக்கு முன்னால் சஞ்சை காட்டியா என்கின்ற அந்த தாதாவை சுட்டுக் கொன்றதற்குப் பிறகு பத்திரிகைகளிலே அந்தச் செய்தி இடம் பெறவில்லை. இன்றைக்கு ஒரு வாரமாக ஓரளவிற்கு நிம்மதி பெருமூச்சு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது. அப்படி தவறுகள் வரும்போது அவற்றை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்காது. மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்த நிர்வாகம் மிகவும் தூய்மையாக, நேர்மையாக, ஒழுக்கமாக நடத்தப்பட வேண்டும், எந்தக் குற்றங்களுக்கும் அப்பாற்பட்டு இந்தத் துறை செயல்பட வேண்டும் என்பதிலே மிகவும் கவனமாகவும், அக்கறையாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதிலே எந்த மாறுபட்ட கருத்தும் எனக்கு இல்லை.

*முற்பகல் 10-05*

இன்னும் அவர்கள் இந்தத் துறையிலே கவனம் செலுத்த வேண்டும். நேற்றைக்குக்கூட 'தினமலர்' பத்திரிகையிலே பார்த்தேன். எங்களுடைய தலைவர் தேவர் அடிக்கடி குறிப்பிடுவார்கள், அந்த நாளில்.

**'நங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம், ஆனால்
கங்கையே சூதகமானால் எங்கே செல்வது?'**

என்று குறிப்பிடுவார்கள். அதுபோல ஒரு தனி மனிதன் தவறு செய்தால் காவல் துறையிடத்திலே முறையிடலாம். அந்தக் காவல் துறையைச் சார்ந்தவர்களே தவறு செய்கின்றபோது யாரிடத்திலே சொல்வது என்பதைத்தான் நேற்றைக்கு பத்திரிகை குறிப்பிட்டுக் காட்டியிருந்தது. அதைச் சொல்வதற்கு உரிய மன்றம் என்கின்ற முறையிலே நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி தவறு செய்கிறவர்கள்மீது தாட்சண்யமின்றி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற என்னுடைய கருத்தை நான் சொல்லிக்கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலங்களில் பல்வேறு இடங்களிலே மதச் சண்டைகள், ஜாதீயச் சண்டைகள் எல்லாம் இருந்தன. இந்த ஓராண்டு ஆட்சிக் காலத்திலே அவை வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கு பேசிய அனைவருமே குறிப்பிட்டார்கள். ஆனால் அந்தக் கலவரங்கள் ஓய்ந்தாலுங்கூட அந்த நடந்து முடிந்த கலவரங்களின் தடையங்கள் இன்றும் ஓயவில்லை என்கின்ற நிலையில் பல்வேறு இடங்களிலே இருக்கின்றன.



நேற்றைக்குக்கூட இங்கே கொடியங்குளம் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். நான் சென்ற முறைகூட, இதே சட்டமன்றத்திலே அந்த கொடியங்குளம்—நீங்கள் ஆட்சியிலே இருக்கும்போது ஒரு நீதி விசாரணைக் கமிஷனை, கோமதிநாயகம் தலைமையிலே ஏற்படுத்தினீர்கள். அந்த—நீதி விசாரணைக் கமிஷனுடைய அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்பதை பலமுறை இந்த அவையிலே சுட்டிக்காட்டி, கடைசியாக 4 ஆண்டுகளுக்குப் பின்னால் அந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையிலே சொல்லியிருப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அன்றைக்கு அரசு நடந்துகொண்டது அத்துமீறல் அல்ல, அங்கு இருக்கின்ற ஒரு சாரார், மக்கள் எந்தவிதப் பாவமும் அறியாதவர்கள், ஒரு குறிப்பிட்ட மக்களால் தாக்கப்பட்டார்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அந்த இடத்திலே, இன்றைக்கும்கூட பல ஊர்களிலே அங்கு இருக்கின்ற மக்கள் இல்லை. வெளியிலே அகதிகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் சென்ற சில நாட்களுக்கு முன்னால்கூட சங்கரலிங்கபுரத்திற்குச் சென்று அங்கு இருக்கின்ற மக்களை எல்லாம் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள் மீது போடப்பட்டிருந்த வழக்குகளையெல்லாம், நான் திரும்பப்பெறுவேன் என்று அந்த நல்ல செய்தியையும் சொல்லிவிட்டு வந்தீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள்.

அதுபோல, திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக ஊருடையான் குடியிருப்பு என்ற ஊர் இருக்கிறது. பெயரே ஊருடையான் குடியிருப்பு, அந்த ஊரிலே ஆட்களே இல்லை என்கின்ற நிலைதான் இருக்கிறது என்று இன்றைக்குக்கூட உயர் காவல் துறை அதிகாரிகள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, அவற்றையெல்லாம் நீங்கள் பார்த்து, அந்த மக்கள்மீது போடப்பட்ட, புனையப்பட்ட உண்மைக்குப் புறம்பான வழக்குகளையெல்லாம் நீங்கள் நீக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஒரு நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் மனு கொடுக்கச் சென்ற நபர்களைத் தடுத்து நிறுத்தி, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அந்தச் சம்பவத்திலேயும் ஆயிரக்கணக்கான பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இன்னும் அந்த வழக்கு நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோல நமது அருமைச் சகோதரர் இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்திலே, பல்வேறு வழக்குகள், கமுதியிலே இருக்கின்ற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் மீதுகூட, அன்றைக்கு வழக்கு போடப்பட்டது. காவல் துறைக்கு சென்ற முறைகூட தேர்வு நடத்தியதில், அந்தக் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் பலபேர் அதிலே தேர்வு பெற்றார்கள். எழுத்துத் தேர்விலும், உடற்பயிற்சியிலும் தேர்வு பெற்று எல்லா தகுதிகளும் பெற்றிருந்தும்கூட. அந்த வழக்கின் காரணமாக அவர்களுக்குக் காவல் துறையிலே வேலை கிடைக்கவில்லை. ஏனென்றால், அந்த வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன என்ற காரணத்தினால். அதுபோல பலபேர் மீது இந்த வழக்குகள் தொடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலே அவர்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்கப்பட்டும்கூட, அதிலே சென்றமுறை தேர்வு நடைபெற்றதிலே 80 பேருக்கு மேலானவர்கள் அந்த வேலைவாய்ப்பைப் பெறாத நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்திலே தவறில்லை, அவர்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டும், அந்த வழக்குகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு அந்த வழக்குகளை நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

அதேபோல, எங்கே கலவரங்கள் வந்தாலும், இனப் பூசல்கள் சம்பந்தமாக உசிலம்பட்டி தொகுதியிலே இதுவரைக்கும் எந்தக் கலவரமும் வந்தது இல்லை. எந்த வழக்கும் பதியப்படவில்லை. கடந்த முறை உள்ளாட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரத்திலே ஒரு அரசியல் கட்சித் தலைவர் வந்தார் என்பதற்காக ஒரு வழக்கு 200 பேர் மேலே தொடுக்கப்பட்டது கருமாத்தூர் பகுதியைச் சேர்ந்த 200 பேர் மேலே தொடுக்கப்பட்டது. நேற்று பேசுகின்றபோதுகூட, நமது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார். லேசாக கழுத்திலே ஒரு கீறல் இருந்தது. அதற்காக 307 Section-ஐ போட்டார்கள் என்று சொல்லி, அந்தக் கீறல் கூட இல்லாமல் எந்தவிதமான காயங்களோ, சேதங்களோ எதுவுமே இல்லாமல் காவல் துறை 307 Section பிரகாரமும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரகாரமும் 200 பேர்மீது வழக்கு தொடுத்தது. அந்த F.I.R.-ஐக் கொண்டு போய் நீதிபதியிடத்திலே கொடுக்கின்ற நேரத்தில், இந்தச் சந்தர்ப்பத்திலே எந்தவித காயமும் இல்லாமல், எப்படி 307 Section போட்டீர்கள்,



வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் எங்கு வந்தது என்று சொல்லி, அந்த நல்ல மனம் படைத்த நீதிபதி அவர்கள் வழக்கினுடைய Section-களை எடுக்கச் சொல்லியிருக்கிறார். அதன் மூலமாக அந்தப் பகுதி மக்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இப்படி காவல் துறையிலே இருக்கிறவர்கள் கடமையைச் செய்கின்றபோது மனிதாபிமானமும் இருக்க வேண்டும். பிறர்படுகின்ற துன்பத்திலே இன்பம் காண்கின்ற நிலையை காவல் துறை தவிர்க்க வேண்டும். அதிலே வருகின்ற துயரங்கள் எவை என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து அந்த வழக்குகளைத் தொடுக்க வேண்டும். அதுபோல கீரிப்பட்டி பகுதியிலும் 100 பேர் மீது வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அதையும் வாபஸ் பெறுவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடினார்கள். அந்தப் போராட்டத்திலே நீங்கள்கூட குறிப்பிடுகின்றபோது, 23-11-2001, மத்திய தொழிற்சங்கங்கள் நடத்திய பொது வேலைநிறுத்தத்தின்போது, பேருந்து மீது கல்வீச்சு நடந்த ஓரிரு சம்பவங்களைத் தவிர மற்றபடி அமைதியாகவே நடந்தது என்று கூறியிருக்கிறீர்கள். சென்ற காலங்களிலெல்லாம், ஒரு கட்சியிலிருந்து ஒருவரை நீக்கியதற்காக மதுரை மாவட்டத்திலே பல்வேறு பேருந்துகள் கொளுத்தப்பட்டன. அந்தப் பேருந்து கொளுத்தப்பட்டதற்கு உரியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறை அலுவலகத்திற்குக் கூட்டிச்சென்ற நேரத்தில், அந்த காவல் நிலையத்திற்கே சென்று அவர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு சென்ற வரலாறுகள் எல்லாம் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

நேற்று பேசுகின்ற நேரத்தில்கூட நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். புரட்சி என்பது திடீர் என்று வெடிப்பது. அப்படி எங்களுடைய தலைவிக்கு வருவது, உடனடியாக தோன்றுவதுதான் புரட்சிகரமான சிந்தனைகள் என்று சொன்னார்கள். எங்களுடைய தலைவர் நேதாஜிகூட ஒரு புரட்சித் தலைவர்தான். அந்த முறையிலே தொழிலாளர்கள், தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடுகின்ற நேரத்திலே சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். நேற்றைக்கு நீதிமன்றம்கூட ஒரு தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலேகூட அரசு எடுத்த நடவடிக்கைகள் சரியானவைதான் என்று சுட்டிக்காட்டி, இருந்தாலுங்கூட அரசு ஒரு மாதத்திற்குள்ளாக அவற்றைப்

பரிசீலனை செய்து, அவற்றிற்குரிய பரிகாரத்தைத் தேடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சரை கேட்டுக்கொள்வது,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்பது நமது வள்ளுவருடைய வாக்கு. நேற்றைக்குக்கூட நமது அவை முன்னவர் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது பேரவைத் தலைவர் எடுத்த முடிவைக்கூட ஜனநாயகத்தின்மேல் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது, பற்றுதல் இருக்கிறது, பாசம் இருக்கிறது, எனவே, நீங்கள் கொடுத்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்கிறேன் என்றுகூட அவைக் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை, ஒரு நாள் தண்டனையோடு நீங்கள் மன்னித்து, அதை ஏற்றுக்கொண்டீர்கள் என்கின்ற அந்தக் கருணை உள்ளத்தோடு, ஆயிரம் குடும்பத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், அவர்கள் அந்த வேலையை இழக்க நேரிட்டால், அவர்கள் குடும்பம் என்ன கஷ்டப்படும் என்பது தாங்கள் அறியாததல்ல. அதுபோல எங்கள் பகுதியில்கூட சில தொழிலாளர்கள் அதிலே ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தயவுசெய்து நல்லவை வருகின்றபோது ஏற்றுக்கொள்கின்ற மனப் பக்குவத்தைப் பெற்ற நீங்கள், தீயவை வரும்போது, அவற்றை பெருந்தன்மையோடு மன்னிக்கின்ற தன்மையையும் நீங்கள் பெறவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக இந்த அரசு ஒரு சிறந்த அரசு, பழிவாங்குகின்ற நோக்கம் இல்லாத ஓர் அரசு என்பதை எடுத்துக்காட்டுவதுபோல, இன்றைக்கு அந்தத் தவறைச் செய்தவர்களேகூட வெட்கித் தலை குனிகின்ற அளவிற்கு, இப்படிப்பட்ட அரசில் நாம் இதைச் செய்துவிட்டோமே என்று அவர்கள் உணர்கின்ற அளவிற்குக்கூட உங்களுடைய நிலைமை மேம்பட்ட நிலைமையாக உங்களுடைய அறிவிப்பு இருக்க வேண்டுமென்பதை நான் அன்போடு இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

அதுபோல உங்கள் துறையிலே பல பேர் பல கோரிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் சென்ற தடவையே கொடுத்து, நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, மீண்டும் அவற்றைச் சொன்னால், முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று



எங்களுக்கு ஓர் அன்புத் தொல்லையைக் கொடுத்திருக்கிறார்கள். காவல் துறையிலே அமைச்சுப் பணியாளர்களாக வேலை செய்கின்றவர்கள் அந்த Executive Status வேண்டுமென்பதை சென்ற முறை தெரிவிக்கச் சொன்னார்கள். நாங்களும் சொன்னோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்கின்ற நிலை இருந்தாலும், ஊடே ஏற்பட்ட சில தொய்வுகளின் காரணமாக அது தடைபட்டு நிற்கிறது. அரசுக்கு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியின் மூலமாகவும் அது தடைபட்டிருக்கிறது என்கின்ற நிலையை எடுத்துச் சொன்னார்கள். அரசினுடைய பொருளாதார நெருக்கடி நிர்பந்தம் நீங்கிய பிறகும்கூட, அவர்களுடைய சம்பள விகிதங்களைப் பற்றியெல்லாம் யோசித்துக் கொள்ளலாம். இப்போது அந்த Status-ஐ கொடுப்பதற்கு மட்டும், அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

அதுபோல, 98 சப்-இன்ஸ்பெக்டர்கள் நீண்ட நாள் வேலை கிடைக்காமல் இருந்து, இப்போது வேலைக்கு வந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டம்-ஒழுங்கிலே (மணியடிக்கப்பெற்றது) வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தனியாக ஒரு கட்சியில் இடம் பெற்றிருந்தாலுங்கூட, என்னுடைய கட்சி இந்த அவையிலே மிகப் பழம்பெரும் கட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த அவை ஆரம்பித்த காலத்திலேயிருந்து, பசும்பொன் தேவரிலிருந்து, வரிசையாக இதுவரைக்கும் யாராவது ஒருவராவது இந்தக் கட்சியினுடைய பேர் சொல்வதற்கு இருந்து கொண்டிருந்த கட்சி இந்தக் கட்சி என்கின்ற முறையில்—நான் உங்களுக்கும் சேர்த்துத்தான், உங்கள் தொகுதியைப் பற்றியும், சில பிரச்சினைகளையெல்லாம் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு) உங்களுடைய மக்களைக் காப்பாற்றுகின்ற நிலையையும்தான் பேசிக் கொண்டிருக்கிறேன் என்கின்ற முறையில்—நான் இந்தக் கோரிக்கைகளை மட்டும் இங்கே முன்வைப்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

என் தொகுதியைப் பொறுத்த அளவிலே நான் சின்னப் பிள்ளையாக இருந்ததிலேயிருந்து ஒரு காவல் நிலையம் இருக்கிறது. எங்கள் ஊரையெல்லாம் கட்டுப்படுத்தின காவல் நிலையம் அதுதான். அது ஒரு சின்ன வாடகைக் கட்டடத்திலேயே இருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது நானும் சட்டமன்ற உறுப்பினராக வந்துவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சரிடம் அன்றைக்குக்கூட நான் மனு கொடுத்திருந்தேன்; அதற்கு ஒரு கட்டடம்

கட்டிக்கொடுங்கள்; அதற்கு இடம் எல்லாம் வைத்திருக்கிறேன் என்று. நான் முதலமைச்சரிடம் இருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாக, ஊரிலேபோய், நிச்சயமாக இந்த வருடம் கட்டடம் வரும் என்று, பல நிகழ்ச்சிகளிலே பேசும்போதும் பேசியிருக்கிறேன்.

அதுபோல ஒரு தீயணைப்பு நிலையம் என்னுடைய தொகுதிக்கு வேண்டுமென்று தங்களிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதுவும் வாடகைக் கட்டடத்திலே இருக்கிறது. இந்த இரண்டையும் நீங்கள் அறிவிப்பீர்கள். அந்தக் குளிர்ச்சியான, இன்பமான செய்தியைக் கேட்பதற்கு என்னுடைய காதுகள் (சிரிப்பு) காத்துக் கொண்டிருக்கின்றன என்பதனைச் சொல்லி, வணக்கத்தைச் சொல்லி, விடை பெறுகின்றேன், நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா. (குறுக்கீடு)

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

*மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றுகின்றபோது, கீரிப்பட்டி சம்பவத்தைக் குறிப்பிட்டார். ***

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை வேண்டாம். சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை, வேண்டாம். திருமாவளவன், உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. திரு. எச். ராஜா. (குறுக்கீடு) திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பது, குற்றங்களைத் தடுப்பது, புலனாய்வு செய்வது மற்றும் பாதுகாப்பு அளிப்பது ஆகிய கடமைகள் காவல் துறைக்கு இருக்கின்றன. பாதுகாப்புப் பணியில் உள்ளவர்கள், 24 மணி நேரமும் தங்களுடைய உயிரையும், பணயம் வைத்து செயலாற்ற வேண்டிய சூழ்நிலையிலே இருப்பவர்கள். கடந்த டிசம்பர் 13 ஆம் தேதிகூட, நாடாளுமன்ற வளாகம் தாக்கப்படாமல்....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருமாவளவன் சொன்ன அந்தக் கடைசி வாக்கியம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எச். ராஜா:** நாடாளுமன்றம் தாக்கப்படாமல், நாடும், பிரதமரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் காக்கப்பட்டதற்கு பாதுகாப்புப் பணியில் இருந்தவர்கள், தங்கள் இன்னுயிரையும் ஈந்து காப்பாற்றியது, கடமையாற்றியதுதான் காரணம். எனவே, காவல் துறையை நவீனப்படுத்துவதற்கும், காவல் துறைப் பணியாளர்களுடைய திறமைகளை உயர்த்துவதற்கும், அதற்கான உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

*முற்பகல் 10-20*

இதிலே மத்திய அரசினுடைய ஒப்புதலோடு, காவல் துறைக்கு கட்டடங்கள், வீட்டு வசதி, போக்குவரத்து, ஆயுதங்கள், தொலை தொடர்புக் கருவிகள், கணினிமயமாக்கல் ஆகியவற்றிற்காக ரூ.244.82 கோடி நிதியொதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். காவல் துறையிலே இருப்பவர்களுக்கு பல்வேறு விதமான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அடிப்படை நியமனப் பயிற்சி, முன் பதவி உயர்வுப் பயிற்சி, பாலின வேறுபாடின்றி அனைவரையும் மதிக்கின்ற பயிற்சி எனப் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இருந்தாலுங்கூட, பல்வேறு சமயங்களிலே பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்து விடுகின்றன. உதாரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சங்கரலிங்கபுரத்திற்குச் சென்று காவல் துறையினுடைய அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கே நிவாரணம் அளித்து வந்திருக்கிறார்கள். அதேபோல், சமீபத்திலே ஈரோடு மாவட்டத்திலே திங்களூர், திருவண்ணாமலை மாவட்டத்திலே இறையூர் ஆகிய இடங்களிலே காவல் துறையிலே பணியாற்றுபவர்களுடைய அத்துமீறல்கள் காரணமாக அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே, இறையூர் சம்பவம் தொடர்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழக டி.ஜி.பி. அவர்களுக்கும் நான் ஏற்கெனவே FAX மூலமாக செய்தி அனுப்பியிருக்கிறேன். அம்மாதிரியாகச் செயல்படாமல், மக்களோடு, அவர்களுடைய நண்பனாகச் செயலாற்றுகின்ற விதத்திலே அவர்களுக்கு ஒரு 'Public Relation'க்கான பயிற்சியும் அவசியமாகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதிலேகூட, 'stress' அதிகமாக இருப்பதால்கூட, அம்மாதிரியாக சில காவல் துறை அதிகாரிகள் நடந்து கொள்கிறார்கள். அதனாலே, யோகாசனம் போன்ற பயிற்சிகள்

அவர்களுக்கு அளிக்கப்படுவது நல்லது. ஏனென்றால், பேசும்போது, அது பிரதமரோ, ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் என்கின்ற காரணத்தினாலோ, பிரதமரையோ, உள் துறை அமைச்சரையோகூட, பெயர் சொல்லித் தகாத வார்த்தைகளோடு பேசுகின்ற சம்பவம் நடந்திருக்கிறது என்கின்ற காரணத்தால், ஒருகால் 'stress'-ஸினால் இருந்திருக்கலாம். அதற்காக காவல் துறையிலே பணியாற்றுபவர் களுக்கு யோகாசனப் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பத்திரிகைகளிலே கோவை தொடர் வெடிகுண்டு வழக்குத் தொடர்பாக தனி நீதிமன்றத்திலே தீவிரவாத அல்-உம்மாவைச் சார்ந்த தீவிரவாதிகளைக் கொண்டு வந்தபோது, அங்கு அவர்கள் நடந்து கொண்ட விதம் பற்றி செய்திகள் வந்திருக்கின்றன. அதாவது, நீதிமன்ற வளாகத்திற்குள்ளே கட்டிப் புரண்டு, உருண்டு, கர்ச்சீப்புக்களை பந்துகளாக்கி, ஓடிப் பிடித்து விளையாடுகின்ற அளவிற்கு. நடந்திருக்கிறது. நீதிபதி சட்டத்தை மதிக்க வேண்டுமென்று கேட்கின்றபோது, 'நாங்கள் நீதிமன்றத்தை மதிக்க மாட்டோம்' என அங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இருக்குமானால், கைதிகளை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து, பாதுகாப்பாக திருப்பியும் கொண்டு செல்வது என்பது மிகவும் சிரமமான காரியமாகிவிடும். இதனால், இப்போது காவல் துறைக்கும், நீதிமன்றத்திற்குமே மதிப்பு இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்திலே திருமங்கலத்திலே அல்-உம்மா தீவிரவாதிகள் கூடத்தப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்கின்ற காரணத்தால், அதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே, மதுரை, தேனி பகுதிகளிலே இதுபோல 8 நபர்கள் காவல் துறையினரைத் தாக்கி விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல, இரண்டாவது முறையாக திருமங்கலத்திலே நடைபெற்றது. ஆனால், இரண்டு நாட்களுக்குப் பிறகு ஹைதர் அலி பிடிக்கப்பட்டார்; பாராட்டக்கூடிய விஷயம். ஆனால், இன்னமும் இமாம் அலி பிடிக்கப்படாமல் இருக்கிறார். He is at large even now. இது மிகவும் கவலை அளிக்கக்கூடிய செய்தியாகும். அதிலும்கூட, இமாம் அலி காயல்பட்டினத்திலே ஒரு வாரத்திற்கும் மேலாகத் தங்கியிருந்தார் என்றும் பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன. அவர் தங்கியிருந்த இடம் ஹசன் என்பவரது வீட்டிலே தங்கியிருந்ததாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இதில் முக்கியமாக தமிழக அரசு கவனிக்க வேண்டிய ஒரு பிரச்சினை இருக்கிறது. ஹசன் என்பவர்



ஏற்கெனவே சுந்தரபாண்டியனாக, சாதாரண பால் வியாபாரியாக இருந்தவர். மதம் மாறிய உடனே, அவரிடம் எக்கச்சக்கமாக பண வசதிகளும், தீவிரவாதிகளுக்கு அவர் ஆதரவு தந்து செயலாற்றுகின்ற ஒரு சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. எனவே, இந்தத் தீவிரவாத செயல்களுக்கு பின்னணியிலே மிகப்பெரிய அளவிலே பணபலம் இருக்கிறது என்பது நமக்குத் தெரிகிறது. எனவே, மத மாற்றத்திற்காகவும், தீவிரவாதிகளுக்குப் பின்னணியாகவும் விளங்குகின்ற சக்திகள் என்ன என்பதைப் பற்றி அரசு விசாரணை நடத்த வேண்டும்.

*முற்பகல் 10-25*

சமீபத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட P.O.T.A. சட்டத்திலே இதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த சட்டத்தை எதிர்த்தவர்களெல்லாம் இப்போது ஏன் அது அவசியம் என்பதை புரிந்துகொள்ள முடியும். ஏனென்றால், P.O.T.A. சட்டத்திலே தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்கள் மாத்திரமல்ல; அதற்குப் பின்னணியிலே இருந்து நீதி வழங்குபவர்களையும் தண்டிப்பதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவையிலே ஆர்.எஸ்.எஸ்.-யினுடைய தெற்கு தாலுகா துணைச் செயலாளர் முருகேசன் அவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார். இது தொடர்பாக 5 பேர் இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே முன்னாள் அல்-உம்மாவைச் சேர்ந்தவர்கள் இப்போது Truth Voice என்கின்ற அமைப்பிலே இருந்துகொண்டு இந்த மாதிரியாக செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று அரசுத் தரப்பிலும் சரி, காவல் துறை தரப்பிலும் சரி, செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியாக தொடர்ந்து இச்சம்பவங்கள் நடப்பதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதிலும் கலவரங்கள், சிறைச்சாலைகளிலே; சென்னை சென்ட்ரல் ஜெயிலிலே, கோவை சென்டரல் ஜெயிலிலே, எப்படி ஏற்படுகின்றன? சென்ற வாரம் ஒரு வாரப் பத்திரிகையிலே ஒரு காவல் துறை அதிகாரியே சிறையிலேகூட இங்கு நடக்கின்ற கொலை, கொள்ளைகள் திட்டமிடப் படுவதாக செய்திகள் வந்திருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். எனவே, சிறைச்சாலைகளிலே நமக்கு மிகப்பெரிய அளவிலே பாதுகாப்பிற்கும், யார், யாரைப் பார்க்க வருகிறார்கள் என்பதற்கு மிகப்பெரிய அளவில் கண்காணிப்பும் வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கோவையிலே கொல்லப்பட்ட முருகேசன் அவர்களுடைய குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோவை தொடர் குண்டு வெடிப்பு தொடர்பான 44 வழக்குகள், 17 பிற வழக்குகளையும் சேர்த்து மொத்தம் 117 மத அடிப்படைவாத வழக்குகளை சிறப்புப் புலனாய்வுப் பிரிவு கவனித்து வருகிறது என்று இங்கே நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரிச் சம்பவங்கள், அதாவது இமாம் அலி கடத்தப்படுவது அல்லது முருகேசன் போன்றவர்கள் கொல்லப்படுவது, நேற்றைய தினம் தனி நீதிமன்றத்திலே நடந்திருக்கின்ற விரும்பத்தகாத சம்பவங்கள் ஆகியவை தொடர்ந்து நடக்காமல் இருக்க வேண்டுமானால், 1983-லே பாரதிய ஜனதாக் கட்சியினுடைய அகில இந்தியத் தலைவர் திரு. ஜனா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தாக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து கோவையிலே, மேட்டுப்பாளையத்திலே, மேலப்பாளையத்திலே, உத்தமபாளையத்திலே, மதுரையிலே, திண்டுக்கல்லிலே, திருச்சியிலே, சென்னையிலே என்று பல்வேறு இடங்களிலே நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற, தீவிரவாத குற்றங்கள் புரிந்தவர்கள் நீதிமன்றத்தின் முன்பாக வைத்து தண்டிக்கப்பட வேண்டும். இது பல ஆண்டுகளாக தள்ளிப் போடப்பட்டுக்கொண்டே போகின்ற காரணத்தினால்தான் Justice delayed is Justice denied. அது பாதிக்கப்பட்டவர்களுக்கு. ஆனால் குற்றம் செய்தவர்களுக்கு தாமதம் என்பது துணிவைத் தருகிறது. எனவே, விசேஷ நீதிமன்றம் ஒன்றை நியமித்து குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த வழக்குகள் அனைத்தும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாக வேண்டும். மேலும், தீவிரவாதிகளை நீதிமன்றத்திலே கொண்டு செல்கின்ற பாதையிலே அவர்கள் விடுவிக்கப்படாமல் இருப்பதற்காக திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பிறகு இங்கு மல்லிகையிலே மிகவும் அதிகமான பாதுகாப்பு ஏற்பாடுகளோடு அந்தக் குற்றவாளிகள் வைக்கப்பட்டதைப்போல ஒரு சிறந்த பாதுகாப்பு ஏற்பாட்டோடு சிறைச்சாலைகளிலே அவர்களை வைத்து, பக்கத்திலேயே அந்த விசேஷ நீதிமன்றத்தை அமைத்து, இதற்குத் தீர்வு காண்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரம் என்பது பலவிதமான குற்றங்கள் நடக்கும் நகரமாக மாறியுள்ளது என்று மாநகர கமிஷனர் அவர்களே ஒரு



பேட்டியிலே சொல்லியிருக்கிறார்கள். சென்னை பெசன்ட் நகர் பாரத ஸ்டேட் வங்கியிலே கொள்ளை முயற்சி நடந்திருக்கிறது. 17-4-2002 அன்று இரவு திருவொற்றியூரிலும், சேலையூரிலும் இரண்டு நகைக் கடைகளில் 35 இலட்சம் ரூபாய்க்குமேல் நகையும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. முகப்பேரிலே மூன்று வீடுகளிலே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. திருவான்மியூரிலே வங்கி அதிகாரி வீட்டிலே கொள்ளை நடந்திருக்கிறது. எழும்பூரிலே அடுக்குமாடி வீட்டில் கொள்ளை நடந்திருக்கிறது. இது தொடர்பாகச் சொல்லும்போது இப்போதெல்லாம் "திருடர்கள் நவீன டெக்னிக்குகளைக் கையாள்வதாகவும், அதுவும் சிறையிலே இருக்கும்போதே நவீன டெக்னிக்குகளைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள்" என்றும் சொல்லியிருக்கிறார். எனவே, ஒரு காவல் துறை அதிகாரியே இவ்வாறு சொல்லியிருக்கும்போது, அரசாங்கம் அதை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புதிய பாணியில் இறங்கியுள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, அதற்கான தகுந்த பயிற்சிகளும் காவல் துறையினருக்கு அளிக்கப்பட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நாகேந்திரன் என்கிற ஒரு தாதா, நாகர்கோவிலிலே தங்கி கையெழுத்துப் போட வேண்டுமென்ற நிபந்தனை ஜாமீனில் இருந்தவர் சென்னையிலே பிடிபட்டு இருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அப்படியானால், ஏதோ சில கறுப்பு ஆடுகள் இருக்கின்றன. காவல் துறையிலே தங்கள் இன்னுயிரை ஈந்தி, நாட்டு மக்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற அதிகாரிகள் நிறையபேர் இருந்தாலுங்கூட, இந்த மாதிரியான கறுப்பு ஆடுகள் காரணமாக காவல் துறைக்கும், அரசுக்கும் மிகப்பெரிய அளவிலே களங்கம் ஏற்படுகின்ற காரணத்தால் இம்மாதிரியான அதிகாரிகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முற்பகல் 10-30

இன்றைய இந்தக் காவல் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில், காவல் துறையினருக்கான பல்வேறு பயிற்சிகள் பற்றியும் அதற்காக, மத்திய, மாநில அரசுகள் என்னென்ன அளவிலே நிதி ஒதுக்கியிருக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கின்ற கடமையிலே இருக்கின்ற காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கு, காவலர்களுக்கு, அரசாங்கம்

அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும். காவல் துறையைச் சார்ந்தவர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்ற வேண்டுமென நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

1981 முதல் 1984 வரை பணியில் சேர்ந்த, அமைச்சுப் பணியாளர்களில், 350 பேருக்கு, அனைத்துப் பணி மற்றும் பண பலன்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து அளித்து வந்தபோதிலும், பதவி உயர்வுக்கு மட்டும் பணியில் சேர்ந்த நாளைக் கணக்கில் எடுக்காமல், பணி நிரந்தரம் செய்த நாளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதால், அவர்களைவிட பணியில் ஜூனியர்களாக இருப்பவர்கள்கூட பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். எனவே, இதனால் அவர்களுக்கு மன உளைச்சல் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களுக்குப் பணியில் சேர்ந்த நாளிலிருந்து கணக்கில் எடுத்து, பதவி உயர்வுக்கு அவர்களையும் தகுதி உள்ளவர்களாக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனக்கு முன்பு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் வைத்த கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கை. ஏனென்றால், 1994-95 ஆம் ஆண்டிலே தேர்ந்தெடுக்கப்பட்ட 1198 பேரில், 98 பேர்கள் மட்டும் காவல் நிலையப் பணிகளுக்கு நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, அரசு இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களையும் காவல் நிலையப் பணிகளுக்கு நியமிக்க வேண்டுமாய்க் கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறைமீது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைச் சொல்ல நான் விழைகிறேன். முதலில், எனது தொகுதியினுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலே இருக்கிற காவல் நிலையம், ஒரு தாலுகா காவல் நிலையம். சுமார் 1,57,504 மக்கள் அந்தப் பகுதியிலே வசிக்கிறார்கள். அந்தக் காவல் நிலையத்தை ஒரு நகரக் காவல் நிலையமாக உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



ஏனென்று சொன்னால், அது நகரம்; போக்குவரத்து நிறைந்த நகரம்; வியாபார ஸ்தலம். இதையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்குத் தாலுகா காவல் நிலையத்தால் முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், அங்கு ஒரு நகரக் காவல் நிலையத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருவாரூர் மாவட்டத்தில் மகளிர் காவல் நிலையம், திருவாரூரிலும், மன்னார்குடியிலும் மட்டுமே இருக்கிறது. ஆகையால், திருத்துறைப்பூண்டியில் ஒரு மகளிர் காவல் நிலையத்தை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, தீயணைப்புத் துறையைப் பொறுத்தமட்டில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே ஒரு தீயணைப்பு நிலையம், திருத்துறைப்பூண்டியிலே தொடங்கப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக, இடம் எல்லாம் வழங்கப்பட்டும்கூட, அந்தத் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் இல்லை; வாடகைக் கட்டடத்திலே அது இயங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, கோட்டூர், முத்துப்பேட்டை, கூத்தாநல்லூர் போன்ற இடங்களிலும், வாடகைக் கட்டடங்களிலேயே அந்தத் தீயணைப்பு நிலையங்கள்—Fire Service Stations இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குச் சொந்த கட்டடங்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இடம் பெறும் என்று நான் எதிர்பார்த்தேன். நான் ஏமாறவில்லை; ஆனால் கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது.

அதேபோன்று, தமிழ்நாட்டில், இன்றைக்கு 6 கோடி மக்களுடைய பல்வேறு சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களைப் பராமரிக்கின்ற துறை, நம்முடைய தமிழ்நாட்டினுடைய காவல் துறை. நான் பெருமையோடு ஒன்றைச் சொல்லலாம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டினுடைய காவல் துறை சில தொழில்நுட்பத்தோடு, சிறந்த முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் மறுப்பதற்கில்லை. 6 கோடி மக்கள் மத்தியிலே பல்வேறு சம்பவங்கள் நடக்கிறபோது, தமிழ்நாட்டு மக்கள், உடனடியாக அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று எதிர்பார்ப்பது, நம்முடைய காவல் துறையை. அந்த வகையில், இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, நம்முடைய காவல் துறையை, நவீனப்படுத்துவதற்கு, நல்ல பயிற்சி அளிப்பதற்கு, சமூக உணர்வோடு

அவர்கள் செயல்படுவதற்கு, திட்டங்களைக் குறிப்பிட்டு இருப்பதோடு மட்டுமல்லாமல், அதிகமான நிதிகளையும், அந்தத் துறைக்கு ஒதுக்கி இருப்பதை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

அதுபோன்று, சில சந்தர்ப்பங்களில், தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு, தங்களுடைய உயிர்களையும் பணயம வைத்து, திறமையாக சில காவல் துறை அதிகாரிகள், செயல்படுகிறார்கள் என்பதையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. சில திறமையான அதிகாரிகள் சிறந்த முறையிலே செயலாற்றிய போதிலும்கூட, காவல் துறையிலே தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்காமல் ஓர் அடிமைத்தனத்திலே இருக்கிறமாதிரி ஏக்க நிலையும் காவல் துறையில் உள்ளவர்களுக்கு இருக்கிறது. இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து அவர்களுடைய பொறுப்புணர்வுக்குத் தகுந்த வகையில் அவர்களுக்கு சில பதவி உயர்வுகளை அந்தத் துறையிலே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக காவல் துறையிலே இருக்கிற அந்தக் குறைபாடுகளை, அவர்களுடைய எண்ணங்களை நேரடியாகச் சொல்லமுடியாது என்கிற காரணத்தால் எங்களைப் போன்றவர்களிடத்திலே அவர்கள் சொல்கிறார்கள். அவற்றை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-35*

இன்னொன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக அண்டை மாநிலமான கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் காவல் துறையினர் சங்கம் வைத்துக்கொள்வதற்கான அனுமதி சில சட்ட திட்டங்களுக்குட்பட்டு வழங்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டிலேயும் நீங்கள் இந்தக் காவல் துறையினர் சங்கம் வைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையிலே பணியாற்றக்கூடிய அந்த அமைச்சுப் பணியாளர்களுடைய கோரிக்கைகள்பற்றி நான் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவற்றை அந்தத் துறை இன்றைய தினம் நிதிநிலையை ஒரு காரணமாகக் காட்டி நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது.



அவர்கள்கூட நிதிநிலையினுடைய நிலைமையை உணர்ந்து, எங்களுக்கு நிதி ஒரு பெரிய பிரச்சினை கிடையாது; கல்வி நிலையிலும், பணி நிலையிலும் நாங்கள் செய்கின்ற சேவைகளுக்குத் தகுந்த பதவி உயர்வு கிடைக்க வேண்டும்; அந்த இடத்தில் அவர்கள் இடம்பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதைத் தாங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் குறிப்பிட்டது போன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே மன்றத்திலே, முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் 1994-95 ஆம் ஆண்டிலே தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் உதவி ஆய்வாளர்கள், இன்றைக்கு சிறப்புக் காவல் படையிலே நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பவர்களை காவல் நிலையங்களில் ஆய்வாளர்களாக நியமித்து இருக்கிறார்கள். அதனாலே, இதிலே இருக்கக்கூடிய வேறுபாடுகளை, வித்தியாசங்களைப் போக்கி, இவர்களும் அந்த முன்னுரிமையிலே இடம்பெற வேண்டும் என்று தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்றுதான் இளநிலை காவல் ஊழியர்கள், 10 ஆம் வகுப்பு படித்தவர்கள், 24 மணி நேரமும் நாங்கள் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்; ஆனால் எங்களுக்கு, இளநிலை காவலர் ஒருவருக்கு ரூ.3,050 சம்பளமாகவும், ஒருவருக்கு ரூ.3,200 சம்பளமாகவும் இப்படி வேறுபாடு இருக்கிறது. கல்வி நிலை, பணி நிலை எங்களுக்கு ஒன்றாகத்தான் இருக்கிறது. எனவே, இந்த வித்தியாசம் ஏன் என்ற ஒரு வினாவை அவர்கள் கிளப்பி இருக்கிறார்கள். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் ஒரு சிறந்த ஆட்சி நடைபெற வேண்டும் என்பதிலே தாங்கள் உறுதியோடு இருக்கிறீர்கள்; நாங்கள் நம்புகிறோம்; அதுபற்றிப் பிரச்சினை கிடையாது. ஆனால், இன்றைய தினத்திலே தொழிற் சங்கங்களை, அரசியல் கட்சிகளைப் போன்று இயக்கங்களை நடத்தக் கூடியவர்களை, எல்லாம் காவல் துறை முதலிலே அனுமதிக்க வேண்டும் இன்றையதினம் தொழிற்சங்கங்கள் கோர்ட்டிலே அனுமதி பெற்றுத்தான் ஊர்வலங்களை, தங்களுடைய கோரிக்கைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய ஒரு கட்டாய

இருக்கிறது. காவல் துறை தன்னுடைய பிடிவாதத்தை விடுத்து, தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளைப் போன்று இயக்கம் நடத்துகிறபோது அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு சம்பவங்கள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. சமீபத்தில் வாரப் பத்திரிகை ஒன்றிலேகூட ஒரு தலையங்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னால், தந்து இருக்கிறார்கள். 'சமீபகாலமாக தினந்தோறும் நடக்கின்ற தொடர் கொலைகள், கொள்ளைகளால் சென்னை மக்கள் பீதி அடைந்து இருக்கிறார்கள் என்றும் மனித நடமாட்டம் அதிகமாக இருக்கின்ற இதயம் போன்ற பகுதியாக இருக்கக்கூடிய வீடுகளிலேயும் கடைகளிலேயும்கூட பேதமில்லாமல் புகுந்து கொள்ளையர்கள் தங்களுடைய கைவரிசைகளைக் காட்டிக்கொண்டு இருப்பதாகவும், மக்கள் வெலவெலத்துப் போய் இருப்பதாகவும், சமூகவிரோதக் கும்பலுக்கு காவல் துறையினர்மீது பயம் இல்லாமல் போவதற்கு ஒருவிதமான அரசியல்வாதிகள் காரணமாக அமைந்து இருக்கிறார்கள் என்றும், தங்கள் பாதுகாப்புக்கு சமூக விரோதிகளைப் பயன்படுத்தி, அவர்களை காவல் துறையினர் பிடியிலிருந்து காப்பாற்றி விடுகிறார்கள் என்றும், ஆகையால் அரசியல்வாதிகள் இதனால் என்னென்னவோ செய்துவிடலாம் என்று மிக மிதப்போடு அவர்கள் நடந்துகொள்கிறார்கள் என்றும், ஆகவே இந்தக் காவல் துறையைத் தனது நேரடியான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷமிகளை வட்டமிட்டுக் கொண்டிருப்பவர்களை முறியடிக்க உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்றும்', ஒரு பத்திரிகையினுடைய தலையங்கத்தில் அன்றையதினத்திலே எழுதப்பட்டிருக்கிறது. அப்படி அந்தப் பத்திரிகை மிக நம்பிக்கையோடு எழுதியிருக்கிறது. அந்த வகையிலே அதை நீங்கள் செயல்படுத்த வேண்டும் என்பதிலேயும் எங்களுக்கு கருத்து உடன்பாடு இருக்கிறது.

முற்பகல் 10-40

ஒன்றை நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பெண்களுக்கு எதிரான குற்றங்கள். விழுப்புரத்திலே ரீட்டாமேரி அவர்களுடைய



கற்பழிப்புக் குற்றம். 6-12-2001 அன்று அவரால் புகார் கொடுக்கப்பட்டு, 8-12-2001 அன்று அது விசாரணைக்கு வந்து 16-12-2001-லேயே கைது செய்யப்பட்டு நம்முடைய காவல் துறையால் திறமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் மூலமாக அந்தச் சகோதரிக்கு 5 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது பாராட்டுக்குரியது; வரவேற்க வேண்டியது. குறுகிய நாட்களுக்குள் ஒரு சம்பவத்தை கண்டுபிடித்திருப்பதை வரவேற்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று இன்னொன்றையும் உங்களுடைய இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பதை நான் கூற விரும்புகிறேன். 2000-2001, 2001-2002, கூட்டுக் கொள்ளைகள், ஆதாயத்திற்காக கொலை செய்யப்பட்டவை இந்தக் குறிப்பிலே இருக்கின்றன. கூட்டுக் கொள்ளைகள் எடுத்துக்கொண்டால் 158 நடந்திருக்கின்றன. 105 கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே ஆதாயத்திற்காக 2002-லே நடந்திருக்கிற கொலைகள் 656. கண்டுபிடிக்கப்பட்டிருப்பவை 458. இப்படி நடந்து இருக்கின்றன என்று சொன்னால் ஆதாயத்திற்காக கொலைகளை தமிழகத்திலே கொலையாளிகள் நடத்துகிறார்கள் என்று சொன்னால், எந்த அளவிற்கு தைரியம் அவர்களுக்கு வந்திருக்கிறது. என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் பார்க்க வேண்டும். குற்றம் குறைந்துவிட்டது என்று சொல்லி நாம் எப்போதுமே இதிலிருந்து விலகிவிட முடியாது. எத்தனை கொலைகள்? ஆதாயத்திற்காக கொலை செய்யப்பட்டவை 656, ஓராண்டிலே நடந்திருக்கின்றன. இது மிகக் கொடுமையான செயல். மக்கள் அச்சப்படமாட்டார்கள் என்று சொல்வதற்கு இடமே இல்லாத வகையில் அமைந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறையை நவீனப்படுத்துகிறபோது நவீன கொள்ளையர்களும் தமிழகத்திலே வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொள்ளைகள் 94 நடந்திருக்கின்றன; 2001-ல் இதே கூட்டுக் கொள்ளைகள் 154 என்று தொடருகின்றன. ஆதாயக் கொலைகள் 671. அந்தமாதிரி கொள்ளைகள் 78. இதிலிருந்து காவல் துறை ஒரு கட்டத்திலே கட்டுப்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆண்டுதோறும் இந்தப் பட்டியல்கள்தான் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்கிற நிலையிலிருந்து மாறுவதற்கு தாங்கள் முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயிரம் நலத் திட்டங்கள் வந்தபோதும் கூட இதுபோன்ற சம்பவங்கள் தமிழகத்திலே நடந்தால் ஒரு வினாடியிலே அவை மூடி மறைந்துவிடும். மக்கள் நல்லதை செய்வதைக்கூடப் பேசமாட்டார்கள். நாட்டில் நடக்கிற அசம்பாவிதங்களையும் அட்டூழியங்களையும்தான் முன்நின்று பேசுவார்கள். அவைதான் மக்களுடைய மனதிலே பதிகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் இவை நடைபெறாமல் பாதுகாப்பதற்கு தாங்கள் காவல் துறையை இன்னும் நவீனப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர்களுக்கு வன்கொடுமைச் சட்டம். இன்றைக்குத் தமிழகத்திலே அத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்தி இருந்தபோதிலுங்கட காவல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற 191 கிராமங்களில் பதட்டமான சூழ்நிலை இன்றும் இருக்கிறது என்கிற நிலையிருக்கிறது. மிகவும் பதட்டமான சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆகையால் ஆண்டுதோறும் 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்காக வழங்கப்பட்டிருக்கிற நிதி என்பது அவர்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கலாம். ஆனால் நிரந்தரமான தீர்வு இந்த, வன்கொடுமையிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்யலாம் என்று பார்க்க வேண்டும். அரசு சொல்லக்கூடிய, அதிகாரிகள் சொல்லக்கூடிய, காவல் துறை சொல்லக்கூடிய இந்த 191 கிராமங்களில் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று பார்க்க வேண்டும். அதுதான், அதனுடைய தொடர்ச்சிதான் இன்றைக்கு கீரிப்பட்டியிலும், பாப்பாபட்டியிலுமே இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-45*

அரசே, தன்னுடைய கொள்கை நிலையில் இருந்து பின் வாங்கக்கூடிய அளவிற்கு, அவர்களிடமிருந்து பின்வாங்கிவிடுவோமோ என்ற ஓர் அச்ச நிலை வந்து இருக்கிறது. ஓர் உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த முடிகிறது. ஓர் ஊராட்சி மன்றத்தினுடைய உறுப்பினர் தேர்தலை நடத்த முடியவில்லை. அதற்குத் தனி அதிகாரி நியமிக்கிறோம் என்று சொன்னால் இதற்கு என்ன பொருள்? நாட்டு மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட அரிஜன மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை





என்கிற ஒரு நிலை இன்றைக்கு வந்து இருக்கிறது. இதில் ஓர் அதிரடி நடவடிக்கையை நீங்கள் எடுத்து இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் நம்முடைய காவல் துறையை வைத்துக்கொண்டு அங்கேயே நின்று மக்கள் அச்சம் இல்லாமல் தங்களுடைய ஜனநாயக உரிமையை அவர்கள் நிலைநாட்டக்கூடிய அளவிற்கு மக்கள் வாக்களிக்கக் கூடிய விதத்தில் நீங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, வாக்களிக்கப்பட்டது என்று சொன்னால் தமிழ்நாட்டு மக்களுக்கு, தலித் மக்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு நம்பிக்கை தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்க முடியும். இந்த சமூக விரோதிகளை தடுத்து நிறுத்தியிருக்க முடியும். மாறாக நாம் ஒரு தனி அதிகாரி நியமனம் என்பதை இன்றைக்கு கொண்டு வந்து, அவர்களை நியமித்து இருப்பது என்பது சரியல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்னும் பார்த்தால் உயிர் இழப்பிலே கூட இன்றைக்கு தமிழ்நாட்டிலே 2001-ல் மட்டும் 21 பேர் இறந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து இருக்கின்றன. அதே போன்று ஆதாயத்திற்காகக் கொலை............ (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள். இன்னும் இருவர் பேசி, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது இந்தக் கொள்கைக் குறிப்பை விட்டு அந்தப் பக்கம் போகவில்லை. அரசினுடைய மானியக் கோரிக்கையிலேதான் நான் பேசுகிறேன். அதேபோல ஆதாயத்திற்காகக் கொலை செய்யப்பட்டவர்கள் தமிழகத்திலே 80 பேர். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே கொலை நடப்பதைக்கூட அவர்கள் அனுமதித்தார்கள். ஆனால் வழிப்பறிக் கொள்ளையை அவர்கள் அனுமதிக்கவேயில்லை. அது இதைவிட கொடூரமான குற்றமாக பிரிட்டிஷ் காலத்திலேயே இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டு இருக்கிறது. அநேகமாக, காவல் துறை மானியத்திலே அதிகமாக எடுத்துக் கொண்டுப் பேசியது என்பது வழிப்பறிக் கொள்ளையைப் பற்றித்தான் பேசியிருக்கிறார்கள். அப்படி இன்றைக்கு வழிப்பறிக் கொள்ளைகள் என்பது 166 நடந்திருக்கின்றன. 169 கொள்ளைகள் நடந்து இருக்கின்றன. விடு புகுந்து திருட்டு 5,922 நடந்து இருக்கின்றன. எப்படி தமிழக மக்களிடத்திலே ஒரு நம்பிக்கை ஏற்படும். 6 கோடி மக்கள் வாழலாம்.

ஆனால் களவுகள் போன்ற 16,000 சம்பவங்கள் தமிழகத்திலே ஒரே ஆண்டில் நடைபெற்று இருக்கின்றன என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மேலும் 11,000 கண்டுபிடிக்காதவை என்று சொல்லி இருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய காவல் துறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் கவனம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது.

இன்றைக்கு நான் திருப்பூர் சம்பவத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கவன ஈர்ப்பாகக் கொண்டு வந்தேன், விவாதிப்பதற்கு நேரம் இல்லை என்று எங்களுக்குப் பதில் வந்து இருக்கிறது. 6-2-2002 அன்று ஒரு தொழில் அதிபர் வி. பழனிசாமி, அவர் ஈரோட்டில் இருந்து கோபிசெட்டிப்பாளையம் போய்விட்டு திரும்பி அங்கிருந்து வருகின்றார். அவரை கடத்தல்காரர்கள் கடத்திப் போகிறார்கள். கடத்திப் போய் அவரை காட்டில் வைத்திருந்து, அவர் உடம்பிலே வெடிகுண்டைக் கட்டி இதை யாரிடத்திலும் சொல்லக் கூடாது என்று சொல்லி அந்தக் கடத்தல்காரர்கள் அவரை மிரட்டி, வீட்டில் இருக்கிற சாவியை, பணத்தை பாங்கிலே இருக்கிற பணத்தை எடுத்து வரச் சொல்லி, இப்படி 35 இலட்சம் ரூபாயை அவர்கள் பறித்துச் சென்று இருக்கிறார்கள். சில பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் முக்கியமான ஆட்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை. அந்தக் குடும்பமே அச்சத்தோடு இருந்துகொண்டு இருக்கிறது. இது பகலிலே நடக்கிறது. இரவிலே நடக்கவில்லை. இது ஒரு மோசமான சம்பவம். இன்னும் அந்த பிடிபடாத நபர்களைக் கண்டு அந்த பழனிசாமி இன்றைக்கு மிகவும் அச்சத்தோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறார். திருப்பூர் நகரம் என்பது ஒரு பெரிய தொழில் நகரம். பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு தொழில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. வியாபாரிகளிடத்திலே இன்னும் ஓர் அச்சம் இருக்கிறது. இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈரோட்டில் இருக்கக்கூடிய திங்களூரிலே 126 பேர் மீது வழக்குகள் போட்டார்கள். இப்பொழுது அனைவரும் கோர்ட்டில் இருந்து வெளியே வந்துவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் எல்லாம் போய்கூட அவர்களுக்கு ஆறுதல் சொல்லி வந்து இருக்கிறார்கள். அப்போது ஒரு குழந்தை அழுதிருக்கிறது. என்னுடைய தாயாரும் உள்ளே இருக்கிறார். தந்தையும் உள்ளே இருக்கிறார். நான் அனாதையாக இருக்கிறேன். எனவே



உடனடியாக அவர்களை விடுவிக்க வேண்டுமென்று சொல்லியபோதுகூட அமைச்சர்கள் எல்லாம் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே யாருக்கும் எந்த ஒரு பாதகமும் வராது, கண்டிப்பாக விடுவிப்பார்கள் என்று எல்லாம் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

அதேபோன்று ஒரு பெண்ணுக்குத் திருமணம் நிறுத்தப் பட்டிருக்கிறது. திருமணமாக வேண்டிய ஒரு பெண்ணையும் அழைத்துக் கொண்டுபோய் அந்த வழக்கிலே சேர்த்து விட்டார்கள். திருமணமே நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவம் எப்படி நடந்தது? காவல் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். ஆனால், இந்தச் சம்பவம் நடப்பதற்கு என்ன காரணம் என்று சொன்னால், ஒரு சிறிய முன் விசாரணைகூட இல்லாமல், காவல் துறை அதிகாரிகள் நடந்து கொண்டதன் விளைவாக, பொது மக்களே சேர்ந்து வந்து, காவல் நிலையத்திற்கு முன்னால் தங்களுடைய மறியலைச் செய்ய வேண்டிய நிலைமைகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். பொது மக்கள் குற்றவாளிகளுக்கு பின் போவதே இல்லை. காவல் துறை சரியாக நடவடிக்கை எடுக்காத போதுதான், காவல் துறை தவறான நடவடிக்கை எடுக்கிற போதுதான், பொது மக்கள் தவறு செய்பவர்களைப் பின் தொடருகிற வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட அதிகாரிகளை இட மாற்றம் மட்டும் செய்தால் போதாது. முற்றிலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, பதவி விலக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், அந்தப் பணியிலே இருக்கக்கூடியவர்களுக்கு அச்ச உணர்வு வராது. கடமை உணர்வு வராது. அவர்கள் இஷ்டம்போல தாங்கள் அதிகாரத்தை கையிலே வைத்திருக்கிறோம் என்பதால் எந்த நடவடிக்கைகளிலேயும் ஈடுபடுவார்கள். அப்படிப்பட்டவர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று எனக்கு முன்னால் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அது என்னவென்று சொன்னால், நம்முடைய சென்னை நகர காவல் துறையினுடைய Commissioner ரொம்ப நல்ல அதிகாரி. ஒரு திறமையான அதிகாரி. அதிலே குற்றம் சொல்லவே முடியாது. சென்னை நகருக்குப் பொருத்தமான அதிகாரி. அவர்கள்தான் சமீபத்திலே பத்திரிகை நிருபர்களைப் பார்த்து பேட்டி கொடுக்கிறார்.

சென்னை நகரத்திலே இருக்கிற மக்கள் தங்களுடைய நகைகளை, பணத்தை ஜாக்கிரதையாக, பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு வங்கிகளில், வங்கி locker-களிலே கொண்டுபோய் வைத்து பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார். ஆனால், எந்த வங்கியை நம்பிப் போவது? சென்னையிலே ஒரு வங்கியிலே காலையிலேயே கொள்ளையடிக்கின்றார்கள். கொலையும் செய்துவிட்டு வருகின்றார்கள். எந்த வங்கியிலே, எப்படி பாதுகாப்பைக் கொடுப்பது?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற வங்கியில் கொலைதான் நடந்ததே தவிர, கொள்ளை நடக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். கொள்ளை நடக்கவில்லை; ஆனால் கொலை நடந்திருக்கிறது. அதற்காக, ஒரு காவல் துறை அதிகாரியே பொது மக்களிடம், உங்களுடைய சொத்துக்களை உங்கள் வீட்டிலே வைத்திருக்க வேண்டாம், வங்கிகளிலே கொண்டுபோய் வையுங்கள் என்று சொல்வது சரிதானா? அப்படியென்று சொன்னால், காவல் துறையினுடைய செயல்பாடு என்ன? இதிலே என்ன பாதுகாப்பு இருக்கிறது என்பதைத்தான் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று, இன்னொன்றைச் சொல்கிறார். இதுபோன்ற சதிகள் சென்னையிலே தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றன. இரவு, பகலாக காவல் துறையிலே இவற்றைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலுங்கூட, இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறுவதற்கு மத்திய சிறைச்சாலையில் இருந்தே இதற்கான ஆலோசனைகளைப் பெற்று, அங்கே இருந்தே சதித் திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பதாகவும் அவர் சொல்கிறார். அப்போது சிறைக்கூடம் என்பது நாட்டிலே கொள்ளையடிப்பதற்கான திட்டமிடுகிற கூடாரமா என்பதை காவல் துறையினர் உணர வேண்டும். இப்படி, பொறுப்பான அதிகாரிகளே பகிரங்கமாகச் சொல்கிறபோது, நாட்டு மக்களிடத்திலே காவல் துறை மீது எப்படி நம்பிக்கை வரும்? எப்படி அவர்களை அணுக முடியும் என்பதைத்தான் நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் கொஞ்சம்தானே பேசியிருக்கிறேன். முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகப் பேசி முடித்து விடுகிறேன்.

நிதி நிறுவனங்கள் மோசடி. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நிதி நிறுவன மோசடி என்பது பெரிய அளவுக்கு நடந்திருக்கிறது. தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தனி கமிஷன்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அதை உண்மையிலேயே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், இதிலே பார்ப்போம் என்று சொன்னால், இன்றைய தினத்திலே சுமார் 2000 கோடிக்கு மேலே நிதி நிறுவன மோசடி நடைபெற்றிருக்கிறது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு காவல் துறை அதிகாரிகள், இன்னும் சொல்லப்போனால், C.B.C.I.D., Q Branch எல்லாம் இருக்கின்றன. Q Branch, C.B.C.I.D. எல்லாம் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்? இதிலேயே அவர்களும் தங்களுடைய பணத்தை கவர்ச்சிக்காகக் கொண்டு போய், பணத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மகளைத் திருமணம் கட்டிக் கொடுக்க வேண்டும், வீடு கட்ட வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் அரசாங்கத்திலே வங்கி கிடையாதா? நிதி நிறுவனத்திலே கொண்டு போய் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். யாரை நம்முடைய காவல் துறை பிடிக்கிறது? பீடி பிடிக்கிறவனை, Bus Stand-ல் நிற்கிறவனைப் பிடிக்கிறது, பான் பராக் போடுகிறவனைப் பிடிக்கிறது. இது மாதிரி சில்லறைத்தனமான, சில குற்றங்களைச் செய்கிறவர்களை உடனே பிடித்துக்கொண்டு போய் அதிகாரிகள், Court-லே நிறுத்துகிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் மக்களுடைய வரிப் பணத்தை, நிதி நிறுவனங்கள் கொள்ளை அடிக்கின்றார்கள். அதிகாரிகளுடைய துணையோடு இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன. இதெல்லாம் மக்களுடைய வரிப் பணம் இல்லையா? அது சாதாரணமா? இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல்

இருப்பதற்கு நம்முடைய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-55*

சென்ற ஆண்டுகளைவிட குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்காமல் பாதுகாத்துக்கொள்வதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இறுதியாகக் கேட்டுக்கொள்வது எதிர்காலத்திலே இந்த அரசு, சிறந்த அரசாக நாட்டு மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றும்போது, இதுபோன்ற சிறு குற்றங்களை மூடி மறைக்காமல் இருக்க வேண்டும். கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி போன்ற அன்றாட நிகழ்ச்சிகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். நீதிமன்ற வளாகத்திலேயும், காவல் துறை வளாகத்திலேயும் அருகிலேயும்கூட இதுபோன்ற கொலை, கொள்ளைகள் நடைபெறாமல் பாதுகாப்பதில் நம்முடைய அரசு எதிர்காலத்திலே நடவடிக்கையை எடுக்க வேண்டும். பணம் பறிக்கின்ற ரௌடிகளையும், தாதாக்களையும் நீங்கள் தடுத்து நிறுத்துவதற்கு இரும்புக் கரம் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். கட்டப் பஞ்சாயத்து பேசக்கூடியவர்கள், பணம் பறிக்கின்றவர்கள் குறுகிய நாளிலே எந்தவொரு தொழிலும் இல்லாது பல கோடிக்கு அதிபதியாக இருப்பவர்களுடைய சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான், இந்தக் குற்றவாளிகளைத் தடுக்க முடியும். பொதுமக்கள் சார்ந்த வன்செயல்கள் ஒருபுறம், மறுபுறத்திலே அரசியல் சார்ந்த வன்முறையாளர்கள் பொதுச் சொத்துக்களை நாசம் விளைவிக்கிறார்கள். அரசியல்வாதிகள் துணையோடு ஆற்று மணலை அள்ளுகிறார்கள், கல் குவாரிகளை கொள்ளையடித்துப் போகிறார்கள், வனப் பகுதிகளில் மரங்களை வெட்டியெடுத்து கொள்ளையடித்துப் போகிறார்கள். இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் பாதுகாக்க காவல் துறை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, பேசுவதற்கு அனுமதி தந்ததற்கு நன்றி கூறி வார்த்தைகளை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, அதிலும் குறிப்பாக தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையைச் சீரமைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பல நடவடிக்கைகளை அறிவித்து இருக்கிறார்கள். பல திட்டங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அந்தத் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு நாங்கள் ஆதரிக்கிறோம். ஆனால், ஒன்றை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய காவல் துறையின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே 123 ஆம் பக்கத்திலே 'காவல் துறையில் குறிப்பாக கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் பொது மக்களிடம் இரக்கமின்றி நடந்துகொள்கிறார்கள் என்ற ஒரு கருத்து உள்ளது' என்று இருக்கிறது. இதுதான் இன்று நாட்டிலே நிலவுகிற ஒரு நிலை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில், சமூகப் பாதுகாப்பு என்பது அவர்களுடைய பிரதான கடமை என்று நான் கருதுகிறேன். இன்று ஏழை மக்களின் பாதுகாப்பு என்பது, சட்டம் ஒழுங்கானாலும் சரி, அல்லது கிரிமினல் குற்றங்களானாலும் சரி, பாதிக்கப்படுகின்றவர்கள் ஏழை எளிய மக்கள். அவர்களைப் பாதுகாப்பதற்கு தகுந்த நடவடிக்கையை காவல் துறை எடுக்கிறதா? அதுதான் நாம் பிரதானமாகப் பார்க்க வேண்டியது. இன்று அந்த முறையிலே மக்களுக்கும், காவல் துறைக்கும் இடையிலே ஒரு harmonious relationship இல்லையென்பதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான சில எடுத்துக்காட்டுகளையும் சொல்வதற்கு என்னை அனுமதிக்க வேண்டும். நான் ஒன்றைச் சொல்கிறேன். ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது என்பது, இந்திய நாட்டினுடைய அரசமைப்பு சட்டத்தினுடைய மிக முக்கியமான அம்சம். அதனால்தான் அரசமைப்பு சட்டத்திலேயே சில Fundamental Rights இந்த நாட்டிலே இருக்கிற மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதை இன்றைக்கு மீறுவது என்ற இடத்திலே காவல் துறை முனைப்பாக இருந்து கொண்டிருக்கிறதா என்ற நியாயமான ஐயப்பாடுகள் எங்களுக்கு இருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே இருந்த நேரத்திலே நான் இந்தச் சட்டப் பேரவையிலே சொல்லியிருக்கிறேன். கூட்டம் நடத்துவதற்கு அனுமதிப்பது இல்லை.

பிறகு ஊர்வலம் நடத்துவதற்கு அனுமதிப்பது இல்லை. மக்கள் சந்தடி இல்லாத கோயம்பேடு இடம், அதற்கு அந்தப் பக்கத்திலே கொண்டுபோய் கூட்டத்தை நடத்து, ஊர்வலத்தை நடத்து என்றெல்லாம் சொல்லப்பட்டது. அதே நிலை இப்போதும் பின்பற்றப்படுகிறது என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

நான் ஒன்றை இந்த நேரத்திலே இங்கே சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே மக்களுடைய குறைகளை, அவர்களுடைய குமுறல்களை அரசுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் ஊர்வலங்கள் நடத்துவது, கூட்டங்கள் நடத்துவது, தர்ணா போராட்டம் நடத்துவது அதே போன்று சத்தியாக்கிரகங்கள் நடத்துவது. ஆனால் இதையெல்லாம் இன்றைக்குக் காவல் துறை மறுக்கிறது. இதையெல்லாம் நடத்துவதற்கு அனுமதிக்கப்படாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்கிறேன். வேலூரிலேயிருந்து எனக்கு நேற்றைக்குத் தொலைபேசியிலே ஒரு தோழர் பேசினார். மே தினத்திற்கு பொதுக் கூட்டத்திற்கு அனுமதி கேட்டால், மறுக்கப்படுகிறது. 'கோர்ட்டிலே போய்க் கேஸ் போடு, என்று ஒரு போலீஸ் அதிகாரி சொன்னார் என்று சொன்னார். நான் எந்த அதிகாரி என்று கேட்கவில்லை. இதுதான் காவல் துறையினுடைய கொள்கையா?

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காவல் துறை பாரபட்சமற்ற முறையிலே நடந்துகொள்ள வேண்டும். அது இன்றைக்கு இல்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டை நான் சொல்கிறேன். அதாவது, 11ஆம் தேதி - அதாவது ஏப்ரல் மாதம் 11ஆம் தேதி, பல்லவன் சாலையில் இருக்கிற பல்லவன் மாளிகைக்கு முன்னாலே அலுவலகத்திற்கு முன்னாலே ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு சி.ஐ.டி.யு.-யோடு இணைக்கப்பட்டிருக்கிற போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் அனுமதி கேட்கிறது. ஆனால் காவல் துறை ஆணையர் அதை மறுக்கிறார். ஆனால் 12-4-2002 அன்று அதே இடத்திலே அண்ணா தொழிற்சங்கப் பேரவைக்குக் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இது என்ன நியாயம்? இன்று நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 18-4-2002 அன்று ஓர் ஊர்வலம் நடத்துவதற்கு அனுமதி கோரியது, போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம். ஆனால் காவல் துறை அதிகாரி அவர்கள் அதை மறுத்தார். அதுசம்பந்தமாக டாக்குமென்ட்டுகளும் நான்


D V211, 31 P02 P02.24.2

வைத்திருக்கிறேன். (ஒரு புத்தகத்தைக் காண்பித்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊர்வலத்துக்கு இவ்வளவு பெரிய டாக்குமென்ட்டா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Pardon.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊர்வலத்துக்கு இவ்வளவு பெரிய டாக்குமென்ட்டா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இவ்வளவு பெரிய Document. அதுதான் சொல்கிறேன். அதாவது அனுமதிக்காக வேண்டி ஒரு நான்கைந்து தடவைகள் சங்கக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் போக்குவரத்து—அந்தக் கடிதப் போக்குவரத்து—நடந்திருக்கிறது. (சிரிப்பு) அதற்குப் பிறகு, அது என்ன சுட்டிக்காட்டுகிறது என்றால், உச்ச நீதிமன்றம் இப்படிக் கூட்டங்களை நடத்தக்கூடாது, ஊர்வலம் நடத்தக்கூடாது என்று தடை செய்திருக்கிறது. அதன்மேல் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் High Court-க்குப் போய் High Court-லே—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும்—Writ Petition No. 13042 of 2002 அதிலே ஒரு தீர்ப்பை நீதிபதி கொடுத்திருக்கிறார். அதில் என்ன சொல்கிறார்?

"Therefore, there is no justification at all to deny the right of the Members of the Petitioner-Federation to take out a peaceful procession for a limited time" நான் சொல்லவில்லை. High Court Judge சொல்வது. (சிரிப்பு)

This Court—Again he says—

"This Court is also of the considered view that procession could be permitted, but subject to regulating it with such conditions as it may not obstruct the traffic and normal life." இதுதான் எங்களுடைய பணிவான கருத்து. இந்த Police Act -32-லே இந்த மாதிரி ஊர்வலங்களை regulate பண்ணுவதற்கு, மீட்டிங்குகளை regulate பண்ணுவதற்கு காவல் துறைக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதை வைத்து regulate பண்ணுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர இப்படி எடுத்த எடுப்பிலே அதை மறுப்பது என்பது சரியல்ல.

நான் ஒன்றை மேலும் சுட்டிக்காட்ட விரும்புவது - இந்த ஆணையின் அடிப்படையிலே ஊர்[illegible]ட்டது.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226376
சென்னை-600 008

பத்திரிகையில் report பண்ணப்பட்டிருக்கிறது. பத்தாயிரத்திற்கு அதிகமான ஆட்கள் அந்த ஊர்வலத்திலே கலந்து கொண்டார்கள். எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லையே. எந்தவிதமான குறைகளும் அதிலே ஏற்பட்டது என்று காவல் துறைக்குக்கூட கேஸ் கிடையாது. ஆகவே நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படி முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமே தவிர, இப்படி மே தினத்திற்குக்கூட, கூட்டம் நடத்துவதற்கும், ஊர்வலம் நடத்துவதற்கும் அனுமதி மறுக்கக்கூடாது. நான் பத்திரிகையிலே படித்தேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட மே தினத்தை கொண்டாடப் போவதாகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கலந்துகொள்ளப் போகிறதாகவும்கூட படித்தேன். மகிழ்ச்சி. ஆனால் மே தினத்திற்கு, அன்றைக்குக்கூட ஊர்வலம் நடத்த முடியாது, கூட்டம் நடத்த் முடியாது என்ற நிலையை காவல் துறை எடுப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்று நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

அடுத்து நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, மத்திய அரசு ஒரு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பத்திரிகைகளிலே எல்லாம் வந்தது. நம்முடைய அவை முன்னவர்கூட அந்த அறிக்கையினுடைய பல அம்சங்களை விம்ர்சனம் பண்ணினார்கள். நாங்கள் விமர்சனம் பண்ணுவதற்கு ஊர்வலம் நடத்துகிற நேரத்திலே இராஜபாளையம் என்ற இடத்திலே காவல் துறை அங்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் மேலே தடியடி நடத்தி குருசாமி அதேபோல சுகந்தி என்ற இரண்டு பேர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சுகந்தி கடுமையான தாக்குதலுக்கு இரையாகி bleeding வந்ததற்குப் பிறகுகூட அவர் காலா காலத்திலே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்படவில்லை. இப்படி எல்லாம் மனிதாபிமானமற்ற முறையில் காவல் துறை நடந்துகொள்ளக் கூடாது. நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஈரோடு திங்களூர் விஷயத்தைப் பற்றிச் சொன்னார். காவல் துறையினுடைய தவறான நடவடிக்கையின் காரணமாக ஏற்பட்டது. மேல் அதிகாரிகள் வந்து பார்த்து அதற்கு நியாயம் வழங்க வேண்டுமா, வேண்டாமா? கீழே இருக்கின்ற காவல் துறையைச் சார்ந்தவர்கள் செய்திருக்கிற தவறுக்கு அவர்கள் உடந்தையாக இருக்கின்ற நிலைதான் அங்கே ஏற்பட்டது.



இதுதான் இன்றைக்குப் பல இடங்களிலே பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது ஈரோட்டில் நடந்த நிகழ்ச்சி போன்ற ஏராளமான நிகழ்ச்சிகளைச் சொல்ல முடியும். நேரமில்லாத காரணத்தினாலே நான் அந்த விஷயத்திற்கு வரவில்லை. இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் விக்கிரமசிங்கபுரத்திலே காவல் நிலையத்திலே உதவி ஆய்வாளர் சுரேஷ்குமார் என்பவரால் நடத்தப்பட்ட சில அராஜக நடவடிக்கைகள் சம்பந்தமாக மேல் அதிகாரிகளுக்கு மனு கொடுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்கே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினால் அவர்கள் மேலே பாய்கிறது காவல் துறை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் மேல் அதிகாரிகளுக்கு முறையிட்டால் அவர்களாவது நியாயம் வழங்க வேண்டும் இல்லையா? அதுவும் மறுக்கப்பட்டால் பிறகு என்ன வழி? ஆகவே இப்படிப்பட்ட போக்கு இப்போது காவல் துறையிலே இருந்து கொண்டிருக்கிறது.

ஏராளமான போராட்டங்கள், நெல் கொள்முதலுக்காக தஞ்சாவூரிலே விவசாயிகள் ஒரு போராட்டம் நடத்தினார்கள். அதிலே தடியடி நடத்தினார்கள். அதேபோல Law College மாணவர்கள் ஒரு போராட்டம் நடத்தினார்கள். அதிலே தடியடி. நான் என்ன சொல்ல விரும்புகின்றேன் என்றால் அதையெல்லாம் விசாரித்து குற்றவாளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இன்னொன்று நான் சுட்டிக்காட்ட விரும்புவது, காவலர்களுக்கு இடையிலேயே குமுறல்கள் இருக்கின்றன. இந்தக் குமுறல்களை மக்கள்மீது திணிக்கிறார்களோ என்று எனக்குச் சந்தேகம். ஏன் என்று கேட்டால் அதிகாரிகள் மேலே திணிக்க முடியாது. அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே orderly system என்பதை நிறுத்தினார்கள். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்கூட அன்றைக்குச் சபையில் அமைச்சராக இருந்தார். உங்களுக்குத் தெரியும். ஒரு பெரிய விவாதம் நடந்தது. அதைத் தொடர்ந்து orderly system நிறுத்தப்பட்டது. ஆனால் அது இப்போது மீண்டும் வந்திருக்கிறது. அதன் காரணமாக என்ன ஏற்படுகிறது என்றால் காவல் நிலையங்களில் தேவையான கான்ஸ்டபிள்கள் இல்லை. கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அனுமதிக்கப்பட்ட போஸ்ட்டில் 10

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2002 ஏப்ரல் 25

ஆயிரம் post vacant அப்படி என்றால் இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதற்குத் தேவையான காவலாளிகள் இல்லை. ஆகவே காவல் துறை simple-ஆக என்ன செய்கிறார்கள். 'நீ ஊர்வலம் நடத்தாதே, நீ கூட்டம் நடத்தாதே, நீ தர்ணா நடத்தாதே' என்கிறார்கள். இது ஜனநாயக உரிமைகளை மறுக்கின்ற ஒன்று. இதற்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இடம் கொடுக்கக்கூடாது என்று நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏராளமான தர்ணா இருந்தால், பந்த் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் மீதெல்லாம் உண்மைக்குப் புறம்பான வழக்குகள் ஜோடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி உள்ள உண்மைக்குப் புறம்பான வழக்குகளில் முதலிலே தொழிற்சங்கப் போராட்டங்களிலே, விவசாயிகள் போராட்டங்களிலே எல்லாம் ஈடுபட்டவர்கள் மேலே போடப்பட்ட உண்மைக்குப் புறம்பான வழக்குகளை withdraw பண்ணுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

இன்னொன்று, கள்ளச் சாராயம். கள்ளச் சாராயம் இங்கே கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்தைப் பார்த்தால் 2 இலட்சத்திற்கு அதிகமான ஆட்கள் இன்றைக்கு அதிலே இறந்திருக்கிறார்கள். அது ஒரு சமூகப் பிரச்சினை. இன்று ஒரு சமூகப் பிரச்சினை என்ற முறையிலே அதை அணுக வேண்டும். அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று. ஒரு பிரதானமான பிரச்சினை. நம்முடைய காவல் துறையிலே மதசார்பற்ற தன்மை இருக்கிறதா என்பது பரிசோதிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல நேரங்களிலே உதாரணமாக, கோவையிலே நடந்த நிகழ்ச்சிகளை வைத்து கோகுலகிருஷ்ணன் நீதிபதியினுடைய ஓர் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே, அவர் சொல்கிறார், காவல் துறையிலே காலாகாலத்திலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாகத்தான் கோவையிலே இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன. ஆகவே, காவல் துறையைப் பொறுத்தளவிலே மதசார்பற்ற உணர்வோடு நடந்துகொள்வதற்கு அவர்களுக்கு ஒரு Code of Conduct உருவாக்கப்பட வேண்டும். அவர்களை அந்த முறையிலே நடத்துவதற்கான பயிற்சி



2002 ஏப்ரல் 25] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கொடுக்கப்பட வேண்டும். இன்று அந்த முறையிலே உள்ள உணர்வுகள் இல்லாததன் காரணமாகத்தான் சங்கரலிங்கபுரம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சங்கரலிங்கபுரத்திலே நடந்த நிகழ்ச்சிகளிலே வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டன என்று. ஆனால், எனக்கு உள்ள தகவல், இன்று இன்னும் சில பேர், அதாவது பேச்சியம்மாள், விஜயன் என்பவருடைய மனைவி, அவருடைய பெயரிலே இருக்கக்கூடிய கேஸ் வாபஸ் பெறப்படவில்லை. மனப்பூர்வமாக காவல் துறை அதை வாபஸ் பண்ணுவதற்கு மறுக்கிறது. இதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை பண்ண வேண்டுமென்று பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று, நான் ஒரு பிரதானமான விஷயத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரலிங்கபுர சம்பவத்தில் வழக்கு தொடுக்கப்பட்ட அனைவர்மீதும் உள்ள வழக்குகள் திரும்பப் பெற்றன, திரும்பப் பெறப்பட்டன என்று நான் சொல்லவில்லை. பொதுவாக, 168 பேருக்கும் மேற்பட்டவர்கள் மீதிருந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. ஆனால், அங்கே ஒரு காவல் துறை Constable படுகொலை செய்யப்பட்டார். நேரடியாக அந்தக் கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்குகள் இன்னும் இருக்கின்றன. அந்த வழக்குகள் நடைபெற்றே தீரும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். நான் பணிவோடு தெரிந்துகொள்ள விரும்புவது, எனக்குள்ள தகவலைத்தான் நான் சொல்கிறேன். நான் ஒன்றும் அந்த இடத்திலே, அந்த நேரத்திலே இருந்தவன் அல்ல. எனக்குக் கிடைக்கப்பெற்றிருக்கிற தகவல் அந்த பேச்சியம்மாள், அந்த இடத்திலே, அந்த நேரத்திலே இல்லை. இந்த வழக்கிலே சம்பந்தப்படவில்லை. ஆனால், முருகன் என்ற அந்த காவல் துறைக்காரருக்கும் இவருக்கும் இருக்கின்ற ஏதோ முன்விரோதத்தை வைத்து, இந்த பேச்சியம்மாளையும் அதிலே சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மூன்று நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இரண்டு மூன்று நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். சாதாரணமாக minority-களுக்கு என்று சில rights இருக்கின்றன. நான் Linguistic minority. (சிரிப்பு) அதாவது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்திலே, பாரதிய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ். ஆட்கள் involve பண்ணப்பட்டிருக்கிற விஷயங்களில் தகுந்த நடவடிக்கைகள் சரியாக எடுப்பதற்கு காவல் துறை தயங்குகிறது. நான் இங்கே ஏற்கெனவே பேசியிருக்கிறேன். இப்போது அதே உணர்வு காவல் துறையிலே இருக்கிறதா என்ற ஓர் ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது.

ஏற்கெனவே, எங்களுடைய பகுதியிலே 15-9-1999 அன்று பெல்லார்மென் என்ற ஒருவர் கொலை செய்யப்பட்டார். அன்றைக்கு F.I.R. போடப்பட்டது. ஆனால், F.I.R.-லே நான்கு பேரை பிரதிவாதிகளாக சேர்த்திருக்கிறார்கள். அவர்களை கைது பண்ணவோ, விசாரிக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொலை செய்யப்பட்டவருடைய அண்ணன் உயர்நீதிமன்றத்திற்குப் போய் கேஸ் போட்டவுடன், இப்போது C.B.I. எங்களுக்கு இது entrust செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லி, இதோடு சம்பந்தப்படாத - அங்கே பிரச்சினை என்னவென்றால் கிறிஸ்தவர்கள் அதிகமாக இருந்த பகுதியிலே பிள்ளையாரைக் கொண்டு போய் வைப்பதற்கு நடந்த முயற்சியிலே ஏற்பட்ட கலவரம்,—கிறிஸ்துவ வாலிபனை, R.S.S. ஆட்கள் போய் காட்டிக் கொடுத்து அவனை இன்றைக்கு பிரதிவாதியாகச் சேர்த்து அவனை இம்சைபடுத்துவதற்கான முயற்சி நடந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 11-15

இந்தக் கேசிலே பிரதிவாதிகளாக இருந்த ஆட்கள்தான் இந்த C.B.I. அதிகாரிகளை கூட்டிக்கொண்டுபோய் காட்டிக் கொடுத்ததாக அங்கே பரவலாகப் பேசப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட போக்கு சரியல்ல. அதெல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டும். நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது - இந்தக் கொள்ளை, கொலை வழக்குகளைப் பொறுத்த அளவிலே நான் அதன் உள் விவகாரத்திற்கு வரவில்லை. காரணம் அதற்கு நேரமில்லை. ஆனால்



இன்று சென்னை நகரத்திலேயும் அதேபோன்று தமிழகத்திலே உள்ள பல்வேறு பகுதிகளிலேயும் மக்களுக்கு ஓர் insecurity இருப்பதாக feel பண்ணுகிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட ஓர் உணர்வு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் பல இடங்களில் இந்த வழக்குகளை சரியான முறையிலே நடத்துவதில் நம்முடைய காவல் துறை கூட சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. உதாரணமாக குழித்துறையிலே டாக்டர் ஸ்டீபன் என்ற ஒருவர் இறந்தார். மக்களிடையே சந்தேகம் இருக்கிறது. ஆனால், அந்த ஸ்டீபன் என்பவர் அகில இந்திய அண்ணா தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருந்தும், காவல் துறை சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. மக்களிடையே ஐயப்பாடு இருக்கிறது.

அதேபோன்று, ஈரோட்டிலே சங்கரன் என்ற ஒருவருடைய மகள் - அவர் தாழ்த்தப்பட்ட ஜாதியை சேர்ந்தவர். மேல் ஜாதியைச் சேர்ந்த ஒருவரை 2-8-2000 அன்று கல்யாணம் பண்ணினார். 2-7-2001-லிருந்து அந்தப் பெண்ணைக் காணோம். காவல் துறையிலே போய் complaint கொடுத்தால் அதிகாரிகள் வாங்குவதற்கு மறுக்கிறார்கள். அவர்கள்கூட முதலமைச்சரிடம் மனு கொடுத்திருப்பதாகத் தகவல்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ஒரு வாலிபர், இங்கே தொழில் செய்வதற்காக வந்தார். சுவாதி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்று சொல்லி சென்னையிலே Metropolitan Water Supply and Sewerage Board-லே 1998-ல் வேலை செய்தார். 1998 ஜூலை அன்று வேலை. அங்கே இருக்கிற ஒரு A.E. அதேமாதிரி சில சிப்பந்திகளும் சேர்ந்து கள்ளக் கையெழுத்துப் போட்டு அந்தப் பணத்தை அபகரித்தார்கள். அவர் complaint கொடுத்ததற்கு 12-11-1999 அன்று அவரை கோயம்பேடு காவல் நிலையத்திலே இருக்கிற இன்ஸ்பெக்டருடைய அடியாட்கள் போய் தூக்கி வந்து, அவரிடத்தில் எனக்கு complaint இல்லையென்று எழுதிக்கொடு என்று கட்டாயப்படுத்தி எழுதி வாங்கினார்கள். அவர் அதோடு நிற்கவில்லை. அவர் மேற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் complaint அனுப்பினார். 28-8-2000 அன்று அந்த போர்டினுடைய-M.D.-இந்த வாலிபனைக் கூப்பிட்டு விசாரித்து எக்மோர் காவல் நிலையத்திற்கு அவரே complaint பண்ணுகிறார். ஆனால், காவல் துறை அதிகாரிகள் இன்னும் சரியான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இப்படி காவல் துறை அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து இப்படிப்பட்ட

கொள்ளைகளுக்கு உதவியாக இருந்தால் இந்நாட்டில் வாலிபர்கள் எப்படி தொழில் நடத்த முன்வருவார்கள்? அவர் தோட்டத் தொழிலாளி மகன். தகப்பனார் ஒரு லட்ச ரூபாயை வட்டிக்கு வாங்கிக் கொடுத்து, வேலை வாங்கிக் கொடுத்து 'நீ வாழ்ந்து வா' என்று சொல்லி அவரை அனுப்பினால், இங்கே அதிகாரிகள் சேர்ந்து இப்படிச் செய்கிறார்கள். நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இரண்டு நிமிஷத்திலே முடித்து விடுகிறேன். நம்முடைய காவல் துறையைப் பொறுத்த அளவில் ஏராளமான கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் ஒன்றை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புவது, அந்தக் கோரிக்கைகளிலே பிரதானமான ஒன்று, போலீசாருக்கு பதவி உயர்வு கொடுப்பதற்கு Board வைக்கப்பட்டிருக்கிறது. இந்த Board என்பது ஊழல் உள்ள ஏற்பாடு என்று காவல் துறை ஆட்களுக்கிடையே பேசப்படுகிறது. ஆனால், அவர்களுடைய கோரிக்கை seniority அடிப்படையில் வேலை கொடுக்கப்பட வேண்டும். அதேபோல இன்னும் ஒரு கோரிக்கை. நம்முடைய காவல் நிலையங்களைப் பொறுத்த அளவில் பெண்கள் போக முடியாத நிலை இருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே 116-ஆம் பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்று நான் அதற்கு ஒரு தாழ்மையான கருத்தைச் சொல்ல விழைகிறேன். பாலியல் கொடுமை, கொலை ஆகியவை இன்று அதிகரித்து வருகின்றன. எனவே, வன்முறை எதிர்ப்புப் பிரச்சாரத்தை தமிழகம் முழுவதும் மேற்கொள்ள வேண்டும். கிராமங்களில் உள்ள இந்தப் பெண் இயக்கங்களைச் சார்ந்தவர்களை இதற்காகப் பயன்படுத்த வேண்டும். அதேபோன்று பெண் அமைப்பாளர்களுடன் கலந்து ஆலோசித்து இதற்கான ஒரு பிரதான ஏற்பாட்டை இந்த நாட்டிலே உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*முற்பகல் 11-20*

மலிவு விலையிலே ரேஷன் பொருட்கள் தருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தரமான பொருட்கள் வழங்குவது இல்லையென்ற காரணத்தால் ஏறத்தாழ பெருவாரியான மக்கள் ரேஷன் பொருட்களை வாங்குவதில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது. இதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஒரு...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுகிறேன். ஒரு பிரதானமான விஷயம். எங்களுடைய கட்சியைச் சார்ந்த ரத்தினசாமி என்பவர், திருப்பூரிலே கொடுவாய் பஞ்சாயத்தினுடைய தலைவராக (குறுக்கீடு) இடுவாய் பஞ்சாயத்தினுடைய தலைவராக இருந்தவர். அவர் கொலை செய்யப்பட்டு ஒரு மாத காலம் ஆனதற்குப் பிறகும் குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்னும் எடுக்கப்படவில்லை. காவல் துறையில் எங்களுக்கு உள்ள தகவல், வசதி படைத்தவர்களை விசாரிப்பதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். ஆகவே, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசியல் காரணங்களுக்காகப் போடப்பட்டுள்ள உண்மைக்கு மாறான வழக்குகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் வாபஸ் பண்ண வேண்டும். நான் கடைசியாக ஒரு கருத்தை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது, தீவிரவாதி ஹைதர் அலியைப் பிடிப்பதற்கு நம்முடைய காவல் துறை முயற்சித்து, அதன் காரணமாக ஆர். கேசவன் என்ற ஒரு காவலர் இன்றைக்கு அப்பலோ ஆஸ்பத்திரியிலே மருத்துவ வசதி பெற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால், அவருக்குப் போதுமான நிதியுதவி கொடுக்கப்படவில்லை என்று அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு ஒரு குமுறல் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக, இந்த..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக ஒன்று; கடைசியாக ஒன்றா? (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கடைசியாக ஒன்று. சென்ற காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற நேரத்திலே நான் காவலர்களுக்கு ஒரு சங்கம் வைப்பதற்கான உரிமத்தை அரசு வழங்க வேண்டும் என்று பணிவன்புடன் தெரிவித்திருந்தேன். முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு என்ன சொன்னார்கள் என்றால், வழக்கு நிலுவையிலே இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, அதற்குப் பிறகு

அதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று சொன்னார்கள். உண்மையிலே அந்த கேஸே முடியவில்லை என்பதுதான் எனக்கு வந்திருக்கிற தகவல். ஆனால், முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஓர் alternate arrangement-ஐப் பற்றி இங்கே அறிவித்தார்கள். அது சரிவர நடக்கவில்லை என்று இந்தக் காவல் துறையைச் சார்ந்தவர்களிட மிருந்து தெரிகிறது. நான் ஒன்றை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு அதிகாரிகள் கூப்பிட்டு தனித் தனியாக போலீசார்களை விசாரிக்கிறார்கள். உண்மைகளைச் சொல்வதற்கு அவர்கள் பயப்படுகிறார்கள். ஆகவே, ஒரு போராட்டம் என்பதற்காக அல்ல, போலீசார்களுக்கு இருக்கிற குறைகளை அதிகாரிகளுக்குச் சொல்வதற்கு ஒரு Forum என்ற முறையிலே, ஏதாவது ஓர் ஏற்பாடு தேவை. அது இல்லாததன் காரணமாகத்தான் எங்களை மாதிரி உள்ள சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் பார்த்து எங்களிடம் கோரிக்கை கொடுக்கிறார்கள். அதாவது 1994, 1995-லே recruitment செய்து S.I.-ஆன ஆட்களுக்கு இன்னும் ஸ்டேஷன்களிலே வேலை தரவில்லை. 1999-லே வேலைக்கு எடுத்தவர்களுக்கு ஸ்டேஷன்களிலே வேலை கொடுக்கவில்லை. இன்னும் அதேமாதிரி வாரிசுகளை வேலைக்கு எடுத்துக்கொண்டு, அவர்களை நிரந்தரம்—regularise பண்ணவில்லை.

அதேபோன்று நம்முடைய காவல் துறை அதிகாரிகளுக்குப் பிரதானமான வேலை என்னவென்றால் சட்டம் ஒழுங்கைப் பார்ப்பது. அதேமாதிரி குற்றங்களைத் தடுப்பது. ஆனால், இப்போது பல அதிகாரிகளுக்கு அலுவலகங்களிலேயே அந்த அலுவலக வேலைகளைப் பார்க்க வேண்டிய பொறுப்பும் இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, பெரிய அலுவலகங்களிலே எல்லாம் Administrative Officer என்ற ஒரு போஸ்டை create பண்ணி, அப்படிப்பட்ட ministerial வேலைகளைப் பார்ப்பதிலேயிருந்து இந்தக் காவல் துறை அதிகாரிகளை விடுவிக்கலாம் என்பது என்னுடைய கோரிக்கை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிட்டு தண்ணீர் குடிக்கலாமே? *(சிரிப்பு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கடைசியாக, *(சிரிப்பு)* 20-4-2002 அன்று சென்னை அருகே உள்ள பட்டாபிராம் காவல் நிலையத்திலே அருள் என்பவர் மீது ஒரு வழக்கு போடப்பட்டது. அது ஒரு உண்மைக்கு மாறான வழக்கு. இப்படிப்பட்ட பல வழக்குகள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் வாபஸ் பண்ணுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, உண்மையிலேயே



குற்றவாளிகளைத்தான் அரசு deal பண்ணுகிறது என்ற ஓர் உணர்வை தமிழகத்திலே இருக்கிற மக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலமாகத்தான், காவல் துறையைப் பற்றி ஒரு நம்பிக்கை மக்களுக்கு வரும்.

*முற்பகல் 11-25*

காவல் துறையைப் பொறுத்த அளவிலே நான் ஓர் எடுத்துக்காட்டு சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய ஊரிலே காவல் நிலையத்திலே பூஜை வைத்தார்கள். பூஜை வைத்து கடைசியிலே பொரி, கடலை எல்லாம் கொடுப்பதற்கு அவர்கள் மக்களைக் கூப்பிட்டார்கள். காவல் துறை ஆட்கள் வந்து மக்களை கூப்பிட்ட உடனே நம்மை ஏதோ செய்யப் போகிறார்கள் என்று நினைத்து அவர்கள் எல்லாம் ஓடிவிட்டார்கள். *(சிரிப்பு)* முடிவிலே காவல் நிலையத்திலே பொரியையும், கடலையையும் சாப்பிடுவதற்கு ஆள் இல்லை, ஏன்? அந்த அளவுக்கு இருக்கிறது அவர்களுக்குள்ளே இருக்கிற relationship. இந்த நிலை மாற வேண்டும். அதுதான் தமிழகத்திலே நாம் மக்களுக்குச் செய்கிற மிகப் பெரிய சேவை என்று சொல்லி, அந்த முறையிலே காவல் துறையைச் சீரமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயக உரிமைகளை மீறுவதற்கு அவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது—இதிலே முதலமைச்சருக்குத் தெரிந்துதான் இதுவெல்லாம் நடக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை—முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, கூட்டம் நடத்துவதற்கு, அதேபோல ஊர்வலம் போவதற்கு எல்லாம் உள்ள உரிமைகள்—இன்றைக்குப் பத்திரிகையிலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் இளங்கோவன் அவர்கள் அங்கே சேலத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேறு பிரச்சினைக்குப் போகிறீர்கள். உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கலெக்ட்ரேட்டுக்கு முன்னால் மைக் வைத்து பேசுவதற்கு அனுமதிக்கவில்லை என்று சொல்லி அவர் அங்கே மறியல் நடத்தியிருக்கிறார். நான் என்ன சொல்லுகிறேன் என்றால்,

இதுதான் பல அலுவலகங்களில் நடக்கிறது. அலுவலக அதிகாரிகளுக்கு எதிராக ஒரு போராட்டம் நடத்துகிற நேரத்திலே, அதை மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் சொல்வதற்கு உள்ள வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்றால் அந்த அனுமதி கொடுத்துப் பயன் இல்லை. அதை regulate பண்ணவேண்டும். அதை நான் மறுக்கவில்லை. regulate பண்ணிக்கொண்டு அந்த உரிமைகளைப் பெறுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**திரு. இரா. திருமாவளவன்:** சங்கராபுரம் பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பேசி முடிக்கட்டும். அவர் பேசி முடித்த பிறகு கூப்பிடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்தத் தங்களுக்கு என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, உள் துறை—காவல், உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய மானியக் கோரிக்கைகளிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை என்பது இன்று தமிழகத்தினுடைய பாதுகாப்பு அரணாக, பொது மக்களுடைய பாதுகாவலர்களாக, மக்களின் நண்பர்களாக இருக்க வேண்டிய நிலை என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டிய ஒரு காலக் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே, அந்த வகையிலே நம்முடைய கடந்த கால காவல் துறையினுடைய வரலாறுகளைப் பார்க்கின்ற நேரத்திலே, உலகத்திலே இருக்கக்கூடிய, உலகத்தின் பிரசித்தி பெற்ற, Scotland Yard போலீசுக்கு இணையான போலீஸ், தமிழக காவல் துறை என்று பெயர் பெற்ற காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நாம் இன்று ஏதோ சூழ்நிலையின் காரணமாக சென்னை மாநகரிலும், பல்வேறு பகுதிகளிலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள்கடத்தல் போன்ற பல்வேறு சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்ற காரணத்தாலே காவல் துறையின் மீது மக்களுக்கு பொதுவாகவே ஏதோ ஒரு தவறு செய்யக்கூடிய ஒரு மனப்பான்மை இப்போது வந்திருக்கின்ற காரணத்தாலே இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புவது ஒரு நல்ல அரசுக்கு, ஒரு நல்ல அரசாக விளங்குவதற்கு, நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். அதைப்போலவே நிதியினுடைய மேம்பாட்டிற்கு நிதி சீர்திருத்தம் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையிலே, இன்றைய சூழ்நிலையிலே நாம் காவல் துறை சீர்திருத்தம் கொண்டு வருவது கட்டாயம் என்பதை நான் இங்கே முதலிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையை புனரமைப்பது நம்முடைய கடமை என்பதை உணர்ந்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆக்கபூர்வமான நல்ல சில அறிவிப்புகளை எல்லாம் இங்கே அறிவித்த செய்தி, கொள்கை விளக்கக் குறிப்பிலே கண்டு, நான் உண்மையிலேயே வரவேற்கிறேன், பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அப்படிப் பாராட்டுகின்ற நேரத்திலே, வரவேற்கின்ற நேரத்திலே இன்னும் சில ஆலோசனைகளையும், உண்மை நிகழ்வுகளையும் இங்கே எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய காவல் துறை பணியாற்றுகின்ற நேரத்திலே, இருக்கக்கூடிய உண்மையைச் சொல்கிறேன். குற்றவாளிகள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் நிரபராதிகள் எக்காரணம் கொண்டும் தண்டிக்கப்படக் கூடாது என்ற நிலையை உணர்ந்து பணியாற்றுகின்ற நிலை இப்போது சற்று மாறி இருக்கிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



*முற்பகல் 11-30*

அதைப்போலவே, காலந்தாழ்த்திய தீர்ப்பு என்பது மறுக்கப்பட்ட நீதியாகும் என்று தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். அந்த வகையிலே நம்முடைய காவல் துறை, குற்றவாளிகளுக்கு உடனடியாக தண்டனை பெற்றுக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல நிலையும் இங்கே உருவாக்க வேண்டுமென்று நான் முதலிலேயே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அந்த வகையிலே இப்போது காவல் துறை சீர்திருத்தங்கள் என்று சொல்லுகின்ற நேரத்திலே காவல் துறையினுடைய

சங்கடங்களையும் நாம் உணர்ந்து பார்க்கக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். எப்போது பார்த்தாலும்-குறைக்காகச் சொல்லவில்லை- முதலமைச்சர் நிகழ்ச்சி, அமைச்சர்கள் நிகழ்ச்சி, எதிர்க்கட்சித் தலைவர், மற்ற அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், மற்ற கட்சித் தலைவர்கள் பங்கேற்கக்கூடிய மாநாடுகள், நிகழ்ச்சிகள், பேரணிகள், பொதுக் கூட்டங்கள் இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க காவல் துறைப் பணியாளர்கள் ஆங்காங்கே செல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதற்கும் மேலாக, நீதிமன்றப் பணி என்று சொல்லி அங்கேயும் செல்கிறார்கள். இப்படி, காவலர்கள் பல்வேறு பணிகளுக்குச் செல்கின்ற நேரத்திலே காவல் நிலையத்திலே ஒரு திடீர் பிரச்சினை என்று சொன்னால் சென்ட்ரி ஒருவரே இருக்கக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது; ஆன காரணத்தினாலே காவல் துறையிலே பணி சற்று சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டுவதோடு, இப்போது இந்தக் குறைகளை எல்லாம் போக்குவதற்கு காவல் துறையினருடைய எண்ணிக்கையை நாம் கட்டாயம் கூட்டியாக வேண்டும். ஆகவே, அந்த அடிப்படையிலே இங்கே ஒரு புள்ளிவிவரத்தைக்கூட நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரத்தைப் பார்க்கின்ற நேரத்திலே, அதாவது தேசிய குற்றப் பதிவேடுகளின் அலுவலகத்திலிருந்து கடந்த 04-05-2001 அன்று வெளியிடப்பட்ட அந்தத் தகவலின் அடிப்படையிலே சொல்கிறேன். இப்போது, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, அந்த அறிக்கையின்படி, 69,583 காவல் பணியாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். 100 சதுர கிலோமீட்டருக்கு 61.1 விகிதம்; அதாவது ஒரு லட்சம் மக்களுக்கு 129 காவலர்கள் உள்ளார்கள். ஆனால், இப்படிப் பார்க்கின்ற நேரத்திலே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே, இந்தியாவிலே 100 சதுர கிலோமீட்டருக்கு என்று மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே, தமிழகம் 10-வது இடத்திலே இருக்கிறது.

அதைப்போலவே, ஒரு லட்சம் மக்களுக்கு எத்தனை காவலர்கள் என்று மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே தமிழகம் 15-வது இடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் சீர் செய்வதற்கு, காவல் துறையினருடைய எண்ணிக்கையைக் கூட்டுவோம்



என்று சொன்னால், அப்படிக் கூட்டுகின்ற சராசரிக் கணக்கைப் பார்க்கின்றபோது ஒரு லட்சம் மக்களுக்கு 175 காவலர்கள் கட்டாயம் இங்கே இருந்தாக வேண்டுமென்ற நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்போது, ஒரு லட்சம் மக்களுக்கு 175 என்று சொன்னால் இன்னும் நியமனம் செய்யப்பட வேண்டியவர்கள் 35,000 பேர். அவர்களை கட்டாயமாக நியமிக்கவேண்டும். அந்த அடிப்படையிலே காவல் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தேசிய காவல் துறை கமிஷன் சிபாரிசு ஒன்றைச் செய்திருக்கிறது. என்னவென்று சொன்னால், இன்று ஒவ்வொரு மாநிலத்திலேயும் காவலர், தலைமைக் காவலர் மற்ற பணியாளர்கள் 45 சதவிகிதம் இருக்க வேண்டும். அதைப்போலவே, உதவி ஆய்வாளர்கள். மற்றும் துணை உதவி ஆய்வாளர்கள் பணியிடங்கள் 32 சதவிகிதம் இருக்க வேண்டும். ஆய்வாளர்கள் பணியிடங்கள் என்பது 18 சதவிகிதம் இருக்க வேண்டும். கண்காணிப்பாளர்கள் மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர்கள் பணியிடங்கள் 5 சதவிகிதம் இருக்க வேண்டும். ஆகவே, இந்த விகிதாச்சாரங்களின் அடிப்படையிலே காவல் துறை பணியமைப்பு இருக்குமென்று சொன்னால், கொலைக் குற்றங்கள் மட்டுமல்ல, எல்லா குற்றங்களும் சீரமைக்கப்படும். அந்த அரசு ஒரு நல்ல அரசாக இருக்குமென்று தேசிய காவல் துறை கமிஷனால் இங்கே சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி இந்தச் சீர்திருத்தங்களைச் செய்கின்ற அதே நேரத்திலே காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு நீண்ட நாளைய மிகப் பெரிய குறை, நானும்கூட, கடந்த காலங்களில் சட்டமன்றத்திலே இதை வலியுறுத்திப் பேசினேன். கடந்த ஆளுநர் உரையிலேயும், பட்ஜெட் உரையினுடைய பொது விவாதத்திலேயும் கலந்துகொண்டு பேசினேன். அப்படி கடந்த காலங்களிலே பேசிய அந்தப் பேச்சுகளுக்கும், கேட்ட வினாக்களுக்கும் அரசு, காவல் துறையிலேயிருந்து. பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னவென்று சொன்னால், காவலர்களுக்கு 5 சதவிகிதம் கூடுதலாக ஊதியம் வழங்க காவல் துறை இயக்குநர் அவர்களாலே அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது என்ற செய்தி தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. அந்த வகையிலே இங்கே நான்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்வது இன்று காவல் துறையிலே இரண்டாம் நிலைக் காவலர்கள், முதல் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், துணைக் கண்காணிப்பாளர்கள் போன்ற எல்லாப் பணிகளிலேயும் இருக்கக்கூடியவர்களுக்கு அரசு, மற்ற துறைகளிலே இருக்கக்கூடியவர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். அப்படி இணையான ஊதியம் என்று சொல்கின்ற நேரத்திலே ஏறக்குறைய இப்பொழுது இருக்கக்கூடிய ஊதியத்தைவிட 2 மடங்கு கூட வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே எல்லாத் துறைகளுக்கும் இணையான ஊதியத்தை காவல் துறைக்குக் கட்டாயம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

அதுபோல பதவி உயர்வு. பதவி உயர்வு என்று சொல்கின்ற நேரத்திலே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து இன்று வரையிலே காவலராக பணி ஆற்றியவர் 35 ஆண்டுக் காலம் பணியாற்றியும்கூட காவலர், உதவி ஆய்வாளராக பணி உயர்வு பெற முடியாத நிலை. ஆகவே, இப்படி எல்லா category-யிலும் காவலர், முதல் நிலை காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர், துணைக் கண்காணிப்பாளர் போன்ற எல்லாப் பணிகளுக்கும் அவர்கள் ஒரு பதவி உயர்வு பெறுவதற்கான காலவரையறை நிர்ணயித்து, அதுவும் குறைவான காலங்களிலே பதவி உயர்வு வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே இன்னொன்று. மற்ற துறைகளிலே எல்லாம் பணியாற்றக் கூடியவர்களுக்கு 8 மணி நேரம் பணி நிர்ணயம். ஆனால், காவல் துறையிலே இருக்கக்கூடியவர்களுக்கு ஓய்வு என்று வழங்கினாலும்கூட, இரவு நேரத்திலே எந்த நேரத்திலே பணிக்கு அழைக்கப்படுகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே, இப்படி 24 மணி நேரமும் தயார் நிலையிலே இருக்கக்கூடிய இந்தக் காவல் துறையிலே பணியாற்றக் கூடியவர்களுக்கு 8 மணி நேர பணி வரம்பு என்பதைக் கட்டாயம் நிர்ணயிக்க வேண்டுமென்று இங்கே நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். காவல் துறையிலே காலம் காலமாகப் பணியாற்றியவர்கள், ஓய்வு பெற்ற பிறகும் அல்லது பணியாற்றிக்



கொண்டிருக்கிற நேரத்திலேகூட இங்கே சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்படுகின்ற நேரத்திலே, காவல் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுடைய குழந்தைகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். உள்ளபடியே நான் மனதார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அந்த வகையிலே இந்த சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையத்திலே தேர்வு செய்யக்கூடிய நேரத்திலே காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் போன்ற அந்த மட்டத்திலே இருக்கக்கூடிய அவர்களுடைய குழந்தைகளுக்கு முன்னுரிமை அளித்து, கூடுதல் விகிதாச்சாரப் பணியிடங்களை அந்தக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி இதையெல்லாம் பேசிக் கொண்டிருக்கக்கூடிய நாம், காவலர் பணி என்பது மிக முக்கியமான பணி. காவல் துறையிலே பொறுப்பு ஏற்றிருக்கக் கூடியவர்கள் இது புனிதத் தன்மை வாய்ந்தது என்பதை உணர வேண்டும். அப்படிப்பட்ட நிலைக்கு அரசு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையிலே மற்ற துறைகளைக் காட்டிலும் அவர்களுக்கு என்று தனி உடுப்பு. அதைப் பார்த்தாலே பயம் வரும். நாம் எல்லாம் சின்ன வயதிலே காவல் துறையினரைப் பார்த்தால் பயந்தோம். அப்படிப்பட்ட ஒரு நிலை. ஆகவே, இப்படி புனிதத் தன்மை வாய்ந்த அந்தக் காவல் துறையினருக்கு இந்த நாட்டு நலனிலே அக்கறை கொண்டு இது என் நாடு, இது என் மக்கள், என்னுடைய அரசாங்கத்திற்கு, என்னுடைய மக்களுக்கு நான் சேவை செய்கிறேன் என்ற உணர்வு வரக்கூடிய அளவுக்கு நல்ல பயிற்சியை அரசு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது காவல் துறையிலே நல்லவர்கள் இருக்கிறார்கள். நேர்மையான முறையிலே, நாணயமான முறையிலே, லஞ்சம் வாங்காத அதிகாரிகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே இன்றைய சூழ்நிலையிலே காவல் துறை மானியக் கோரிக்கை என்ற காரணத்தினாலே அப்படிப்பட்ட நல்ல அதிகாரிகளை எல்லோரின் சார்பிலே இந்த மாமன்றத்தின் சார்பிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே இந்தத் துறையிலே கருப்பு ஆடுகள் என்று சொல்லக்கூடிய வகையிலே 'வேலியே பயிரை மேய்கிறது' என்று சொல்வதைப்போல காவல் துறைக்குக் களங்கம் விளைவிக்கக்கூடிய அதிகாரிகளும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கட்டாயம் அடையாளம் கண்டுபிடித்து

கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். நிறைய சொல்ல முடியும். ஒன்றை மட்டும் உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒரு காவல் துறை கண்காணிப்பாளர், பெயரைச் சொல்ல விரும்பவில்லை, அவர் காவல் நிலையங்களுக்கு உத்தரவிடுகிறார். வாய்மொழி உத்தரவாக, ஒவ்வொரு காவல் நிலையத்திலேயிருந்தும் மாதம் இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும். கலால் பிரிவிலேயிருந்து எனக்கு இவ்வளவு கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இதுவொரு குற்றச்சாட்டு.

**திரு. ஜி.கே. மணி:** நான் பெயரைச் சொல்லவில்லை. உண்மையில் நடந்த நிகழ்வைச் சொல்கிறேன். அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். இப்பொழுது மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். தவறுதலாக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாகச் சொல்லலாம். குறிப்பிட்டு சொல்லும்போது மொத்தத்திலே இருக்கிற காவலர்கள் அத்தனை பேரையும் பாதிக்கும். காவல் துறையையே பாதிக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** நான் நல்ல நோக்கத்தோடு சொன்னேனே தவிர, ஏதோ குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட நிலையெல்லாம் மாற வேண்டும், இந்தத் துறை புனிதமான துறையாக விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆக, இப்படி இந்த காவல் துறையிலே இருக்கக்கூடியவர்கள் நல்லவர்களைப் பாராட்ட வேண்டும். அதே நேரத்திலே தவறு செய்யக் கூடியவர்கள் சிலர் இருந்தால் அவர்களும் தங்களை திருத்திக்கொள்ள வேண்டும் என்ற அந்த எண்ணத்திற்காகச் சொல்கிறேன்.

காவல் துறையிலே தற்பொழுது குடியரசு தினம், சுதந்திர தின நாட்களிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர், ஜனாதிபதி போன்றவர்கள் எல்லாம் விருதுகளை வழங்கி, பதக்கங்களை எல்லாம் வழங்கி அவர்களைப் பாராட்டுகின்றார்கள். அந்த வகையிலே ஒவ்வொரு காவல் நிலைய அளவிலேயும் காவலர்களைப் பாராட்டக்கூடிய ஒரு நிலை வர வேண்டும் என்று நான் இங்கே மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எந்த வகையிலே என்று சொன்னால், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் லஞ்சம் வாங்காமல் நேர்மையாக, திறமையாகப் பணியாற்றக்கூடிய காவலர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால்,



அவர்களை எல்லாம் தேர்வு செய்து ஆண்டுக்கொரு நாள் அந்தக் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மக்கள் பிரதிநிதிகள், சமுதாயத் தொண்டு நிறுவனங்களையெல்லாம் அழைத்து அவர்களைப் பாராட்டிப் பேசுவது வாழ்த்துவது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினாலே ஆண்டுக்கொரு நாள் காவலர் தினம் என்ற ஒரு தினத்தைக் கொண்டாடி அவர்களைப் பாராட்ட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். இந்த காலகட்டத்திலே காதலர்களுக்கெல்லாம் தினம் கொண்டாடுகிற நேரத்திலே காவலர்களுக்கு தினம் கொண்டாடுவதில் தவறு இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 11-40

நாட்டிலே கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆட்கடத்தல், தீவிரவாதம் என்று வளர்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையிலே காவலர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டுவதோடு காவலர்களுக்கு பணியிடைப் பயிற்சி அவசியம் தேவை. மனதைப் பக்குவப்படுத்தக்கூடிய வகையிலே நல்ல பயிற்சியை வழங்க வேண்டுமென்று இங்கே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று-தயவுசெய்து நான் குற்றச்சாட்டாக சொல்கிறேன் என்று நீங்கள் சொல்லிவிடக் கூடாது. காலம் காலமாக தொடர்ந்து நடந்து வருவதைச் சொல்கிறேன். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இங்கே காவல் துறை அதிகாரிகளிடத்திலே ஒரு மனப்போக்கு என்னவென்று சொன்னால், ஆளுங்கட்சி யார் வந்தாலுங்கூட, அவர்களுக்கு சார்பாக இருந்துகொள்ள வேண்டும் என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலை வருமென்று சொன்னால் அரசாங்கத்திற்கு, பொது மக்களுக்கு ஆரோக்கியமானதாக இருக்காது. ஆகவே, கடந்த கால நிகழ்வுகளை நான் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. ஆழமாகப் போக விரும்பவில்லை. அது அடிமட்டத்திலே இருந்து இருக்கிறது. ஆகவே, கீழ்மட்டத்திலிருக்கிற காவலர்கள் மனதிலே அப்படிப்பட்ட நிலை நிச்சயமாக வரக்கூடாது என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மற்ற நாடுகளிலேகூட செக்யூரிட்டி கமிஷன் என்றிருக்கிறது. அதேபோல நம்முடைய தமிழகத்திலே செக்யூரிட்டி கமிஷன் என்று ஒன்றைக்

கொண்டு வரவேண்டும். இப்போது நெருக்கடியான சூழ்நிலை இருக்கிறது. காவல் துறையை சீரமைக்க வேண்டுமென்று சொல்லுகின்ற இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு கமிஷன் அமைக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கமிஷனுடைய தலைவராக, காவல் துறையினுடைய மூத்த அதிகாரி செயலாளராக, பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களை, வழக்கறிஞர்களை, ஓய்வு பெற்ற நீதிபதிகளை இன்னும் தொண்டு நிறுவனங்களை எல்லாம் உறுப்பினர்களாகச் சேர்த்து, ஒரு கமிஷன் அமைத்து, அதன் மூலம் காவல் துறையில் சீர்திருத்த நடவடிக்கைகளை எல்லாம் எடுப்பீர்கள் என்று சொன்னால் நிச்சயமாக அவை வரவேற்கக்கூடியதாக இருக்கும் என்று நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காவல் துறையிலே புலனாய்வுப் பிரிவு, உளவுத் துறை இருக்கிறது. இந்த உளவுத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் சற்று, தங்களுடைய கடமையை விட்டு வேறு வழியிலே அவர்கள் எல்லாம் திசை மாறி போய்க்கொண்டு இருக்கக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. உதாரணத்திற்கு மற்ற கட்சிகளிலேயிருந்து ஆள் பிடிப்பது. அது காவல் துறையினுடைய பணி இல்லை. பல பேரை உதாரணத்திற்குச் சொல்ல முடியும். ஆள் பெயரைச் சொல்லி இந்த, இந்த இடத்திலே, நீங்கள் எல்லாம் ஆளுங்கட்சிக்கு வீந்துவிடுங்கள், நான் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அது ஓர் அரசாங்கத்திற்கு நல்லதாக இருக்காது. இதைப்பற்றிக்கூட நம்முடைய மரியாதைக்குரிய உள் துறைச் செயலாளர் அவர்களுக்கு எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் கடிதம் எழுதியிருந்தார்கள். அப்படி இல்லை என்றும் மறுப்புக் கடிதம் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இருந்தாலுங்கூட உண்மை நிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலையிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆளுங்கட்சியாக உள்ளது. இது வளர்ந்து வருகின்ற ஓர் இயக்கம். பல்வேறு கட்சிகளிலேயிருந்து பல தொண்டர்கள் தாங்களாக விரும்பி, தாங்கள் சார்ந்து இருக்கின்ற கட்சிகளை விட்டு விலகி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் வந்து



சேருகிறார்கள். அதுபோல் பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்தும் அணி அணியாக, சாரி சாரியாக பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் வந்து கழகத்தில் சேர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஜி.கே. மணி அவர்களின் கட்சித் தலைவர் அவர்கள் முடிந்தால் தன்னுடைய தொண்டர்களை தக்க வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து விட்டு, அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதற்காக காவல் துறையின் உளவுத் துறை மீது பழி போடுவது நியாயமல்ல, ஏற்றுக்கொள்ள முடியாது. காவல் துறைக்கு அப்படிப்பட்ட எந்தப் பணியையும் நாங்கள் கொடுக்கவில்லை. அது எங்களுக்குத் தேவையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நேரம் குறைவாகத் தரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் விளக்கத்தைச் சொன்னார்கள். இப்படி ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறிச் செல்வது அவர்களுடைய விருப்பம். அதை நான் சொல்லவில்லை. அண்ணா தி.மு.க.விலேயிருந்து, தி.மு.க. விலேயிருந்து பாட்டாளி மக்கள் கட்சிக்கு வருவது, பாட்டாளி மக்கள் கட்சியிலேயிருந்து அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்குப் போவது, காங்கிரஸ் கட்சிக்குப் போவது, இப்படி பல்வேறு கட்சிகளுக்கு மாறுவது அவர்களுடைய விருப்பம். ஆனால் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எங்களுடைய நிருவாகிகளிடத்தில், மற்ற கட்சி நிருவாகிகளிடத்தில் வந்து பேசியதை நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். பெயரோடு, தேதியோடு ஆள் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அது அந்த உதாரணத்திற்காக மட்டுமல்ல, ஆதாரத்தோடு சொல்கிறேன் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட நிலையெல்லாம் மாற வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

அதைப்போலவே, இப்பொழுது சென்னை மாநகரத்திலே பல்வேறு பகுதிகளிலே குற்றங்கள் அதிகரிப்பதாக சொல்லப்படுகிறது. விரிவாகப் பேசினார்கள். ஆழமாகப் போக நான் விரும்பவில்லை. அப்படி மாறி இருப்பதற்குக் காரணம் ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். என்னவென்று சொன்னால், இப்பொழுது சட்டம் - ஒழுங்குப் பிரிவையும், குற்றப் பிரிவையும் ஒன்றாக இணைத்து இருக்கின்ற காரணத்தினாலே, அந்தக் குற்றப் பிரிவிற்கு சரியாக பாதுகாப்புப் பணிகளை, ஏற்பாடுகளைச் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதிலே அக்கறை செலுத்தி, அந்தக் குற்றப் பிரிவிற்கு தனி துணை கமிஷனர்களை நியமனம் செய்து கூடுதலாகப் பல்வேறு பணியிடங்களையெல்லாம் ஒதுக்கி அதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கள்ளச் சாராயம். இந்த கள்ளச் சாராயத்தைப் பொறுத்தவரையிலே, கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் தெரிந்த உண்மை. 1991-லே முதலமைச்சர் வந்த நேரத்திலே ஒரு நல்ல அறிவிப்பைச் செய்தீர்கள். நாங்கள் இன்றும் அதை வரவேற்கிறோம். அதற்கு உதாரணத்திற்கு இப்பொழுது மகளிர் சுய உதவிக் குழுக்களெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. காவல் நிலையங்களுக்குச் சென்று மகளிர் சுய உதவிக் குழுவினர் புகார் செய்கிறார்கள். எங்கள் ஊரிலே, பக்கத்து ஊரிலே, இங்கே கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது; இதைத் தடை செய்ய வேண்டும் என்றெல்லாம் அவர்களே சொல்கிறார்கள். அப்பொழுது காவல் துறையால் சில இடங்களிலே அது தடை செய்யப்படுகிறது. சில இடங்களிலே அந்த சுய உதவிக் குழுவினரை, பெண்களை அவமானப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளை எல்லாம் நாங்கள் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கடுமையான உத்தரவிட்டு, அந்தக் கள்ளச் சாராயத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டும். நிச்சயமாக காவல் துறை அதிகாரிகள், மனது வைத்தால் முடியும். அங்கே காவல் துறை ஆய்வாளர், கிராம நிர்வாக அதிகாரி, ஊராட்சிமன்றத் தலைவர் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசி, 'அந்த எல்லையிலே இருக்கக்கூடிய கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பவர்கள் யாராக இருந்தாலும் இந்தத் தேதியிலே அழைத்துவர வேண்டும். அவர்களை, இதோடு நீங்கள்



நிறுத்திக்கொள்ள வேண்டும். கடிதத்தின் வாயிலாக எழுதிக்கொடுங்கள். உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள். இல்லையென்று சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என்று ஒரு கடுமையான உத்தரவை முதலமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்கலாம். அது பெண்கள் மத்தியிலே இருக்கக்கூடிய மிகப்பெரிய குறை. அதை நீக்க வேண்டும் என்று இங்கே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 நிமிடங்களிலே உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** 5 நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வேண்டாம், நேரமாகி விட்டது. 2 நிமிடங்களிலே முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போலவே, இந்தக் குற்றங்கள் பெருகுவதற்கு இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது. நீதிமன்றங்களிலே A.P.P. நியமனங்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. இன்றைக்கு என்று நான் சொல்லவில்லை, தொடர்ந்து அரசியல் காரணங்களுக்காக, இவர்கள் வேண்டியவர்கள் என்று திறமையில்லாதவர்களையெல்லாம் அங்கே நியமனம் செய்கின்ற காரணத்தாலே குற்றவாளிகள் தப்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த நியமனத்திலே அதிக அக்கறை செலுத்தவேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து Home Guards இப்போது நிறைய Home Guards-ஐ ஊக்குவிக்கலாம். இளைஞர்கள் எல்லாம் நிறைய இருக்கிறார்கள். படித்த இளைஞர்கள் அல்லது பல்வேறு துறைகளிலே பணியாற்றுகிறவர்கள், அவர்களையும் ஊக்குவிக்கலாம் என்று இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பைச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த பொடா சட்டம் திட்டமிட்ட குற்றங்களைத் தடுப்பதற்காக ஒரு சட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். இப்பொழுது இங்கே இருக்கக்கூடிய இந்திய தண்டனைச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம், குண்டர் தடுப்புக் காவல் சட்டம், குற்றப் பிரிவுச் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள். அதற்கு மேலாக பொடா சட்டம் வந்திருக்கிறது. ஆகவே இப்படி கடுமையான சட்டங்களெல்லாம் இருக்கின்ற நேரத்திலே இந்தச் சட்டம் தேவைதானா என்பதை முதலமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய

வேண்டும். அப்படி தேவை என்று சொன்னால் நீங்கள் அந்தச் சட்டத்தைக் கொண்டுவருகின்ற நேரத்திலே அனைத்து அரசியல் கட்சிகளையும், சட்ட வல்லுநர்களையெல்லாம் அழைத்து ஆய்ந்து, இது எந்தவகையில் இருக்கவேண்டும் என்ற பல்வேறு நிபந்தனைகளோடு கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பிரதமர்கூட அந்த வகையிலே அதைச் செய்தார்கள். உதாரணத்திற்கு மராட்டிய மாநிலத்தை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்த மராட்டிய மாநிலத்திலே 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அந்த 40 வழக்குகளிலே 30 வழக்குகள் அங்கே நிரூபிக்கப்படவில்லை. குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை. ஆகவே, திட்டமிட்ட வழக்கு என்பது, உள்நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்பது மராட்டிய மாநிலத்திலே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கர்நாடக மாநிலத்திலே (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். இன்னும் ஐந்தே நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 நிமிடங்களிலே முடிங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கர்நாடக மாநிலத்திலே அதற்கு நல்ல தீர்வினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையும் முன்னுதாரணமாக வைத்து நீங்கள் அந்த வகையிலே இதைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இந்த புள்ளிவிவரத்தை நான் சொல்லுகின்ற நேரத்திலே, கடந்த 2001-ஆம் ஆண்டிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, மற்ற கருத்துகளை பிறகு பேசும்போது சொல்லலாம் ஏனென்றால் எல்லோருக்கும் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். இந்தக் குற்றங்களைச் சொல்லுகின்ற நேரத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டது, கண்டுபிடிக்கப்பட்டது என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. அந்தப் புள்ளிவிவரங்களில் ஆதாயக் கொலை, கூட்டுக் கொள்ளை, வழிப்பறி, வீடு புகுந்து திருடுதல், களவு, கற்பழிப்பு, கற்பழிப்பு முயற்சி, மானபங்கம், பெண்களை கேலி செய்தல், வரதட்சணை கொலை இப்படி எல்லா வழக்குகளையும் பார்க்கின்ற நேரத்திலே பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றன. அவற்றிலே கண்டுபிடிக்கப்பட்டவை மிகக் குறைவாக இருக்கின்றன.



முற்பகல் 11-50

உதாரணத்திற்கு தருமபுரி மாவட்டம், ஓசூர் பகுதியிலே, மர்மக் கொலைகள் நிறைய நடக்கின்றன. அங்கே நிறைய வழக்குகளை ஆதாரத்தோடு சொல்லமுடியும். அவை நிரூபிக்கப்படாமல் இருக்கின்றன. குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதைப்போலவே, பெருந்துறையை அடுத்துள்ள, திங்களூர் பிரச்சினை. இங்கே எல்லோரும் பேசினார்கள். அதிலேயும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். பிறகு இன்னொரு பிரச்சினையை இங்கே எல்லா கட்சிக்காரர்களும் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மற்றப் பிரச்சினைகளைப் பற்றிப் பிறகு பேசலாம். இத்தோடு முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, முக்கியமான பிரச்சினை. அதை நான் சொல்லிவிடுகிறேன். இப்போது இந்த சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையிலே, City Police Act-41 இருக்கிறது. இது சுதந்திரம் பெறுவதற்கு முன்பு வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டுவரப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்தினால் காவல் துறைக்கு வானளாவிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு இங்கே போராட்டம் நடத்தக்கூடாது. ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் Fundamental Rights 19-ன்படி, அவர்கள் பேசுவதற்கு, சொல்வதற்கு உரிமை இருக்கிறது. உதாரணத்திற்கு, கர்நாடக மாநிலத்திலே A.G. அலுவலகத்திலே தமிழர்கள் பணியாற்றுகின்றார்கள் என்ற காரணத்திற்காக, அதற்குள்ளே சென்று அங்கே ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள், அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆனால், நம்முடைய சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே இங்கு நடத்தக்கூடாது, சேப்பாக்கம் செல்லவேண்டும். குறளகத்திற்குச் செல்லவேண்டுமென்று சொல்லப்படக்கூடிய நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே, ஜனநாயக ரீதியாக, அடக்கமான முறையிலே கருத்துகளைச் சொல்வதற்கு, வாய்ப்பு அளிப்பதற்கு, அந்த City Police Act-41-ஐத் திருத்த வேண்டும். தேவைப்பட்டால் அதை நீக்குவதே பொருத்தமாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். அதைப்போலவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** சட்டத் திருத்தம் மட்டும் இரண்டு சொல்லிவிடுகிறேன். அதைப்போலவே, 1996-லே டி.கே.பாஸ்—மேற்கு வங்காளப் பிரச்சினை, உச்ச நீதிமன்றத்திலே தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே 11 கட்டளைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலே சொல்லப்பட்ட 11 கட்டளைகளும் எல்லா காவல் நிலையங்களின் முன்னாலே விளம்பரப் பலகையாக வைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பல்வேறு இடங்களிலே வைக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, இப்போது கமிஷன் எல்லாம் அமைக்கப்படுகிறது. இப்போது நம்முடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, ஆறு கமிஷன்கள் அமைக்கப்பட்டன. இந்த 6-லே, 4 காவல் துறையைச் சார்ந்தவை. இதற்காக இலட்சக்கணக்கிலே, கோடிக்கணக்கிலே செலவழிக்கக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, இதிலேயெல்லாம் ஒரு சீர்த்திருத்தம் கொண்டுவரக்கூடிய வகையிலே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மனித உரிமை நீதிமன்றம் என்ற ஒரு நீதிமன்றத்தை நீங்கள் கட்டாயம் கொண்டு வரவேண்டும். நீதிமன்றம் இருக்கிறது. கட்டடம் இருக்கிறது. கூடுதலாக ஒருவரை நியமனம் செய்தால் போதும். இந்தச் செலவை அதிலேயே நாம் சரிக்கட்டி விடலாம். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வரக்கூடிய அந்த மனித உரிமை மீறல் பிரச்சினைகளையெல்லாம் அங்கே கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லி, அதைப்போலவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, முடித்துவிடுங்கள். அத்தோடு முடித்து விடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, இந்த வகையிலே நான் பல்வேறு கோரிக்கைகளைச் சொல்கிற நேரத்திலே, இங்கே பண்ருட்டி பகுதியிலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நேரமாகி விட்டது, நேரமாகி விட்டது. வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பிறகு பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) இல்லை, வேறு பொதுப் பிரச்சினை வேண்டாம். நேரமாகி விட்டது.

**திரு. ஜி.கே. மணி:** பண்ருட்டி பகுதியிலே 54 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரண உதவி வேண்டும். அதைப்போலவே காவல் துறையினுடைய சலுகை என்பது, பதவி உயர்வு



என்பது, ஊதிய உயர்வு என்பது மிக முக்கியமான பிரச்சினை. அதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டு, காவல் துறை புனிதத் தன்மையோடு இயங்க, நல்ல சீர்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, நன்றி சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஏதாவது கேட்க வேண்டுமானால் முதலமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு கேளுங்கள்.

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசினார்கள். நான் குறுக்கிடக் கூடாது என்றிருந்தேன். வேறு ஒன்றும் இல்லை. நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அவையிலே ஒரு பிரதான எதிர்க்கட்சி. ஆனால், பத்தே பத்து நிமிடங்கள்தான் எங்களுக்குக் கொடுத்தீர்கள். நான் மறுக்கவில்லை. இப்பொழுது ஒவ்வொரு கட்சித் தலைவர்களும் பேசினார்கள். இன்னும் நிறைய பேசவேண்டும். அதிலே நான் குறுக்கிடவில்லை. ஆனால், அந்தக் கட்சித் தலைவர்கள் எல்லாம் எவ்வளவு நேரம் பேசினார்கள்; எங்கள் கட்சி உறுப்பினர் எவ்வளவு நேரம் பேசினார் என்பதைத் தங்களுடைய மனச்சாட்சிக்கே விடுகிறேன். அடுத்த முறையாவது நியாயம் வழங்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து நிமிடங்கள் அல்ல. அவர் 15 மணித் துளிகளுக்கு மேலே பேசினார். எல்லாக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்கின்ற வகையிலேதான், 132 உறுப்பினர்களைக் கொண்ட ஆளுங்கட்சிக்கு ஒரேயொருவரை மட்டும்தான் பேசுவதற்கு நான் அனுமதித்தேன். இன்னும் சொல்லப்போனால், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களுடைய கண்ணிலே மண்ணைத் தூவி, நான் உங்களுக்கு வாய்ப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு) (குறுக்கீடு) எதிர்க்கட்சிகள் எல்லாவற்றிற்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். பிரதான எதிர்க்கட்சி எல்லாப் பிரச்சினைகளிலும் பேசக்கூடிய வாய்ப்பை நான் வழங்கிக் கொண்டிருக்கிறேன். எண்ணிக்கை கணக்கை நான் பார்க்கவில்லை. ஆகவே, இதிலே ஒன்றும் மனசாட்சிக்குப் புறம்பாக நான் நடக்கவில்லை என்பதை துரைமுருகன் அவர்களுக்கு நான் அழுத்தந்திருத்தமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு *முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பிறகு கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், முதலமைச்சர் பேசியதற்குப் பிறகு--

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கருத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் பதில் கிடைக்கும் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, பதிலுரையைச் சொன்னதற்குப் பிறகு கேளுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-55*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்திற்கு இப்போது எனது பதிலுரையை அளிக்க நான் உங்கள் முன் நிற்கிறேன்.

இந்த அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இத்தனை ஆண்டுகாலமாக பல்வேறு துறைகளின்மீது, பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீது எத்தனையோ விவாதங்கள் இந்த அவையில் நடைபெற்று இருக்கின்றன. அந்த விவாதங்களையெல்லாம் பார்க்கும்போது, பழைய குறிப்புகளைப் படித்துப் பார்க்கும்போது, நமக்குத் தெரிகின்ற உண்மை என்னவென்றால், மிகவும் கடுமையான விமர்சனம் என்பது எப்போதுமே காவல் துறை மீதுதான் சுமத்தப்படுகின்றது. எப்போதுமே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசின் எல்லா நடவடிக்கைகளையும் விமர்சிப்பார்கள். அது எதிர்க்கட்சிகளின் கடமை. அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். ஆனால், அப்போதுகூட, காவல் துறை பற்றிய மானியக் கோரிக்கை வரும்போது எதிர்க்கட்சிகள் இடத்திலே ஒரு தனி வேகம் காணப்படுகிறது. பல ஆண்டுகளாக, பல ஆட்சிகளில் நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களின் குறிப்புகளைப் பார்க்கும்போது, இவ்வளவு வேகம், இவ்வளவு ஆவேசம், இவ்வளவு கடுமை நிறைந்த விமர்சனங்கள் வேறு எந்த விவாதத்தின்போதும் இந்த அளவுக்கு இருப்பதில்லை என்பது தெரிகிறது. ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமானால், காவல் துறையின் செயல்பாடுகள், காவல் துறையின் நடவடிக்கைகள் பற்றிய விவாதம் வந்தாலே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு, ஏதோ அரசின் மீது ஒரு போர் தொடுக்கின்ற ரீதியில் ஒரு தனித் தாக்குதலையே நடத்துகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.



நான் கேட்க விரும்புகின்ற கேள்வி, காவல் துறையினர், உண்மையிலேயே இவ்வளவு கடுமையான விமர்சனத்திற்கு உரியவர்கள்தானா; காவல் துறையினர் மீது கூறப்படுகின்ற விமர்சனங்களெல்லாம் நியாயம்தானா என்பதுதான். காவல் துறையினர் மிகவும் கடுமையாக உழைக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வு என்பதே பெரும்பாலும் இருப்பதில்லை. மற்ற துறைகளில் இருக்கின்ற பணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது காவல் துறையினரின் பணிதான் மிகவும் கடினமானது; சிரமமானது; ஆபத்து நிறைந்தது. பெரும்பாலும் ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமானால், காவல் துறையில் பணியாற்றுவது என்பது, ஒரு thankless job. பொதுவாக, இராணுவம் என்றாலும், காவல் துறை என்றாலும் அதில் சேர்வதற்கு யாரும் விரும்பி அவ்வளவு ஆர்வத்தோடு வருவதில்லை. மற்ற துறைகளிலெல்லாம் எப்படியாவது ஓர் இடம் கிடைக்க வேண்டும்; இடம் பெற வேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்து, அந்த முயற்சிகளில் தோல்வியுற்றால்தான், வேறு எங்கேயும் வேலை கிடைக்கவில்லை என்றால்தான், ஏதோ ஒரு தொழில் செய்தாக வேண்டுமே, வயிற்றுப் பிழைப்பிற்காக ஏதோ ஒரு தொழிலில் ஈடுபட்டாக வேண்டுமே என்பதனால்தான் இராணுவப் பணிக்கும், காவல் துறைப் பணிக்கும் யாரும் வருகிறார்கள்.

காவல் துறையினரைப் பொறுத்தவரை, ஓர் உண்மையை எல்லோரும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்; ஒப்புக்கொண்டாக வேண்டும். காவல் துறையினர் எப்படிதான் கடமையாற்றினாலும், எப்படி பணியாற்றினாலும், எவ்வளவு உண்மையாக, எவ்வளவு sincere-ஆக, எவ்வளவு கடுமையாக உழைத்தாலும், அவர்களுக்கு இறுதியில் மிஞ்சுவது விமர்சனம்தான். Criticism தான். காவல் துறையை யாரும் பாராட்டுவதே இல்லை. ஆனாலும், காவல் துறையினர் தங்கள் கடமையைச் செய்து கொண்டே போகிறார்கள்.

மகாபாரதத்தில் கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கின்ற அந்தப் பகுதிதான் பகவத் கீதை. அதில் ஒரு ஸ்லோகம் வருகிறது.

*"கர்மண்யேவாதி காரஸ்தே மா பலேஷு கதாசந*
*மா கர்மபலஹேதுர்பூ ர்மா தே ஸங்கோஸ் த்வகர்மணி"*

அதாவது, கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்கு சொல்கிறார்.

"பணியாற்றத்தான் உனக்கு உரிமையுள்ளது. அதனால் உண்டாகும் பலனை அடைய உனக்கு உரிமை கிடையாது. உன்னுடைய ஒவ்வொரு செயலுக்கும் பலன் கிட்ட வேண்டும் என்ற ரீதியில் செயல்படாதே. அதேநேரம் செயல்படாமல், பணியாற்றாமல், கடமையைச் செய்யாமல் ஓய்வை விரும்பாதே" என்பது பொருள். மேலும் கிருஷ்ணர் சொல்கிறார்.

"தஸ்மா தஸக்த ஸததம் கார்யம் கர்ம ஸமாசர
அஸக்தோ ஹ்யாசரந்கர்ம பரமாப்நோதி பூருஷ"

அதாவது- ஆகவே எந்தவிதமான பற்றும் இல்லாமல், எதன்மீதும் பற்றும் வைக்காமல் திறமையுடன் உன்னுடைய கடமையைச் செய்து கொண்டே இரு. எதிலும் பற்று இல்லாமல் தனது கடமையைத் தொடர்ந்து செய்து கொண்டே போகும் மனிதன் முடிவில் பரமாத்மாவை அடைகின்றான் என்பது பொருள்.

*நண்பகல் 12-00*

இது எதற்காகச் சொல்லப்பட்டது? மகாபாரதம் என்பது பகவத் கீதை என்பது. ஏதோ ஒரு மதத்திற்குரிய ஓர் இதிகாசம் அல்ல, ஒரு நூல் அல்ல. வாழ்க்கைத் தத்துவத்தையே நமக்குப் போதிக்கின்ற ஒரு நூலாகும். It contains the profound philosophy of life. சாதாரணமாக உலகத்தில், சமுதாயத்தில் நிறைய கடினமான பணிகள் இருக்கின்றன. யாரும் விரும்பி ஏற்காத பணிகள் பல இருக்கின்றன. ஆனால் அந்தப் பணிகளை யாரும் விரும்பாவிட்டாலும், யாரோ சிலர் செய்துதான் ஆகவேண்டும். அப்போதுதான் சமுதாயம் ஒழுங்காக நடைபெறும். ஆனால் நிறைய பேர் கேட்பார்கள், இந்தப் பணியை நான் ஏன் எடுத்துக்கொள்ளவேண்டும்? இந்தப் பணியில் நான் ஏன் ஈடுபடவேண்டும்? இதனால் எனக்கு என்ன இலாபம்? எனக்கு என்ன நன்மை? இப்படி எல்லோரும் கேள்விகளை எழுப்பிக்கொண்டு, இதனால் தனக்கு எந்த நன்மையும் இல்லையென்று அந்தப் பணிகளை எடுத்துக்கொள்ளாவிட்டால், அந்தப் பணிகளைச் செய்ய முன்வராவிட்டால், சமுதாயமே ஸ்தம்பித்துப் போய்விடும். உலகமே ஸ்தம்பித்துப் போய்விடும்.

அதனால்தான் பெரியவர்கள் இத்தகைய உபதேசங்களைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் இத்தகைய ஒரு மனப்பான்மையை—



இந்த பகவத் கீதையில் பற்றே இல்லாமல் உன்னுடைய கடமையைச் செய்துகொண்டே இரு, பலனை எதிர்பார்க்காதே என்று சொல்கின்ற இந்த உபதேசம் இருக்கிறதே, இத்தகைய ஒரு மனப்பான்மையை—சராசரி மனிதர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்க முடியுமா? இத்தகைய ஒரு மனப்பான்மை இருக்க வேண்டும் என்றால், ஞானிகளாக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் உணர்ந்து, அனுபவித்து, துறந்து, அறிவு முதிர்ச்சி பெற்ற வயதில் முதிர்ந்து ஞானிகளாக இருந்தால், அப்படி பற்றே இல்லாமல் எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் கடமையைச் செய்துகொண்டே இருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் சராசரி மனிதன் எதை விரும்புகின்றான்? தான் ஒரு பணியை ஆற்றினால் அந்தப் பணியின் பலன், இலாபம், தனக்குக் கிட்டவில்லை என்று சொன்னாலுங்கூட, குறைந்தபட்சம் ஒரு பாராட்டு மொழி, ஒரு நல்ல வார்த்தை - சரி, உன் கடமையை நீ நன்றாகச் செய்தாய் என்ற அந்த ஒரு நல்ல வார்த்தையாவது—இருக்க வேண்டும். தனது பணிக்கு, தான் கடமையைச் சிரத்தையோடு ஆற்றியதற்கு, ஓர் அங்கீகாரம் வேண்டுமென்று நினைக்கிறான். அதுதான் மனித இயல்பு.

இதைப் பெரியோர்கள் உணர்ந்ததால்தான் நாம் உலகத்தில் பல நடைமுறைகளைக் காண்கிறோம். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பணிகளுக்கும் பரிசுகள், விருதுகள், சன்மானங்கள், பதக்கங்கள் என்று கொடுக்கிறார்கள். இவையெல்லாம் incentives என்ற முறையில் ஊக்குவிப்பதற்காகக் கொடுக்கப்படுபவை. இவற்றை எல்லாம் கொடுத்தால் மனிதர்கள் தங்களுடைய பணிகளை இன்னும் சிறப்பாக ஆற்றவேண்டுமென்று விரும்புவார்கள். தங்களுடைய திறமைகளை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புவார்கள். அவர்களுடைய திறமைகளை இன்னும் மேம்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் விரும்புவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் அவர்களை உற்சாகப்படுத்துவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும்தான் இத்தகைய விருதுகளும் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

நர்சரிப் பள்ளிகளில் பயிலும் சின்னக் குழந்தைகளுக்குக்கூட பரிசுகள் வழங்கப்படுகின்றன. நர்சரிப் பள்ளிகளிலிருந்து தொடங்கி பெரியவர்களாகி, உலகத்தில் இருக்கின்ற எந்தத் துறையாக இருந்தாலும் அதில் ஈடுபடுகின்ற அத்தனைபேருக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. நம்நாட்டிலேயே மேல் மட்டத்தில், விளையாட்டுத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு Arjuna Awards—

அர்ஜுனா விருதுகள் வழங்கப்படுகின்றன. பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன. பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் என்று. இன்னும் உலக அளவில், சர்வதேச அளவில் நோபெல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இவையெல்லாம் எதற்காக வழங்கப்படுகின்றன? பொதுவாக இத்தகைய விருதுகள், இத்தகைய பரிசுகள், இத்தகைய கௌரவங்கள் அளிக்கப்படும்போது பெரும்பாலும் அனைவரும் அவற்றை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார்கள். காரணம், அவர்கள் செய்த பணிக்கு அவர்கள் ஆற்றிய கடமைக்கு, அவர்களுடைய திறமைக்கு, அவர்களுடைய கடமையுணர்வுக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்தது என்ற ஆத்ம திருப்தி அவர்களுக்கு ஏற்படுகிறது.

*பிற்பகல் 12-05*

இத்தகைய இன்சென்டிவ்கள், இத்தகைய உற்சாகப்படுத்தும், ஊக்குவிக்கும் விருதுகளை, பரிசுகளைக் கொடுக்கவில்லையென்றால், பொதுவாக யாருமே இன்னும் நன்றாகச் செயல்பட வேண்டும், இன்னும் திறமையாக கடமையாற்ற வேண்டுமென்று விரும்ப மாட்டார்கள். ஆகவே, எல்லா மனிதர்களுக்கும் இத்தகைய ஓர் அங்கீகாரம் தேவைப்படுகிறது. நம்மில் பெரும்பாலானவர்களுக்கு ஒரு விருதுகூட வேண்டாம். ஒரு பரிசுகூட வேண்டாம். ஆனால், ஒரே ஒரு பாராட்டு போதும். அப்படித் தட்டிக் கொடுத்தால் போதும் என்ற அளவில்தான் காவல் துறையினரும் இருக்கிறார்கள். இந்தப் பொது விதிக்கு காவல் துறையினர் விதிவிலக்கல்ல. காவல் துறையினர் இயந்திரங்கள் அல்ல. அவர்களும் சராசரி மனிதர்கள்தான். பொதுவாக, அவர்கள் கடினமான பணியை, சிரமமான பணியை மேற்கொள்ளும்போது, சதாசர்வகாலமும் அவர்களை விமர்சித்துக்கொண்டேயிருந்தால், அவர்கள்மீது அவதூறு சேற்றை வாரி இறைத்துக்கொண்டேயிருந்தால், அவர்கள்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்திக்கொண்டேயிருந்தால், சதாசர்வகாலமும் இப்படியே அவர்களை நாம் விமர்சித்துக் கொண்டேயிருந்தால், அப்படிப்பட்ட விமர்சனங்களுக்கு ஆளாகிறவர்களுக்கு, தொண்டு செய்ய வேண்டும், பணி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்படி வரும்? உற்சாகத்துடன் கடமையாற்ற வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்படும்? நாம் எவ்வளவு செய்தாலும், எவ்வளவுதான் உழைத்தாலும், எவ்வளவு சிரத்தையோடு கடமையாற்றினாலும், நம்மை இப்படி அபாண்டமாகப் பழி போட்டு விமர்சிக்கிறார்களே, எப்போதும் நமக்கு வசை மொழிதானே மிஞ்சுகிறது என்ற எண்ணம் வந்துவிட்டு, நாம் ஏன் கடமையாற்ற வேண்டும். நாம்



ஏன் பணி செய்ய வேண்டும், ஏன் இந்த சிரமத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணினால் காவல் துறையினருக்கு இப்படி ஒரு மனச் சோர்வு ஏற்பட்டு, அவர்கள் சோர்ந்து போய்விட்டால், அவர்கள் அடியோடு demoralise ஆகிவிட்டால், அவர்கள் பணி செய்வதையே நிறுத்திவிட்டால், இந்தச் சமுதாயமே ஸ்தம்பித்துப் போய்விடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எதுவுமே செயல்பட முடியாது.

இன்றைக்கு இந்த மாமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாம் எல்லாம் இங்கே குளிர்சாதன வசதியுடன்கூடிய இந்த அரங்கில் அமர்ந்துக் கொண்டிருக்கிறோம். எப்படி இங்கே எந்த இடையூறும் இல்லாமல், எந்த ஆபத்தும் இல்லாமல் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகிறது? வெளியிலே, வெயிலிலே காய்ந்துகொண்டு, காவல் துறையினர் நிற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களால்தான் இன்றைக்கு நாம் இங்கே நல்லமுறையில் எந்த இடையூறும் இல்லாமல், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரை நடத்த முடிகிறது. எல்லா துறைகளிலும் அப்படித்தான். காவல் துறை சரியாக இயங்கவில்லை. காவல் துறை தனது கடமையைச் செய்யவில்லை, காவல் துறையினரே தவறு செய்கிறார்கள். இப்படி எல்லோரும் விமர்சிக்கிறார்கள். ஆனால், காவல் துறையினர் செவ்வனே தங்கள் கடமையை ஆற்றிக்கொண்டிருப்பதால்தான் சமுதாயம் ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எல்லோரும் அவர்களுடைய அன்றாடப் பணிகளைச் செவ்வனே ஆற்ற முடிகிறது. இங்கே இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுவதற்கு காரணமும் காவல் துறையினர்தான். வெளியிலே பல்வேறு அலுவலகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று சொன்னால், அவை அமைதியாகச் செயல்படுவதற்கும் காரணம் காவல் துறையினர்தான். ஆனால், எல்லோரும் அதைப்பற்றிச் சிந்திக்காமலே சர்வசாதாரணமாக காவல்துறையினரை ஏசுகிறார்கள். தவறாகப் பேசுகிறார்கள். இது ஒரு வாடிக்கையாகிவிட்டது. It has become a matter of habit. அரசியல்வாதிகளிலிருந்து தொடங்கி, அரசியல் கட்சித் தலைவர்களிடமிருந்து தொடங்கி, சராசரி மனிதர்கள் வரை, பொது மக்கள் வரை, எல்லோரும் காவல் துறையினரை விமர்சிக்கிறார்கள். ஏசுகிறார்கள். காவல் துறையினர் சதாசர்வகாலமும் இத்தகைய ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் வாங்கிக்கட்டிக்கொள்ளும் நிலையிலேதான் இருக்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் அதற்கு பதில் சொல்ல முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. இது சர்வசாதாரணமாக நடக்கிற ஒன்று.

*பிறபகல் 12-10*

ஓர் உதாரணத்தை நான் சொல்கிறேன். உங்களுக்கு எல்லாம் தெரியும். தினமும் பிற்பகலில் இங்கே கோட்டை வளாகத்தில் வருகின்ற பொது மக்களிடமிருந்து நான் மனுக்களைப் பெற்றுக்கொள்கிறேன். ஆயிரக்கணக்கில் மக்கள் இங்கே வந்து கூடிவிடுகிறார்கள். இவர்களை ஒழுங்குப்படுத்த, கட்டுப்படுத்த காவல் துறையினர் அங்கே பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆண் காவலர்களும் இருக்கிறார்கள். பெண் காவலர்களும் இருக்கிறார்கள். கடந்த வாரம் ஒரு நாள் நான் ஒருவரிடம் மனுவைப் பெற்றுக்கொண்டு, அவரைக் கடந்து நான் சென்று விட்டேன். அப்போது திடீரென்று, மனு கொடுத்துவிட்ட அந்த நபர் அங்கே காவலுக்கு நின்றிருந்த காவலருடன் ஒரு வாக்குவாதத்தை ஆரம்பித்தார். 'என்னய்யா அம்மாவை பார்க்க விடமாட்டேன் என்கிறீங்க. என்னய்யா நெருங்க விடமாட்டேன் என்கிறீங்க, என்னய்யா அராஜகம் பண்ணுகிறீங்க' என்று ஏதோ, ஏதோ பேச ஆரம்பித்துவிட்டார். சத்தம் போட ஆரம்பித்துவிட்டார். நான் அதுவரை, சற்று தூரம் கடந்து சென்று விட்டேன். இந்தச் சத்தத்தைக் கேட்டு நான் திரும்பி வந்தேன். பார்த்தால், அந்தக் காவல் துறையினர்—அந்தக் காவல் துறை Constable அமைதியாக நின்று கொண்டிருந்தார். அவர் ஒன்றும் செய்யவில்லை. அவர் பேசவும் இல்லை; கையை நீட்டவும் இல்லை. ஆனால், மனு கொடுக்க வந்தவர்— மனு கொடுத்தவர், அவரைப் பார்த்து சரமாரியாகத் திட்டிக் கொண்டே இருந்தார். அப்போது, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் அவரிடத்தில் சென்றேன். "இப்போது எதற்கு சத்தம் போட்டீர்கள்?" என்று கேட்டேன். " இதோ பாருங்கள் அம்மா! நான் உங்களைப் பார்ப்பதற்கு மதுரையிலே இருந்து வந்திருக்கிறேன்; இத்தனை கிலோ மீட்டர் தூரத்திலே இருந்து வந்திருக்கிறேன்" என்றார். "ஏன், என்னைப் பார்த்துவிட்டீர்கள் இல்லையா?". "ஆமாம், பார்த்துவிட்டேன்; உங்களிடம் மனு கொடுக்க நான் இவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருந்தேன்!" "சரி, மனு கொடுத்து விட்டீர்கள் இல்லையா?" "கொடுத்துவிட்டேன்." "அப்புறம், ஏன் நீங்கள் வீணாக இந்த Constable கூட சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அவருடைய கடமையை ஆற்றவிடாமல், நீங்கள் ஏன் அவருக்கு இடையூறு செய்கிறீர்கள்? இப்படியெல்லாம் சத்தம் போடாதீர்கள், போங்கள்" என்று நான் சொன்ன பிறகு, அவர் போய்விட்டார். ஆக, இதுதான் தினமும் காவல் துறையினர் சந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலையாக இருக்கிறது.



முதலமைச்சர் முன்னிலையிலேயே, முதலமைச்சர் இருக்கின்ற இடத்திலேயே, தேவையின்றி, காரணமேயின்றி, எந்த அடிப்படையும் இன்றி, பொதுமக்களில் ஒருவர், சாதாரணமாக நின்று கொண்டிருக்கின்ற, கூட்டத்தை அமைதிப்படுத்துவதற்காக நின்று கொண்டிருக்கின்ற, ஒரு கான்ஸ்டபிளிடம் இப்படி வம்புச் சண்டை போடுகிறார்; அவரை வம்புக்கு இழுக்கிறார் என்று சொன்னால், மற்ற இடங்களில் எல்லாம் என்ன நடக்கும் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன். உங்களுக்கே நன்றாகத் தெரியும். என்னுடைய கேள்வி, அன்றைக்கு நான் தலையிடாவிட்டால், இந்த வாக்குவாதம், வாய்ச்சண்டை, இன்னும் பெரிதாகப் போயிருக்கும். அது எங்கே போய் முடிந்திருக்கும் என்று சொல்ல முடியாது. ஒருவர், காரணமே இல்லாமல், தன்னைத் திட்டிக் கொண்டே இருந்தால், காவல் துறையில் பணியாற்றுபவர்களுக்கும் சகிப்புத் தன்மைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? எவ்வளவு நேரம் நின்று அதை அவர் தாங்கிக் கொண்டிருப்பார்? எவ்வளவு நேரம் பேசாமல், அந்த வசைமொழிகளை அவர் வாங்கிக் கட்டிக்கொள்வார்? இருந்தாலும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தினம்தினம் சந்திக்க வேண்டி வந்தாலும், காவல் துறையினர், தங்கள் கடமையைச் செய்து கொண்டேதான் இருக்கிறார்கள்.

இங்கே பேசிய பலர், காவலர்கள், காவல் துறையினர் தவறு புரிந்தால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நியாயம்தான்; தவறு இல்லை. பொதுவாக, காவல் துறையினர் தவறு செய்தால், அது அரசின் கவனத்திற்கு வந்தால், அந்தத் தவறு செய்தார்கள் என்பது நிரூபணம் ஆகிவிட்டால், அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படுகிறது. அவர்கள் suspend செய்யப்படுகிறார்கள். பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள். dismiss செய்யப்படுகிறார்கள். பலமுறை அவர்கள் கைதும் செய்யப்படுகிறார்கள். ஆனால், இந்தக் காவல் துறையினரை தினந்தோறும் இப்படித் திட்டுகிறார்களே, வசைமொழி பாடுகிறார்களே, தேவையின்றி, காவல் துறையினரை சீண்டி, அவர்களுடைய கடமையை ஆற்றவிடாமல், அவர்கள்மீது அவதூறாக, அவதூறு சேற்றை அள்ளி வீசுகிறார்களே, அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் எந்த தண்டனையும் பெறாமல், தங்குதடையின்றி திட்டிக்கொண்டே போகிறார்கள். இது நியாயமா என்று உங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். இதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சராசரி மனிதர்கள் மட்டுமல்ல; அரசியல் கட்சித் தலைவர்கள் கூட, இந்தக் குற்றத்தை, இந்தத் தவறை செய்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்கள்கூட, காவல் துறையின் ஈரல் கெட்டுப் போய்விட்டது என்றெல்லாம் காவல் துறையை ஏசியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது விவாதத்தைத் தொடங்கி வைத்து நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் பேசிய பேச்சுகள் அனைத்தும் வசைமாரியாகவே இருந்தன. வாய்க்கு வந்தபடி வசவுகளைச் சொல்லி, அர்ச்சனை பாடியிருக்கிறார் அவர். ஒருவேளை அவருடைய தலைவர் திரு. கருணாநிதி காட்டிய வழியில் அவரும் உரை நிகழ்த்த விருப்பம் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அத்தகைய நடையில் பேசியிருக்கிறார் என்றுதான் கருத வேண்டும்.

1996 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், மே மாதம் 28-ஆம் நாள் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது இந்தச் சட்டமன்றப் பேரவையில் உரையாற்றும்போது, காவல் துறையைக் குறிப்பிட்டு, 'ஈரல் கெட்டுப் போச்சு' என்று சொன்னவர்தான், அவருடைய தலைவர் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று திரு. கருணாநிதி அவர்கள் பேசியது. "இன்னும் போலீசார் பழைய போக்கிலேயே இருக்கிறார்களோ என்ற சந்தேகம் இருப்பதாக, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மனித உடலில், ஈரல் முக்கியமான உறுப்பு. அதிகமாகக் குடிப்பவர்களுக்கு அந்த ஈரல் கெட்டுப்போய், உயிருக்கே ஆபத்து வருவதுண்டு. ஆனாலும், கெட்டுப்போன ஈரல், பெரும்பகுதி கெட்டுப்போனாலும் மீதம் மிகச் சிறிய அளவு என்று சொன்னாலும் உயிருக்கு ஆபத்து இல்லை; அவரை பிழைக்க வைத்துவிடலாம் என்பது மருத்துவ நிபுணர்களுடைய கணிப்பு. தமிழகத்திலே காவல் துறை என்ற ஈரல் முக்கால் பகுதி கெட்டுப்போய், கால் பகுதிதான் மிச்சம் இருக்கிறது. அந்தக் கால் பகுதியை வைத்துக் கொண்டு, இந்த அரசு என்கின்ற மருத்துவர் இந்த மாநிலத்தை உயிர்ப்பிக்கலாம் என்ற கருத்தோடு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது" என்று பேசி இருக்கிறார்.



பிற்பகல் 12-15

மீண்டும் 1996-97 ஆம் ஆண்டுக்குரிய காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது பதிலுரை ஆற்றுகின்றபோது முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். அதாவது ஈரல் 75 சதவீதம் கெட்டுவிட்டதைப்போல, காவல் துறை கெட்டுவிட்டது என்று குறிப்பிட்டதாகவும், கெட்டுப்போன ஈரலை குணப்படுத்துகின்ற பணியை அரசு மேற்கொண்டு இருப்பதாகவும், அதிலே வெற்றி பெற்று இருப்பதாகவும், 75 சதவீதம் கெட்டுப்போன ஈரலில் 50 சதவீதம் தப்பித்துக்கொண்டு விட்டது என்று நம்பிக்கை தருவதாகவும் குறிப்பிட்டு இருந்தார்.

அதற்கு அடுத்தாற்போல் 1997-98 ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி உரையாற்றுகின்றபோது, 75 சதவீதம் கெட்டுவிட்ட அந்தக் காவல் துறையை கடந்த ஓராண்டு காலத்தில் அரசு எடுத்த முயற்சிகளின் காரணமாக, அந்த ஈரல் 60 சதவீதம் நல்லவிதமாக அமைக்கப்பட்டு இருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும், மீதமுள்ள 40 சதவீதம் பற்றித்தான் இங்கே எல்லோரும் பேசினார்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார். அதாவது ஒரே வருடத்தில் 70 சதவீதம் கெட்டுப்போன ஈரலை அவர் 60 சதவீதம் குணப்படுத்திய மாபெரும் டாக்டராக இருந்திருக்கிறார் என்றுதான் கூறவேண்டும். அதற்கு அவர் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

ஆளும் கட்சிக்கு தாளம் போடாதவர்கள் எல்லாம் உடனடியாக தூக்கி அடிக்கப்பட்டார்கள். கன்னாபின்னாவென்று எல்லோரையும் மாற்றினார்கள். பல I.A.S. அதிகாரிகள் மீதும், பல I.P.S. அதிகாரிகள் மீதும் புனைந்துரைக்கப்பட்ட, ஜோடிக்கப்பட்ட வழக்குகளைப் போட்டு அடக்கினார்கள். என்மீதே ஜோடிக்கப்பட்ட வழக்குகளைப் போட்டவர்களுக்கு இதெல்லாம் எம்மாத்திரம்! (மேசையைத் தட்டும் ஒலி). அப்பாவியான சில அதிகாரிகளைப் பிடித்து சிறையில் அடைத்தார்கள். ஆங்காங்கே தி.மு.க. குண்டர்களை ஏவி, காவல் துறை அதிகாரிகளை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்கள். பின்னர் காவல் துறை என்னும் ஈரல் சரியாகிவிட்டது என்ற பேச்சு வேறு; இதுதான் இங்கே நடந்திருக்கிறது.

ஆனால் 1999-2000 ஆம் ஆண்டு காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்திற்கு பதில் அளித்துப் பேசிய அதே திரு. கருணாநிதி,

அந்த ஈரல் கெட்டுப்போச்சு என்ற பேச்சு தவறான விளைவுகளை உருவாக்கிவிட்டது என்பதால், அதை அவர் உணர்ந்ததால், அப்படியே தனது நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு என்ன பேசினார்; கேளுங்கள். அவர் சொன்னார்; "பொதுவாக காவல் துறை மானியம் என்றால், எதிர்க்கட்சி ஓர் இலக்கணம் வகுத்துக்கொள்வதுண்டு. வேகமாகப் பேசுவது, தாக்கிப் பேசுவது, காவல் துறையை கடுமையாக விமர்சிப்பது என்பதுதான் இலக்கணம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அது ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், காவல் துறை மானியத்திலே பேசுகிற நேரத்தில் ஓர் இலக்கணத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் வாயிலாக நாங்கள் உணர்ந்து அதனைத்தான் இந்த அவையிலே தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் மற்றும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்று இந்த அவையிலே நடந்துகொண்டவிதம், பேசிய பேச்சுக்கள் அனைத்தும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுக் கொடுத்தவைதானா என்று கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி 1962 ஆம் ஆண்டு பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது இந்த அவையில் பேசியதை மேற்கோள் காட்டியுள்ளார். 1962-ல் திரு. கருணாநிதி பேசியதாவது. (குறுக்கீடுகள்) 1962-ல் திரு. கருணாநிதி பேசியதாவது:

"வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்தியத் துணைக் கண்டத்தில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நமது மாநிலத்தில் இருக்கிற போலீசார் தங்களுடைய கடமையை ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கடும் மழையிலும், கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும் தங்களுடைய பணியினை கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்கள் மத்தியிலேயும் தங்கள் உயிரைப் பற்றிய கவலை இல்லாமல் மரணத்தை துச்சமாக மதித்து கடமைக்காக போராடி வருகின்ற அந்தத் தியாக சீலர்களை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது" என்று தெரிவித்திருக்கிறார்.

பிற்பகல் 12-20

இப்படி திரு. அன்பழகன் அவருடைய தலைவரே திடீரென்று ஞானோதயம் பெற்று காவல் துறையைப் பற்றி உயர்வாகப் பேசியிருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் ஜெ. அன்பழகன் பொத்தாம்



பொதுவில் தமிழக காவல் துறையை ஒட்டுமொத்தமாகக் குறை கூறிப் பேசலாமா?

மேலும் அன்றைய பேச்சின்போது முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி சொல்லியிருக்கிறார்; "ஒரு டாக்டர் தவறு செய்துவிட்ட காரணத்தால் அல்லது 10 டாக்டர்கள் தவறு செய்துவிட்ட காரணத்தால் மாநிலத்தில் இருக்கின்ற 10000 டாக்டர்களும் தவறானவர்கள் என்று பொருள் கொள்ள முடியாது. காவல் துறையிலும்கூட சில பகுதியினர் தவறான சில செயல்களிலே ஈடுபடுகிறார்கள் என்பதற்காக மொத்தமாக காவல் துறையை நாம் புண்படுத்துவது அதற்கு எதிரான கருத்துகளை எடுத்துக் கூறுவது கூடாது. அவர்களும் ஒரு வகையான தொழிலாளிகள்தான், அவர்களும் பாட்டாளிகள்தான், அவர்களும் இந்த அரசிலே மக்களுக்காக தங்களுடைய கடமைகளை ஆற்றுவதற்காக தங்களை முழுவதுமாக ஒப்படைத்துக் கொண்டவர்கள்தான் என்கிற உணர்வோடுதான் இதை அணுக வேண்டி இருக்கிறது" என்று கூறியிருக்கிறார். ஆகவே, இப்போதுள்ள காவல் துறையினரும், தி.மு.க. ஆட்சியின்போது இருந்த காவல் துறையினரும் ஒரே காவல் துறையினர்தான். பொதுவாக, காவல் துறையினரை குற்றம் சொல்லும்போக்கு எப்போதுமே எதிர்க்கட்சிகளிடம் உண்டு. அந்தவகையில் மாண்புமிகு உறுப்பினர் ஜெ. அன்பழகன் இந்த ஆண்டும் பொதுவாக காவல் துறைமீது குற்றம் சாட்டியுள்ளார். அதாவது அவர், பேரறிஞர் அண்ணா, அவருடைய தலைவர் ஆகியோர் காவல் துறையினர்மீது கொண்டிருக்கும் கருத்துகளுக்கு மாறாக தன்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளார் என்றுதான் நான் கருதுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் முடித்த பிறகு கடைசியில் நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் முடித்த பிறகு வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** சென்னை வடபழனியில் சுமதி கொலை வழக்கு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் இங்கே நேற்று பேசினார். குற்றவாளி தானாகவே சரணடைந்தபோது காவல் துறையினர் தாங்கள் தேடிப்பிடித்து அவரை கைது செய்ததாக ஏதோ நாடகம் ஆடியதுபோல அவர் இங்கே தெரிவித்தார். கடந்த 4-4-2002 அன்றும், 8-4-2002 அன்றும் இந்த மாமன்றத்தில் சென்னை

வடபழனியில் வசித்துவந்த சுமதி என்ற பெண்மணி கொலை செய்யப்பட்டு இறந்து போனது குறித்த வழக்கு சம்பந்தமாக சில தகவல்களை இந்த அவையிலே தெரிவித்திருந்தேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் இந்தக் கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட திரு. முனியசாமி என்பவர் எற்கெனவே 4-4-2002 அன்றே சரணடைந்துவிட்டார் என்றும், அதுபற்றிய விவரம் ஒ்ரு வாரப் பத்திரிகையிலே படத்துடன் வந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டு ஏற்கெனவே சரணடைந்த ஒருவரை காவல் துறையினர் தேடிப் பிடித்ததாகக் கூறுவதாகவும், முதலமைச்சர் இதுசம்பந்தமாக காவல் துறையினரை பாராட்டி இருப்பதையும் குறை கூறி உள்ளார். இதில் சில விவரங்களை இந்தப் பேரவைக்குக் கூற விரும்புகிறேன்.

இந்த வழக்கு சம்பந்தமாக நடைபெற்ற முதற்கட்ட விசாரணையின்போது முனியசாமி 2-4-2002 அன்று காலை 10 மணியளவில் சுமதியின் வீட்டிற்குச் சென்றதாகவும், அப்போது கதவு தாழிடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்து, தனக்கும் அந்தக் குற்றத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் உறுதியாக மறுத்துவிட்டார். அவர்மீது காவல் துறையினுடைய சந்தேகம் உறுதி செய்யப்படாத நிலையிலும், போதுமான ஆதாரம் சேகரிக்கப்படாத நிலையிலும் முதற்கட்ட விசாரணைக்குப் பிறகு மறுநாள் மீண்டும் விசாரணைக்கு ஆஜராகும்படி அவர் அனுப்பப்பட்டார். ஆனால் அவ்வாறு அனுப்பப்பட்ட முனியசாமி மறுநாள் விசாரணைக்கு ஆஜராகவில்லை. காவல் துறை தன்மீது சந்தேகப்பட்டு தேடி வருவதை அறிந்த முனியசாமி தலைமறைவானார். அப்போது அவர் தமது வழக்கறிஞரை அணுகியுள்ளார். 4-4-2002 அன்று முனியசாமியின் வழக்கறிஞர் முனியசாமியை காவல் ஆணையர் முன்பு ஆஜர்படுத்தியது உண்மைதான். ஆனால் முனியசாமி குற்றவாளியாக ஆஜர்படுத்தப்படவில்லை. விசாரணைக்காகத்தான் அவரது வழக்கறிஞர் அவரை ஆஜர்படுத்தியுள்ளார் என்று தெரிகிறது. அந்த விசாரணையின்போது முனியசாமி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக தான் செய்த குற்றத்தை மறுத்துக் கூறினார். அப்போதும் சரியான ஆதாரங்கள் கிடைக்காததால் மீண்டும் மறுநாள் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் எனக் கூறப்பட்டு அவர் அனுப்பப்பட்டுவிட்டார். ஆனால் அவர் விசாரணைக்கு மீண்டும் ஆஜராகாமல் தலைமறைவாகிவிட்டார். இதுவே காவல் துறையினருக்கு இவர்மீது சந்தேகம் ஏற்பட வழிவகுத்தது. காவல் துறையினர் தொடர்ந்து முயற்சி செய்து வலுவான ஆதாரங்கள் கிடைத்த பிறகு, முனியசாமிதான்



அந்தக் கொலையை செய்திருக்க வேண்டும் என முடிவு செய்து அவரை தீவிரமாக தேட ஆரம்பித்தார்கள். பின்பு அவர் சென்னை அசோக் நகர் 100 அடி சாலையில் அமைந்துள்ள ஒரு தனியார் உணவு விடுதியில் 7-4-2002 அன்று மாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டார். கொள்ளையடிக்கப்பட்ட நகைகள், பட்டுச்சேலை மற்றும் ரொக்கம் 10,000 ரூபாய் ஆகியவை அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. 8-4-2002 அன்று நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார். மேற்கண்ட தகவலைத்தான் சுருக்கமாக 8-4-2002 அன்று இந்தப் பேரவையில் நான் தெரிவித்தேன். ஆகவே சரண் அடைந்த ஒருவரைக் காவல் துறையினர் கைது செய்ததாகக் காட்டிக் கொண்டனர் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது தமிழ்நாட்டில் உள்ள ஜனத்தொகைக்கு ஏற்ப இங்கே காவல் துறையினரின் எண்ணிக்கை அமையவில்லை என்று குறுப்பிட்டார். தமிழ்நாட்டின் இன்றைய ஜனத்தொகை 6,21,10,839 ஆகும். அதாவது 6 கோடியே 22 இலட்சம் என்று எடுத்துக்கொள்ளலாம். அதிகாரிகள் உட்பட தமிழ்நாட்டில் இருக்கின்ற காவலர்களின் எண்ணிக்கை 80,278 ஆகும். ஒரு இலட்சம் பொதுமக்களுக்கு பாதுகாப்பாகப் பணியாற்றுகின்ற காவலர்களின் எண்ணிக்கை 129 என்ற வகையிலே அமைகின்றது. இந்த விகிதத்தை தேசிய விகிதமான 130 என்பதுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நமக்கு ஒரு மன நிறைவு ஏற்படுகிறது. இதுவே 1997 ஆம் ஆண்டில் 124 ஆகவும், 1999 ஆம் ஆண்டில் 129 ஆகவும் இருந்து உள்ளது. இருப்பினும் இந்த விகிதத்தை அதிகப்படுத்த நாம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலம் கூடுதல் காவலர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து உள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1999 ஆம் ஆண்டு நிலவரப்படி இதே பொதுமக்கள், காவலர் விகிதம் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் 99 ஆகவும், கர்நாடக மாநிலத்தில் 98 ஆகவும் கேரள மாநிலத்தில் 118 ஆகவும் உள்ளது. இந்த ஆண்டு 2002-ல் இந்த விகிதம் சற்று கூடியிருக்க வாய்ப்பு உண்டு. மேலும், மேற்கு வங்காளத்தில் இந்த விகிதம் 108 என்றும், உத்திரப்பிரதேசத்தில் 99 என்றும், மத்தியப்பிரதேசத்தில் 123 என்றும், பீஹாரில் 96 என்றும் இருப்பதை நாம் காண முடிகிறது. ஆனால் சிறிய மாநிலங்களில் இந்த விகிதம் சற்று அதிகமாக உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 1996 மே முதல் 1997 மே வரையிலான காலத்தில் நிகழ்ந்த பல்வேறு குற்ற நிகழ்வுகளுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் மே 2001 முதல் மார்ச் 2002 வரையிலான காலத்தில் நிகழ்ந்த குற்ற நிகழ்வுகளுக்கும் உள்ள ஓர் ஒப்பீட்டை எடுத்துக்கூற விரும்புகிறேன். பெரும் திருட்டுக்களைப் பொறுத்தவரையில் கடந்த தி.மு.க. அரசின் முதல் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 23,680 குற்றங்கள் நிகழ்ந்து உள்ளன என்ற விவரம் என்னிடம் உள்ளது. ஆனால் நான் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு 2001-2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற பெரும் திருட்டுக்களின் எண்ணிக்கை 14,695 மட்டும் தான். கடந்த தி.மு.க. ஆட்சியின் முதல் ஆண்டில் நிகழ்ந்த, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 4,038. ஆனால் எனது தலைமையில் அமைந்த இந்த ஆட்சியில், கடந்த ஓராண்டில் 1,437 குற்றங்கள் மட்டும்தான் நிகழ்ந்து உள்ளன. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் 2001-2002 ஆம் ஆண்டில் 85 கொலைக் குற்றங்கள் நிகழ்ந்து உள்ளன. ஆனால் பிற பெரு நகரங்களில் 2001-2002 ஆம் ஆண்டில் நடந்த கொலைக் குற்றங்கள், மும்பையில் 295, டெல்லியில் 547, அதேபோன்று 2001-2002 ஆம் ஆண்டில் சென்னையில் நிகழ்ந்த கூட்டுக் கொள்ளைகள் 12. ஆனால் அதே காலகட்டத்தில் மும்பையில் 61, டெல்லியில் 48 நிகழ்ந்து உள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த வழிப்பறி குற்றங்கள் 127. அதே காலகட்டத்தில் கொல்கத்தாவில் 147, மும்பையில் 406, டெல்லியில் 624. 2001-2002 ஆம் ஆண்டில் சென்னையில் 668 களவு குற்றங்கள் நடந்து உள்ளன. ஆனால் இதே காலக்கட்டத்தில் டெல்லியில் 3,453-ம், மும்பையில் 2,867-ம் ஆகிய எண்ணிக்கையில் குற்றங்கள் நிகழ்ந்து உள்ளன. ஆகவே, முந்தைய தி.மு.க. அரசின் முதல் ஆண்டில் நடைபெற்ற குற்ற நிகழ்வுகளைவிட இந்த ஆட்சியில் இதுவரை நடைபெற்ற குற்ற நிகழ்வுகள் பல்வேறு பிரிவுகளிலும், மிகக் குறைவாகவே உள்ளன என்பதை பல்வேறு புள்ளி விவரங்கள் மூலம் நான் எடுத்துக்கூற முடியும்.

பிற்பகல் 12-30

அதேபோன்று இந்த ஆட்சியில் நமது நாட்டில் உள்ள ஏனைய பெரு நகரங்களான டெல்லி, கொல்கத்தா, மும்பை ஆகிய பெருநகரங்களில் 2001-2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற குற்ற நிகழ்வுகளைவிட சென்னையில் இதே காலகட்டத்தில் நடைபெற்ற குற்ற



நிகழ்வுகள் மிகக் குறைவு என்பதையும் புள்ளிவிவரங்கள் மூலம் நான் எடுத்துக் கூறியுள்ளேன். மேற்கண்ட ஒப்பீட்டு விவரங்களைப் பார்க்கும்போது திரு. கருணாநிதியின் குடும்ப பத்திரிகையான முரசொலியில் வரும் 'நாளொரு கொள்ளை, பொழுதொரு கொலை' என்ற வசனம் அவருடைய ஆட்சிக்குத்தான் பொருந்துமே தவிர, என்னுடைய ஆட்சிக்கு அது பொருந்தாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தையும், சென்னை மாநகரையும் என்றென்றும் அமைதிப் பூங்காவாகத் திகழச் செய்யும் எங்களது பணி தொய்வின்றித் தொடரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இன்றைக்கு ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார். தமிழ் மாநில காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன், வாகனங்களின் முன் சீட்டில் அமர்ந்து செல்பவர்கள் seat belt கட்டாயமாக அணிய வேண்டும் என்னும் அறிவிப்பு இன்று, 25-4-2002 செய்தித் தாள்களில் வெளியாகி உள்ளதைக் குறிப்பிட்டு, இது சம்பந்தமாக உரிமை மீறல் பிரச்சினை எழுப்புவதாகக் கூறினார். இந்த அறிவிப்பு 1989 ஆம் ஆண்டு மத்திய அரசின் மோட்டார் வாகன சட்ட விதிகளின்படி கடந்த மார்ச் மாதம் மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. மத்திய அரசு 23-11-2001 ஆம் தேதியிட்ட கடிதத்தில், சாலைப் பாதுகாப்பையொட்டி மேற்கண்ட விதியைக் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது. உச்ச நீதிமன்றம் 14-12-2001 ஆம் தேதியிட்ட தனது ஆணையில், மோட்டார் வாகனங்களில் முன் இருக்கையில் அமரும் பயணிகளும், ஓட்டுநரும் கண்டிப்பாக seat belt அணிய வேண்டும் என்ற விதியை நன்கு விளம்பரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. மத்திய அரசு மற்றும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களின்படி, மாநில அரசின் காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் சென்னை நகர காவல் துறை ஆணையர் ஆகியோர் போக்குவரத்து ஆணையரை இது சம்பந்தமாக பத்திரிகைச் செய்தி வெளியிடுமாறு கேட்டுக்கொண்டனர். ஆகவே, போக்குவரத்து ஆணையர் நேற்று இதற்கான பத்திரிகைச் செய்தியை வெளியிட்டுள்ளார். ஆகவே, ஏற்கெனவே மத்திய அரசால் வெளியிடப்பட்ட seat belt பற்றிய அறிவிப்பைத்தான் தமிழக அரசு மறு அறிவிப்பாக வெளியிட்டுள்ளதே தவிர, புதிய முடிவுகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனவே, இதில் Breach of Privilege - எந்த உரிமை மீறலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் பேசுகிறபோது, கடந்த ஆண்டு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதை நினைவுகூர்ந்து, அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று இங்கே வாதாடினார்.

தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் 9-11-2001 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 30,838 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும் 3,670 தொழிலாளர்கள் குறிப்பிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் பேச்சு வார்த்தைக்குப் பின்னர் படிப்படியாக விடுவிக்கப்பட்டனர். இது தவிர, 23-11-2001 அன்று மாநில அளவில் பொது வேலை நிறுத்தம் நடைபெறுவதை அடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 22-11-2001 அன்று 1,311 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்களும் விடுவிக்கப்பட்டனர். குறிப்பிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட குற்றங்கள் என்று சொல்லும்போது, இந்தத் தொழிலாளர்கள், அரசின் சொத்தை, பொதுச் சொத்தை, பொது மக்களின் சொத்தை நாசப்படுத்தியிருக்கிறார்கள்; சேதப்படுத்தியிருக்கிறார்கள். நியாயமாக பணிக்கு வரவேண்டும் என்று விரும்புகிற ஓட்டுநர்கள் கூட, அந்தப் பேருந்துகளை எடுத்துவிடக் கூடாது என்பதற்காக, பேருந்துகளின் Diesel Tank-களில் அவர்கள் Saw dust போட்டிருக்கிறார்கள். இதனால் வாகனமே பழுதடைந்துவிடும். இன்னும் Engine-களைச் சேதப்படுத்தி இருக்கிறார்கள். மக்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள பேருந்துகளையே, பொதுச் சொத்துக்களையே அவர்கள் நாசப்படுத்தியிருக்கிறார்கள். அத்தகையவர்கள்மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் நேற்று இந்த அவையில் உரையாற்றும்போது சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள Y.M.C.A. உடற்பயிற்சிக் கல்லூரியில் நிலவும் நிர்வாகச் சீர்கேடுகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது இடைமறித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அந்த உடற்பயிற்சிக் கல்லூரியின் அருகிலுள்ள Golf மைதானம் பற்றியும் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி ஒருசில விவரங்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.



பிற்பகல் 12-35

சென்னை, அண்ணா சாலையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைமை அலுவலகத்திற்கு அருகில் 77.70 ஏக்கர் நிலம் சென்னை, Cosmopolitan Club-க்கு நீண்டகால குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இந்தக் குத்தகை 1996 ஆம் ஆண்டு காலாவதியாகும் நிலையில் இருந்தது. இதற்கிடையில் India Cements நிறுவனத்தின் Managing Director திரு. என். சீனிவாசன் 1994 ஆம் ஆண்டு Cosmopolitan Golf Annexe என்ற அமைப்பின் உறுப்பினராகி, Golf மைதானத்தை நிருவகித்து வந்தார். அவருடைய செயல்பாடு திருப்திகரமாக இல்லாததால், அந்த அமைப்பிலிருந்து அவர் நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து, 1996 ஆம் ஆண்டு India Cements சீனிவாசன், Tamil Nadu Golf Federation என்ற புதிய அமைப்பை நிறுவி, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியிடம், அவருக்குள்ள நெருக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு அந்த நிறுவனத்திற்கு 77.70 ஏக்கர் நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்குக் கேட்டார். ஆனால் Cosmopolitan Club-ன் அன்றைய தலைவர், இந்த முயற்சியை எதிர்த்து திரு. கருணாநிதியிடம் முறையிட்டதோடு அல்லாமல் Cosmopolitan Club-க்கே அந்த நிலத்தை மீண்டும் நீண்டகாலக் குத்தகைக்கு விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அந்தக் கோரிக்கை தி.மு.க. அரசால் பரிசீலிக்கப்பட்டு, Cosmopolitan Club-க்கே அந்த நிலத்தை 30 ஆண்டு குத்தகைக்கு வழங்கலாம் என அதிகாரிகள் நிலையில் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், மத்திய அமைச்சரான திரு. முரசொலி மாறனின் பினாமியாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் India Cements-நிறுவனத்தின் Managing Director (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல் குழப்பம்) (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். என்ன அர்த்தம்? இது அவதூறான குற்றச்சாட்டு இல்லையா? யார் பினாமி என்று சொல்வது? யாருக்கு யார் பினாமி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. துரைமுருகன் சொல்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். (குறுக்கீடுகள்)

***திரு துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துகளைச் சொல்வதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. ஆனால் எந்த ஆதாரமும் இல்லாமல் திரு. முரசொலி மாறனின் பினாமி, India

Cements சீனிவாசன் என்று சொல்வது, எந்த ஆதாரத்தை வைத்து சொல்கிறார்கள்? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? (கூச்சல்-குழப்பம்) இது மிகப் பெரிய குற்றச்சாட்டு, நாங்கள் கண்டிக்கிறோம். ஆதாரம் இல்லாமல் ஒரு குற்றச்சாட்டை முதலமைச்சர் அவர்கள் சொல்லலாமா? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, India Cements சீனிவாசன் திரு. முரசொலி மாறன் அவர்களுடைய பினாமி என்பது நாடறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்று அவர்கள் நிரூபிக்கட்டும் பார்க்கலாம்.

**திரு. துரைமுருகன்:** நான்கூட யாராவது ஒருவர் பெயரைச் சொல்லி அவர் முதலமைச்சருக்கோ, அமைச்சருக்கோ பினாமி என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? ஆகையினால், முதலமைச்சர் அவர்களே ஆதாரம் இல்லாமல் ஒரு குற்றச்சாட்டை இந்த அவையிலே சொல்வது எந்த வகையில் நியாயம் என்று நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் இந்த அவையிலே இந்தப் பிரச்சினையை எழுப்பினேன். முதலமைச்சர் அவர்களும் அதற்கு பதில் சொல்லிக் கொண்டு வந்தார்கள். விடுபட்ட ஒன்றை மட்டும் நான் இப்போது சொல்கிறேன். இடையிலே Cosmopolitan Club-ஐ மீண்டும் தனக்கு 30 ஆண்டு நீண்டகால குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் அன்றையதினம் நான் மீண்டும் தருகிறேன் என்று இந்த அவையிலேயே உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், திரு. எஸ்.ஆர்.பி. சொல்லி முடிக்கட்டும். திரு. துரைமுருகன், எதற்காக இவ்வளவு ஆத்திரப்படவேண்டும்? உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லி முடிக்கட்டும், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், (குறுக்கீடுகள்)



**Thiru S.R. BALASUBRAMONIYAN:** I am entitled to seek clarification from the Chief Minister. (Interruptions) I am seeking clarification from the Chief Minister. You cannot stand in my way. (Interruptions) I am sorry, you cannot stand in my way. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரைப் பேச விடாமல் தடுப்பது முறையல்ல. உட்காருங்கள்.

**Thiru S.R. BALASUBRAMONIYAN:** I am seeking clarification from the Chief Minister and not from Thiru Duraimurugan. (Interruptions) I am seeking clarification from the Chief Minister and not from the Deputy Leader of the Opposition.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவர் பேசி முடிக்கட்டும். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதுமட்டுமல்ல, முதலமைச்சர் அவர்கள் Cosmopolitan Club-க்கு வந்திருந்தபொழுது, அங்கேயே அதே உறுதிமொழியை அளித்தார்கள். ஆக, சட்டப் பேரவையிலே உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். Cosmopolitan Club-லேயும் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். ஆனால் திடீரென்று அந்தக் குத்தகை நீட்டிப்பு தரப்படவில்லை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நேற்று திரு. துரைமுருகன் அவர்களே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். துரைமுருகன் அவர்களே, நேற்று இந்தப் பிரச்சினையை திரு. எஸ்.ஆர்.பி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த சில உண்மைகளை நான் இங்கே விளக்கிக்கொண்டு வருகிறேன். அந்த உண்மைகள் வெளிவராமல் தடுப்பதற்காகவே எதிர்க்கட்சியினர் இத்தகைய ஆரவாரம் செய்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அடக்குங்கள் உங்கள் கட்சிக்காரர்களை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பேசுங்கள்.

***திரு. துரைமுருகன்:** முதலமைச்சர் அவர்கள் ஆதாரம் இல்லாத ஒரு குற்றச்சாட்டை இந்த அவையில் முரசொலி மாறன் அவர்கள் மீது சுமத்தியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்கு என்ன ஆதாரம்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கவேண்டுமென்பதுதான் நாங்கள் பேரவைத் தலைவரைப் பார்த்துக் கேட்கின்ற ஒரு கேள்வி அல்லது விண்ணப்பம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இப்போது எஸ்.ஆர்.பி. அவர்கள் அதற்கான விளக்கத்தை நேற்று... (கூச்சல்-குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** இல்லாவிட்டால், அதை உடனடியாக சபைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு). No. நான் உங்களுக்குப் பதில் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் நேற்று எழுப்பிய பிரச்சினை. அவர்தான் கிளப்பியது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்னுடைய உரிமையில் அவர் தலையிடக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று எஸ்.ஆர்.பி. அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியவர். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் எழுப்பிய பிரச்சினை, எனக்கு இருக்கிற உரிமை. அவர் விட்டுவிட்டுப் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, உங்களைப் பேச அனுமதிப்பேன். அதைப்போல எஸ்.ஆர்.பி. அவர்களைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. அவர்களைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் கேளுங்கள். நீங்கள் எல்லாம் உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சரான திரு. முரசொலி மாறனுக்கு வேண்டியவராக இருக்கின்ற India Cements நிறுவனத்தின் Managing Director திரு. சீனிவாசன் தலைமையில் இயங்கும் Tamil Nadu Golf Federation-க்கே அந்த நிலத்தை தாரைவார்க்க வேண்டும் என முடிவு செய்த முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, Cosmopolitan Club-இன் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டார். அவர்களுக்குப் பல இடைஞ்சல்களைக் கொடுத்தார். இதுசம்பந்தமாக, Cosmopolitan Club-இன் தலைவர் ஒரு தூதுக் குழுவோடு மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறனைச் சந்தித்த நிகழ்ச்சிகள் எல்லாம் உண்டு. இறுதியில் இவர்களுக்குள் ஒரு சமாதான ஏற்பாடு செய்யப்பட்டது. 1997 ஆம் ஆண்டு, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி ஒரு முடிவை எடுத்தார். அதாவது, Cosmopolitan Club, Tamil Nadu Golf Federation மற்றும் தமிழக அரசு ஆகியவை அடங்கிய ஓர் அதிகாரம் பெற்ற ஆட்சிக் குழுவை அமைத்து, அந்தக் குழுவிற்கு நீண்டகாலக் குத்தகைக்கு இந்த நிலத்தை வழங்கவேண்டுமென முடிவுசெய்தார். இதன்மூலம் Tamil Nadu Golf Federation-இன் தலைவராக இருக்கும் India Cements சீனிவாசன், அரசாங்க அலுவலர்களின் உதவியோடு, அதிகாரம் பெற்ற ஆட்சிக் குழுவைக் கைப்பற்றி, Golf மைதானத்தை முழுமையாக அவருடைய கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விடுவார் என்று சந்தேகப்பட்டு, Cosmopolitan Club தலைவரும் மற்றும் உறுப்பினர்களும் வன்மையாக எதிர்த்தார்கள். ஆனால் இந்த எதிர்ப்பை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி கண்டுகொள்ளாமல் உதாசீனப்படுத்தினார். இதற்கிடையில், Cosmo Golfers' Association என்ற அமைப்பு 1999 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மேலும், Cosmopolitan Club சார்பாக, நிலத்தைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் உயர் நீதிமன்றம் இதுசம்பந்தமாக தமிழக அரசு முடிவெடுத்துக்கொள்ளலாம் என ஆணையிட்டது. பின்னர், Cosmopolitan Club மற்றும் Tamil Nadu Golf Federation ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து இந்த நிலத்தை நிர்வகிப்பது சம்பந்தமாக ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டன. அதனை ஏற்றுக்கொண்டு தமிழக அரசு அந்த நிலத்தை இந்த இரண்டு அமைப்புகளும் 30 ஆண்டுகளுக்கு இணைந்து அனுபவித்துக்கொள்ள குத்தகைக்கு வழங்குவதாக ஆணை

பிறப்பித்துள்ளது. எப்படியாவது India Cements சீனிவாசனுக்கு அனுகூலம் செய்ய வேண்டுமென்பதற்காக அந்த நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கும் இந்த அரசு ஆணையை திரு. கருணாநிதி தலைமையிலான அன்றைய தி.மு.க. அரசு வெளியிட்டது.

*பிற்பகல் 12-45*

அதுவும் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் தேதி தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்குச் சற்று முன்பாக இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசாணையில் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்திர குத்தகைத் தொகை எவ்வளவு என குறிப்பிடப்படவில்லை. அது மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோரின் பரிந்துரைகளைப் பெற்று பின்னர் முடிவு செய்யப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. குத்தகை காலம் குறித்த அதிகாரிகளின் பரிந்துரையைப் புறக்கணித்துவிட்டு தனிப்பட்ட ஒரு நபர் அனுகூலம் அடைவதற்காகக் குத்தகைத் தொகைகூட குறிப்பிடாமல் ஆணையை வெளியிட்டிருப்பது சட்டப்படி குற்றமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப் போதிய அடிப்படை ஆதாரம் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்த அரசைப் பொறுத்தவரை, ஒரு தனி நபருக்கு அனுகூலம் செய்வதற்காகப் பிறப்பிக்கப்பட்ட அந்த அரசாணை மறுபரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விலை மதிப்புள்ள அந்த நிலத்தை, அரசுக்குச் சொந்தமான சொத்தை தக்க முறையில் தமிழக அரசே பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்ற வழிவகைகள் காணப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள சில ரிட் மனுக்கள் மீது உரிய முறையில் தமிழக அரசு தனது கருத்தினைத் தெரிவித்து, அரசுக்கு இந்த நிலம் பயன்படுமாறு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. கருணாநிதியின் அதிகார துஷ்பிரயோகத்திற்கு இது ஒரே ஒரு sample. இதுபோன்று பல



விஷயங்கள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் அரசின் உன்னிப்பான நடவடிக்கையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவர் கேட்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் துணைத் தலைவர் கேட்கும்போது எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? அவர் கேட்கிறார், அவருக்குப் பேச அனுமதி கொடுத்திருக்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரணை வைத்துக்கொள்வதும், முந்தைய ஆட்சியினுடைய உத்தரவை இரத்து செய்வதும் அவருடைய இஷ்டம். அது அரசினுடைய முடிவு. அதிலே நான் தலையிட விரும்பவில்லை. அரசு என்ன முடிவெடுக்கிறதோ எடுக்கட்டும். ஆனால் இதற்காக ஒரு motive-ஐ கற்பித்து, அதாவது முரசொலி மாறனுக்கு இதிலே சம்பந்தமே இல்லாமல், முரசொலி மாறனுடைய பினாமிதான் India Cements சீனிவாசன் என்று சொல்வது எந்த விதத்திலே நியாயம்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ன சொல்கிறார் என்றால், India Cements சீனிவாசன் திரு. முரசொலி மாறனின் பினாமி அல்ல, திரு. கருணாநிதி அவர்களின் பினாமி. அதனால்தான் இந்த அனுகூலம் செய்யப்பட்டுள்ளது என்று கூறுகிறார் போலும். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** அவைக் குறிப்பிலிருந்து எடுத்தாக வேண்டும். அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் என்று சொல்லுங்கள் சார்.

**திரு. துரைமுருகன்:** அப்படியானால் ஓர் அரசாங்கத்திலே போடுகிற உத்தரவிற்கெல்லாம் ஒருத்தர் பினாமி ஆகிவிட முடியாது. இதை முதலமைச்சருக்குச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

[2002 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி, டாக்டர் பொன்முடி எல்லோருக்கும் சொல்கிறேன். துணைத் தலைவர் ஒரு கருத்தைக் கேட்கிறார். முதலமைச்சர் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்களும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? இல்லையென்றால் துரைமுருகனை போகச் சொல்லிவிட்டு நீங்கள் துணைத் தலைவராக வாருங்கள், (குறுக்கீடுகள்) துரைமுருகனை வேண்டாம் என்று சொல்லிவிட்டு நீங்கள் துணைத் தலைவராக வாருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்குத் தெரியும் என்று சொன்னால், அவரை பேசவிட்டுக் கொண்டிருக்கின்றேன். பிறகு நீங்கள் எப்படிப் பேசலாம்? (குறுக்கீடுகள்) எப்படிப் பேசலாம்? திரு. எஸ்.ஆர்.பி. பேசுகின்றார். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே இதே அவையிலே உறுதிமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக அந்தப் பிரச்சினையை அன்றையதினம் திரு. ஞானசேகரன் எழுப்பினார் என்று நினைக்கின்றேன். இந்த அவையிலே Cosmopolitan Club-க்கு மீண்டும் குத்தகை நீட்டித்துத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். Cosmopolitan club-க்கு முதலமைச்சர் வந்த நேரத்திலே, அன்றைய முதலமைச்சர் வந்த நேரத்திலே, அன்றைய தினம் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழியை மீற வேண்டிய அவசியம் ஏன் நேரிட்டது? ஒன்று. இரண்டாவது, அந்த 77.70 ஏக்கர் தவிர, பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான, இராணுவத்திற்குச் சொந்தமான 26 ஏக்கரும் சேர்ந்து கிட்டத்தட்ட 104 ஏக்கர், அந்த 104 ஏக்கரையும் திடீரென்று கபளீகரம் செய்து கொண்டுவிட்டார்கள் என்பதுதான் Cosmopolitan club-ஐச் சேர்ந்தவருக்கும் எங்களுக்கும் இருக்கின்ற பிரச்சினை. அதுமட்டும் இல்லை. முதலமைச்சர் சொன்னதிலே ஒரு தகவல் அதில் இல்லை. ஒன்று இன்றையதினம் அதற்கு ஒரு தடையாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. First Bench சுபாஷன் ரெட்டியும், ஜஸ்டிஸ் பாலசுப்பிரமணியம் இரண்டு பேரும் அதற்கு status quo என்று ஒரு தடையாணை பிறப்பித்திருக்கிறார்கள். அதை அமல்படுத்தலாம் என்பது ஒன்று. வருவாய்த் துறை நிலை ஆணை இருக்கிறது. ஒரு குத்தகை— ஏற்கெனவே எனக்குக் குத்தகை இருந்தால், நீண்ட கால குத்தகை இருந்தால், நானாகவே இன்னொருத்தரோடு ஒப்பந்தம் போட முடியாது. அந்த ஒப்பந்தம் எந்த அடிப்படையிலே போடப்பட்டது? அந்த ஒப்பந்தம் போடப்பட்டது முறையாகத்தான் போடப்பட்டதா? போடப்பட்டது என்று சொன்னாலும், அந்த வருவாய்த் துறை நிலை ஆணையைப்



2002 ஏப்ரல் 25][திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

பின்பற்றாமல் அரசாணை பிறப்பிக்கப்படலாமா? அரசு அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டிருக்கிறதா? எனக்குத் தெரிந்த வரை கையெழுத்திடவில்லை. எனவே அந்த அரசாணையை இரத்து செய்து, மீண்டும் அந்த நிலம் பழையபடி golf விளையாடுவதற்கு அந்த Cosmopolitan club சங்கத்தைச் சார்ந்தவர்களுக்குத் தரவேண்டும் என்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம் - அது முதலமைச்சர் அவர்களே தெரிவித்தார்கள். அது ஓர் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை. அதிலே நாங்கள் தலையிட விரும்பவில்லை, அதில் என்ன முடிவு எடுக்கிறார்களோ தெரியாது. ஆனால், இப்போது நான் கேட்பது ஓர் அபாண்டமான குற்றச்சாட்டை முரசொலி மாறன்மீது தெரிவித்தார்களே, அதைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீங்கள் நீக்கப் போகிறீர்களா இல்லையா? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது, முரசொலி மாறனுக்கு சீனிவாசன் வேண்டியவர் என்றுதான் தெரிவித்தார்கள். (குறுக்கீடுகள்) வேண்டியவர் என்றுதான் தெரிவித்தார்கள். அதை நீங்கள் மறுக்கிறீர்களா? சீனிவாசனுக்காக இந்த வேலை செய்யப்பட்டது என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதில் நீக்குவதற்கு எதுவுமில்லை. (கூச்சல்-குழப்பம்)

**திரு. துரைமுருகன்:** அதை எடுக்க வேண்டும். அபாண்டமான ஒரு குற்றச்சாட்டை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரே தெரிவித்திருப்பது வருத்தத்திற்குரியது. அது கண்டனத்திற்குரியது. அதே நேரத்தில், அதை சபை நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுக்கமாட்டேன் என்று தாங்கள் தீர்ப்புரைத்த காரணத்தினால், இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்)

(திரு. துரைமுருகன் வெளிநடப்புச் செய்தார். எஞ்சிய திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து அவைக்குள்ளே இருந்து கூச்சல் குழப்பம் விளைவித்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் துணைத் தலைவர் வெளிநடப்புச் செய்துவிட்டு போய்விட்டார். அவ்வளவுதான். (கூச்சல்-குழப்பம்)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து தகாத வார்த்தைகளைப் பேசுகிற முறை நடைபெறுகிறது. அதை நீங்கள் கண்டிக்க வேண்டும். எச்சரிக்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுடைய கட்சியின் சார்பாக அவர்களுடைய துணைத் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்களைக் கண்டித்து, பேரவைத் தலைவரையும் கண்டித்து வெளிநடப்புச் செய்துவிட்டு போய்விட்டார். துணைத் தலைவருடைய முடிவுக்கு அவர்களுடைய கட்சிக்காரர்கள் கட்டுப்படுகிறார்களா இல்லையா என்பதுதான் இப்போது பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடரலாம். (கூச்சல்-குழப்பம்) இதற்கு மேலே அவைக்கு உள்ளே இருந்துகொண்டு குந்தகம் விளைவித்தால் அவர்களை அகற்ற வேண்டிய நிலைமை நிச்சயமாக ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (கூச்சல்- குழப்பம்) துணைத் தலைவர் அவர்கள் கருத்தைத் தெரிவித்துவிட்டுப் போனதற்குப் பிறகும் அவர்களுடைய உறுப்பினர்கள் பிடிவாதமாக அவைக்குள்ளே இருந்துகொண்டு குழப்பம் விளைவித்தால் அவர்களை அகற்ற வேண்டிய நிலைமை வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்தான் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்தான் நேற்று இவர்களுக்காக வக்காலத்து வாங்கினார். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர் பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை பற்றித்தான் நேற்றைக்கு முன்தினம் கூறினேன். அவையைப் பொறுத்தவரையில், அவையை ஒழுங்குபடுத்துவதிலே உங்களுக்கு இருக்கின்ற அதிகார வரம்பிற்குள்ளே நான் நிச்சயமாகத் தலையிடமாட்டேன். என்றாலுங்கூட, அவர்களுக்கு இப்போதுகூட ஒரு வாய்ப்பு தரலாம். ஏற்கெனவே



அவர்களுடைய துணைத் தலைவர் அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். எனவே, அவர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைத் தலைவர் அவர்கள் முடிவைத் தெரிவித்துவிட்டு வெளிநடப்புச் செய்ததற்குப் பிறகும் அவர்களுடைய உறுப்பினர்கள், அவர்களுடைய கட்சியினுடைய தலைமைக் கட்டளையையும் மீறி அவைக்குள்ளே இருந்துகொண்டு குழப்பம் விளைவிக்கின்ற காரணத்தினால், அவையினுடைய காவலர்கள் அவர்களை அவையைவிட்டு அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்) வேறு வழியில்லை. (கூச்சல்-குழப்பம்) வேறு வழியில்லை.

*(எஞ்சிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்ட India Cements Managing Director திரு. சீனிவாசன் அவர்கள், திரு. முரசொலி மாறன் அவர்களுக்கும், திரு. கருணாநிதி அவர்களுக்கும் பினாமியாக இருக்கின்ற காரணத்தால்தான் குத்தகைக் கட்டணம் என்ன என்பதையே குறிப்பிடாமல் குத்தகைக்கு ஆணையிட்டு அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதைவிட வேறு என்ன ஆதாரம் தேவைப்படுகிறது? பொதுவாக, ஓர் அரசு நிலத்தை, ஓர் அரசு சொத்தை, ஒரு தனியாருக்குக் குத்தகைக்கு விடுவதானால் வருடாந்திரக் கட்டணம் எவ்வளவு என்று குறிப்பிட்டுத்தான் அந்த அரசாணை வெளியிடுவது வழக்கம். அதுதான் சட்டம். ஆனால், வருவாய்த்துறைச் செயலாளர் மற்றும் அரசு அதிகாரிகள் ஒரு வருடாந்திர கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும், குறிப்பிட வேண்டுமென்று சொன்ன அறிவுரைகளை எல்லாம் தட்டிக் கழித்துவிட்டு, உதாசீனப்படுத்திவிட்டு - அதைப் பிறகு வைத்துக்கொள்ளலாம், கட்டணத்தைப் பின்னர் குறிப்பிட்டுக் கொள்ளலாம் என்று சொல்லி முதலமைச்சரே, அரசு ஆணையில் முதலமைச்சரே சம்பந்தப்பட்ட கோப்பில் கையெழுத்திட்டிருக்கிறார். அதன் நகலும் என்னிடத்தில் இங்கேயே இருக்கிறது. ஆகவே, ஒரு தனி நபருக்கு அனுகூலம் செய்ய வேண்டும் என்பதற்காக வருடாந்திரக் கட்டணம் எவ்வளவு என்றுகூட குறிப்பிடாமல்

அவசர அவசரமாக ஆட்சிக் கட்டிலிலிருந்து இறங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக ஒரு முதலமைச்சர் ஓர் அரசாணையை வெளியிடச் செய்கிறார் என்று சொன்னால் யாருக்கு அனுகூலம் செய்கிறார்களோ அந்தத் தனி நபர் அவர்களுக்கு பினாமி என்று கருதாமல் வேறு எப்படிக் கருத வேண்டும்? இதற்கு வேறு என்ன ஆதாரம் தேவை? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதல் அனைத்து மகளிர் காவல் நிலையம் நான் முதலமைச்சராக இருந்தபோது 1992 ஏப்ரல் மாதத்தில் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1996-க்குள் 58 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழகம் எங்கிலும் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றில் 33 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நானே திறந்து வைத்தேன். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 1996-லிருந்து 2001-க்கு இடைப்பட்ட தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பெருத்த சரிவிற்கு உள்ளானது. கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஓர் அனைத்து மகளிர் காவல் நிலையம்கூட புதிதாக அமைக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் என்னால் திறந்து வைக்கப்பட்டன என்ற காரணத்தினால் கடந்த தி.மு.க. அரசு தனது ஆட்சியில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாட்டை முழுமையாக முடக்கியது. மீண்டும் 2001 ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக பதவி ஏற்றவுடன் கடந்த ஜூன் மாதம் 19, 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் நான் நடத்திய காவல் துறை சார்ந்த ஆய்விற்குப் பிறகு அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு புத்துயிர் ஊட்டுவதற்கான பல ஆக்கப்பூர்வமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

தமிழகத்தில் உள்ள காவல் உட்கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமையும் வண்ணம் இன்னலுறும் மகளிர்க்கு உதவி புரிவதற்காக மேலும் கூடுதலாக 126 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என நான் முடிவு செய்தேன். அதன்படி முதற்கட்டமாக 2001-2002 ஆம் ஆண்டில் 50 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றில் சென்னையில் உள்ள அசோக் நகர், இராயபுரம், அண்ணா நகர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்களைக் கடந்த 27-3-2002 அன்று நானே திறந்து வைத்தேன். 2002-2003-ல் மேலும் 40 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், 2003-2004-ல் 36 புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்த முடிவு



184. தற்போது அந்த எண்ணிக்கை 188 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆகவே, 2003-2004-ல் மேலும் 4 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப்படும். ஆக 2003-2004-ல் 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப்படும். தற்போது தமிழகத்தில் மொத்தம் 107 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கையாளுவது, வரதட்சணைக் கொடுமை சார்ந்த வழக்குகளைக் கையாளுவது, விபச்சாரத் தடுப்பு, ஊழல் தடுப்பு வேட்டைகளின்போது காவல் துறை அதிகாரிகளுக்கு உதவி புரிவது, அனாதைக் குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற சிறுவர் சிறுமியர் ஆகியோரைக், காப்பது போன்ற பணிகளைச் செய்து வருகின்றன. இதுமட்டுமின்றி அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் குடும்ப ஆலோசனை மையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆலோசனை மையங்களில் ஆலோசகர்களாக சமூகப் பணிகளில் ஆர்வம் உள்ள தன்னார்வக் குழுக்கள், களப்பணியாளர்கள், மனோதத்துவ நிபுணர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் ஆகியோர் துன்பத்தில் இருக்கும் மகளிர்க்கு தக்க அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் தந்து அவர்களுடைய இன்னல்களைத் தீர்த்து வைக்கிறார்கள். தற்போது தமிழகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தரவும், தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் மாவட்ட சேமப்படை ஆகிய இடங்களில் பணிபுரியும் மகளிர்க்குத் தேவையான ஓய்வு அறை, கழிப்பறை போன்ற பல வசதிகளைச் செய்து தருவதற்காகவும் 2001-2002 ஆம் ஆண்டில் 6 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-00

தமிழ்நாடு காவல் துறை வீட்டுவசதிக் கழகம், காவல் துறையில் உள்ள மகளிரின் வசதிக்காக ஓய்வறைகள், மகளிர் ஒப்பனை அறைகள், Toilet-கள் மற்றும் குளியல் அறைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தரும் பணிகளை மேற்கொண்டிருக்கிறது. மேலும் இதுவரை இல்லாத ஒரு புதிய நடைமுறையை இந்த அரசு அமல்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் ஆண் காவலர்களுக்குக் கொடுப்பதுபோல பெண் காவலர்களுக்கு ஆயுதங்களோ, படைக்கலன்களோ, வாகனங்களோ, மற்ற வசதிகளோ செய்து தரப்படவில்லை. ஆனால் கடந்த ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, ஆண் காவலர்களுக்கும் பெண் காவலர்களுக்கும்

கொடுக்கப்படுகின்ற வசதிகளில், கொடுக்கப்படுகின்ற படைக்கலன்களில் எந்தவிதமான வேறுபாடும் இருக்கக்கூடாது என்று ஆணையிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) ஆண் காவலர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஆயுதங்கள், வாகனங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்ற அனைத்து எக்யூப்மென்ட்களும் பெண் காவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும் 58 மிக உயர் நுண்ணலை சாதனங்கள் (V.H.F. Sets), தொலைபேசி இணைப்புகள், வாகனங்கள், ஆயுதங்கள், அறைகலன்கள், சீருடைகள், மழைக்கோட்டுகள் ஆகியவை மகளிர் காவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

100 CC திறனுள்ள 287 மோட்டார் சைக்கிள்கள் மகளிர் காவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டிற்கு முன்னால் மகளிர் காவலர்கள் முதல் நிலைக் காவலர்களாகவும், தலைமைக் காவலர்களாகவும் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்குக் குறுகிய ஆண்டுகளுக்குள்ளாகவே சார் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெறும் வாய்ப்பு இருந்தது. இந்த ஆரோக்கியமான நிலையை முந்தைய தி.மு.க. அரசு 28-11-1997 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை (நிலை) எண் 1730-ன் மூலமாக மாற்றி, மகளிர் காவலர்கள், தலைமைக் காவலர்களாக 8 ஆண்டுகள் பணிக்காலம் முடிந்த பிறகே சார் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற வேண்டுமென்று, அவர்களுடைய பதவி உயர்விற்குத் தடையேற்படுத்தியது. அதனையடுத்து, தேவையற்ற காலதாமதம் உண்டாக்கப்பட்டது. இந்த அரசாணை மகளிர் காவல அலுவலர்களிடயே பெருத்த வருத்தத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. ஆகவே அவர்களுடைய நியாயமான கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் தலைமைக் காவலராகப் பணிபுரிந்த உடனேயே சார் ஆய்வாளர்களாக மகளிர் காவலர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படலாம் என்னும் ஆணையை கடந்த 1-4-2002 அன்று இந்த அரசு வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எங்கள் சார்பாக எங்கள் தேசிய இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்கள். பெண் இனத்திற்குப் பெருமை



சேர்க்கின்ற வகையிலே இந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாக அதற்கு நிவாரணம் கொடுத்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மேலும் சிறப்பாகப் பணிபுரியும் மகளிர் காவல் அலுவலர்களுக்கு விரைவுபடுத்தப்பட்ட பதவி உயர்வு—accellerated promotion கொடுத்து அவர்களை ஊக்குவிக்கும் எண்ணமும் இந்த அரசுக்கு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மகளிர் காவல் அலுவலர்களை அனைத்துக் காவல் துறை பணிகளிலும் ஈடுபடுத்த வேண்டும் என்ற எனது எண்ணப்படி இதுவரையில் 287 பொது காவல் நிலையங்களில் ஒரு மகளிர் காவல் அலுவலர், சார் ஆய்வாளராகவும் இரண்டு மகளிர் காவலர்களும் பணிக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இதன்மூலம், உதவிகோரும் பெண்கள் அதிக அலைச்சலுக்கு ஆட்படாமலும், நீண்ட பயணங்களை மேற்கொள்ளாமலும், தாம் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே உள்ள காவல் நிலையங்களை நம்பிக்கையோடும், துணிவோடும் அணுகி நியாயம் பெற வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தைச் செயல்படுத்த விரைவில் தமிழகத்தில் உள்ள 1218 காவல் நிலையங்களிலும் மகளிர் காவல் அலுவலர்கள் பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்றும், அதற்குரிய ஆட்சேர்க்கை உள்ளிட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தில் 4484 மகளிர் காவல் அலுவலர்கள் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது தமிழகத்தில் 56 அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் காக்கும் கரங்கள் (Women's Helpline) அமைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அமைப்புடன் தன்னார்வக் குழுவைச் சேர்ந்தவர்களும், அனைத்து மகளிர் காவல் நிலைய ஆலோசனை மைய உறுப்பினர்களும் இணைந்து செயல்பட்டு, உதவிகோரும் பெண்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார்கள். காவல் மகளிர் காக்கும் கரங்கள் அமைப்பு ஒவ்வொன்றுக்கும் மிக உயர் நுண்ணலை சாதனங்களும், V.H.F. செட்டுகளும், வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 1-05

1091 என்கின்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் துன்பத்திற்கு ஆளாகியுள்ள பெண்களைப் பற்றிய தகவல் கிடைத்து அழைப்பு வந்ததும் அத்தகையோர் இருக்கும் இடத்திற்கு காக்கும் கரங்கள் அமைப்பிலிருந்து வாகனம் விரைந்து சென்று அவர்களுக்கான உதவிகளைச் செய்கிறது. தக்க விசாரணைக்குப் பிறகு பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவைப்படுவது மருத்துவ உதவியாக இருந்தாலும், ஆலோசனையாக இருந்தாலும் புலன் விசாரணையாக இருந்தாலும் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறுவிதமான பிரச்சினைகளான வரதட்சணைக் கொடுமை, குடும்பங்களில் நடக்கும் வன்முறை, பெண் சீண்டல், பெண் சிசுக் கொலை போன்ற பல்வேறுவிதமான கொடுமைகளுக்கு எதிரான நடவடிக்கையை உடனடியாக எடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரிவது போன்றவையே காக்கும் கரங்கள் அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

29-8-2001 அன்று இந்தக் காக்கும் கரங்கள் அமைப்பு, சென்னை ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என்னால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்த அமைப்பு அடையாறு, கொத்தவால்சாவடி ஆகிய பல்வேறு அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் தோற்றுவிக்கப்பட்டது. துயர்படும் பெண்களுக்கு உதவ காவல் துறையின் காக்கும் கரங்கள் அமைப்பு செய்து வரும் பணி தமிழக மகளிரின் ஒருமித்த வரவேற்பைப் பெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2000-2003 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்திலுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் எல்லாவற்றிலும் இத்தகைய காவல் மகளிர் காக்கும் கரங்கள் அமைப்பு செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சமூக நலத் துறையின் மூலம் சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் குழந்தைகளுக்கான உதவி மையங்கள் - Childline services- ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை ஆபத்திலும் சிக்கலிலும் இருக்கும் சிறுவர் சிறுமியருக்குத் தக்க உதவிகளை அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் உடனுக்குடன் வழங்க ஆவன செய்து



வருகின்றன. இந்தச் சிறார் மையங்களை தமிழகம் முழுவதும் சிறப்பாகச் செயல்படச் செய்யும் நோக்கத்துடன் ஒவ்வோர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் இத்தகைய குழந்தைகளுக்கான உதவி மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடத்தைச் சார்ந்த சவரியார்பிச்சை என்பவரின் ஆர்.எம்.எஸ்.3287 என்ற எண் உள்ள விசைப் படகு ஒன்றை 13-4-2002 அன்று 1500 metre cartex (வெடிமருந்துப் பொருள்) cable-களுடனும், LTTE இயக்கத்தில் 'கடல்புலிகள்' பிரிவைப் புகழ்கின்ற பாடல்கள் அடங்கிய ஆடியோ கேசட்டுகளுடனும் இந்தியக் கடற்படை வழிமறித்துப் பிடித்தது. இதனையடுத்து இராமேசுவரம், மரைக்காயர்பட்டனம் என்ற ஊரைச் சேர்ந்த நூர்முகமது என்பவரின் மகனான சாகுல் அமீது என்பவர் கைது செய்யப்பட்டு, 14-4-2002 அன்று இராமேசுவரம் நகரக் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். இது தொடர்பாக இராமேசுவரம் நகரக் காவல் நிலையத்தில் குற்ற எண் 76/2002-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தற்போது குற்றப் புலனாய்வுத் துறையின் "Q" பிரிவிற்கு மேல் விசாரணைக்காக மாற்றப்பட்டுள்ளது.

LTTE இயக்கத்தினருக்கு என்று அனுப்பப்பட்ட இந்தக் கள்ளக் கடத்தல் பொருட்கள் கமுதி காவல் நிலைய எல்லைக்குள் உள்ள ஒச்ச தேவன்கொட்டகையைச் சேர்ந்த ராமர் என்பவர் அனுப்பியதாக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது. இதன் தொடர்பாக படகுச் சொந்தக்காரர் சவரியார்பிச்சை உட்பட கிரிஸ்டி, மில்டோஸ், செல்வம் ஆகிய நான்குபேர் தலைமறைவாகியுள்ளனர். 'கடலின் மடியில்' (on the lap of the sea) என்று தலைப்பிடப்பட்ட ஆடியோ கேசட்டுகளில் LTTE இயக்கத் தலைவர் பிரபாகரனைப் போற்றியும், அவருடைய தளபதிகள், மற்றும் படைத் தலைவர்களின் வீர தீரச்செயல்களைப் பாராட்டியும் பாடல்கள் அடங்கியுள்ளன. இதில் தொடர்பு கொண்டுள்ள குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு சிறப்புப் படைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் படகு கைப்பற்றப்பட்ட பின்னர் கடற்படை அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் கூட்டத்தைக் கூட்டி செய்தியை விளக்கியுள்ளனர். கடற்படைத் தளபதி திரு. சக்கரவர்த்தி, கைப்பற்றப்பட்ட கேசட்டுகளில் ஒரு சில ஆடியோ கேசட்டுகளைப்

பத்திரிகையாளர்களுக்குக் கொடுத்துள்ளார். கடலுக்கு அப்பாலிலிருந்து தமிழ்நாட்டிற்குள் ஸ்ரீலங்கா நாட்டைச் சார்ந்த போராளிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்கும், இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா நாடுகளில் கள்ளக் கடத்தல்காரர்களின் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிகவும் முக்கியமான பகுதிகளில், அதாவது நாகப்பட்டினத் திலிருந்து தூத்துக்குடி மாவட்டம் வரை 7 கடற்படைப் பிரிவுகளும், 2 கடலோரக் காவல் படைப் பிரிவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

பிற்பகல் 1-10

தமிழ்நாட்டின் கடற்கரையோரம் முழுவதும் 60 கடற்கரை சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன.

மீனவர்கள் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவதை நிறுத்தும்பொருட்டு அவர்களுடைய படகுகளைப் பதிவு செய்தல், அடையாள அட்டைகள் வழங்குதல், டீசல் வழங்குவதை முறைப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகள் மூலம் மீனவர்களுடைய நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

உளவுத் தகவல்களைப் பகிர்ந்துகொண்டு ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்காக தலைமைச் செயலாளர், கடற்படை, கடலோரக் காவல் படை, மீனளத் துறை, கடலோரப் பாதுகாப்புப் படை ஆகியோருடன் அடிக்கடி ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

களத்தில் நடவடிக்கை எடுப்பதற்கும், ஒருங்கிணைப்புப் பணியினை மேற்கொள்ளவும் ஏதுவாக இராமநாதபுரம், நாகப்பட்டினம், தூத்துக்குடி போன்ற கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடலோரக் காவல் படை, கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த உள்ளூர் அதிகாரிகளுடன் மாதாந்திரக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2001 ஆம் ஆண்டு மே மாதம் இந்த அரசு பதவி ஏற்றது முதல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



தற்போது புதிய சீருடைப் பணியாளர்கள் தேர்வு குறித்து இந்த அரசால் எடுக்கப்பட்டுள்ள முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

ஒன்று. கடந்த 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு ஆணையத்தால் பணி நியமன ஆணை வழங்கப்படாமல் இருந்த 161 தொழில்நுட்ப சார் ஆய்வாளர்களுக்கும், 1021 தீயணைப்போர்களுக்கும், 264 இரண்டாம் நிலை பெண் காவலர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுத்தது.

இரண்டாவதாக, மேலும் இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் இரண்டாம் நிலை ஆண் காவலர்கள் பதவிகளுக்கான நேர்காணல் தேர்வு நடத்தப்படாமல் நிலுவையில் இருந்த நிலையில் நேர்காணல் தேர்வு நடத்தி 321 சிறைக் காவலர் மற்றும் 3653 இரண்டாம் நிலை ஆண் காவலர் பணி இடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கவும் இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

மூன்றாவதாக, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு நிரப்பப்படாமல் காலியாக உள்ள 22 தொழில்நுட்ப சார் ஆய்வாளர்கள், 194 இரண்டாம் நிலை பெண் காவலர்கள், 36 தீயணைப்போர், 75 இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் 373 இரண்டாம் நிலை ஆண் காவலர்கள் பதவிகளையும் நிரப்புகின்ற பணி துரிதமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்காவதாக, தமிழகம் எங்கும் உள்ள 1218 காவல் நிலையங்களிலும் மகளிரின் துயரைத் துடைப்பதற்கென்றே மகளிர் காவல் பிரிவினை வலுப்படுத்த வேண்டி 1119 பெண் உதவி ஆய்வாளர்களையும், 1638 இரண்டாம் நிலை பெண் காவலர்களையும் தேர்வு செய்ய சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பெண் காவலர்களை மாநிலத்தில் உள்ள எல்லா காவல் நிலையங்களிலும் நியமனம் செய்வதற்காக எடுக்கப்படும் இந்த முயற்சி அகில இந்திய அளவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத தனிச் சிறப்பு வாய்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு புரட்சிகரமான நடவடிக்கை என்பதை இங்கே தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாவதாக, 1119 பெண் சார் ஆய்வாளர்களின் தேர்வு குறித்த அறிவிப்பு நாளிதழ்களில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தினால் விரைவில் வெளியிடப்படும்.

ஆறாவதாக, 1638 காலி இடங்கள் மற்றும் 21 பழங்குடியினருக்கான நிரப்பப்படாத காலி இடங்களுக்கான தேர்வு குறித்த செய்தித்தாள் அறிவிப்பு நாளிதழ்களில் கடந்த 8-3-2002 அன்று வெளியிடப்பட்டது. விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதி நாள் 10-4-2002 என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இதற்கிடையே கடந்த 21-3-2002 அன்று 'இந்து' ஆங்கில நாளேட்டில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது. அதில் பெண் காவலர் தேர்வுக்கு சுமார் 500 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டதாகவும், தேர்வாளர்களின் வயது வரம்பு 27-லிருந்து 24 ஆகக் குறைக்கப்பட்டதும், தேர்வின் தொடக்கத்தில் நடத்தப்படுகின்ற தனித் திறன் தேர்வின் – Endurance Test-ன் கடினமான தன்மையும் இவ்வாறு குறைவாக விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதற்கு முக்கிய காரணங்கள் என்றும் 'இந்து' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் உண்மை நிலை என்னவென்றால், கடந்த 10-4-2002 முடிய 42,433 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. தேர்வாளர்களின் நன்மையை மனதில் கொண்டு, பெண் தேர்வாளர்களுக்கான தனித் திறன் போட்டியில் - Endurance Test-ல் 1,500 மீட்டர் தூர ஓட்டப் பந்தயத்தினை 5 மணித் துளிகளில் முடிக்க வேண்டும் என இருந்த ஆணையினை கனிவுடன் பரிசீலித்து 7 மணித் துளிகளில் முடித்தால் போதும் என்று மாற்றி இந்த அரசு புதிய ஆணை வெளியிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

இதுகுறித்து உண்மை நிலை அடங்கிய விளக்கம் 'இந்து' நாளேட்டிற்கு அரசுத் தரப்பில் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனாலும் வழக்கம்போல் இந்த அரசின் சாதனைகளைப் பாராட்டுவதற்குப் பின்வாங்கியும், குறை கூறுவதற்கு ஓடோடியும் வருகின்ற 'இந்து' நாளேடு அந்த விளக்கத்தையும் முழுமையாகப் பிரசுரம் செய்யவில்லை. அதனால்தான் தற்போது நான் இந்த விளக்கத்தைப் பேரவையில் அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும், விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதி நாள் 10-4-2002 என்பதை மேலும் ஒரு மாத அளவிற்கு நீட்டித்து 10-5-2002 வரை விண்ணப்பிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, 17-4-2002 அன்று செய்தித் தாள்களில் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது 19-4-2002 முடிய இரண்டாம் நிலை பெண் காவலர் தேர்விற்காக 45 ஆயிரத்து 798 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன என்பதை இங்கே அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழாவதாக, இதுமட்டுமின்றி, 3,500 இரண்டாம் நிலை ஆண் காவலர் மற்றும் 352 சிறைக் காவலர் பதவிக்கான தேர்வு நடத்த சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்வு குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எட்டாவதாக, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 5 ஆண்டு காலத்தில் 574 இரண்டாம் நிலை பெண் காவலர்கள், 496 சிறைக் காவலர்கள், 3,793 இரண்டாம் நிலை ஆண் காவலர்கள் மற்றும் 975 சார் ஆய்வாளர்கள் மட்டுமே பணி நியமனம் செய்யப்பட்டிருந்தனர். ஆனால் இந்த ஆட்சியில்தான் கடந்த 10 மாதங்களில் மிகக் குறுகிய காலத்தில் பணி நியமன ஆணை வழங்கப்படாது நிலுவையிலிருந்த 161 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள், 264 இரண்டாம் நிலை பெண் காவலர்கள், 1021 தீயணைப்பாளர்கள் பதவிகளுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், நேர்காணல் தேர்வு நடத்தப்பெறாது நிலுவையிலிருந்த இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் இரண்டாம் நிலை ஆண் காவலர் பதவிகளுக்கான நேர்காணல் தேர்வுகள் நடைபெற்று, 321 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களும், 3653 இரண்டாம் நிலை ஆண் காவலர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும் மன நிறைவோடு இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் காவல் துறையில் அமைச்சுப் பணியாளர்களுக்கு—Ministerial Staff-க்கு, Executive Staff-க்குச் சமமான சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை

வைத்தார்கள். காவல் துறையில் Executive Staff என்றிருக்கின்றவர்கள் பல்வேறு ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்தித்து கடமையாற்ற வேண்டியிருக்கிறது. பல நேரங்களில் அவர்கள் தங்கள் குடும்பத்தினரோடு இருக்க முடியாமல் வேறு எங்கோ தொலை தூரத்தில் தனிமையில் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட அவர்களுடைய சிரமமான பணிச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டுதான் அவர்களுக்கு அந்தச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால், மாறாக, Ministerial Clerical Staff என்பவர்கள் வேறு எந்தத் துறையிலும் இருக்கின்ற Ministerial Staff போலத்தான் அவர்கள் அலுவலகப் பணியாற்றுகிறார்கள். ஆகவே, Executive Staff-க்கும் Ministerial Staff-க்கும் இடையே Parity தேவையில்லை. சமமாக அவர்களைக் கருத வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது, இந்த ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

(1) வளர்ந்துவரும் பொருளாதார, தொழில் நுட்ப மாற்றங்களினால் நூதன வகைக் குற்றங்கள் மற்றும் கணினிவழிக் குற்றங்கள் ஆகியவை பெருகி வருகின்றன. மேலும், கணினி மற்றும் தொலைத் தொடர்புகளில் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றம் பொருளாதாரக் குற்றங்கள் குறித்து புலனாய்வு செய்வதில் அதிகச் செலவை உண்டாக்குகிறது. போதை மருந்து விற்பனை, கருப்புப் பணத்தை வெள்ளையாக்குதல், படைக் கலன்கள் மற்றும் வெடிமருந்துகளைக் கடத்துதல், தனிநபர் மற்றும் கலாச்சார சொத்துப் பறிப்பு, கணினிவழிக் குற்றங்கள் போன்ற திட்டமிட்ட குற்றங்களைக் கவனிக்க திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவுகள் மற்றும் கணினிவழிக் குற்றத் தடுப்புப் பிரிவுகளை ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய பிரிவுகள் குற்றப் புலனாய்வுத் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் ஒட்டுமொத்த மேற்பார்வையின்கீழ் குற்றப்பிரிவு காவல் துறைத் தலைவரின் தலைமையில் செயல்பட உள்ளன. திட்டமிட்ட குற்றப் பிரிவு ஒவ்வொன்றிலும் ஒரு துணை கண்காணிப்பாளர், இரண்டு ஆய்வாளர்கள், இரண்டு சார் ஆய்வாளர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள், 4 இரண்டாம் நிலைக் காவலர்கள், 3 ஓட்டுநர் காவலர்கள் ஆகியோர் இருப்பார்கள்.



பிற்பகல் 1-20

இந்தப் பிரிவுகள் தமிழ்நாட்டிலுள்ள திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய காவல் ஆணையர் அலுவலகங்கள், சென்னையை ஒட்டியுள்ள எல்லையோர மாவட்டங்கள், சென்னையிலுள்ள குற்றப் புலானாய்வுத் துறை தலைமையிடம் ஆகிய இடங்களில் அமைக்கப்படும். சென்னை ஆணையர் அலுவலகத்தில் ஓர் உதவி ஆணையாளர், ஓர் ஆய்வாளர், இரண்டு சார் ஆய்வாளர்கள், இரண்டு தொழில்நுட்ப சார் ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு இந்தப் பிரிவு அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) காவல் துறையின் Police Tele-communication Branch அதாவது தொலைத் தொடர்புப் பிரிவு, காவல் துறையில் மிகவும் முக்கியமான பிரிவு ஆகும். இந்தப் பிரிவின் முக்கிய நோக்கம் காவல் துறை, வானொலி தொலைத் தொடர்பு அமைப்பின் மூலம் காவல் துறையின் தேவைகளை நிறைவு செய்வதே ஆகும். தற்போது இந்தப் பிரிவில் ஆய்வாளர் நிலையில் 36 பணியிடங்கள் உள்ளன. இந்தப் பிரிவு நன்கு செயல்படவும், அதன் செயல்பாட்டை உன்னிப்பாகக் கண்காணிக்கவும் மேலும் 22 ஆய்வாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தப் பிரிவில் உள்ள பயிற்றுநர்களுக்கு அவர்களது அடிப்படை ஊதியத்தில் 10 சதவிகிதம் பணிப்படியாக வழங்கப்படும். மேலும் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு ஒன்றை தனியாக இந்தப் பிரிவிற்காக ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு மோட்டார் போக்குவரத்துப் படி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) காவல் துறையில் சேர்பவர்களை அவர்களது பணிக்கேற்ப ஊக்குவிப்பதற்கு பயிற்சி ஒரு முக்கியமான அங்கமாக உள்ளது. பயிற்றுவிப்பதில் ஆர்வமும், பற்றும் உள்ள அலுவலர்களை பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பது மிகவும் அவசியம். காவல் துறையில் உள்ள மிகச்சிறந்த, திறமையானவர்களை காவல் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரிய ஈர்க்கும் வகையிலும், அவர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையிலும் ஒவ்வோர் ஆண்டும் பயிற்சி அளிப்பவர்களுக்கு புதியதாக மத்திய அரசின் 2 பதக்கங்களும், மாநில அரசின் 4 பதக்கங்களும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) பயிற்சி நிறுவனங்களில் சிறந்த, திறமையான காவல் அதிகாரிகள் பணி புரிய வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரி, வேலூர் காவலர் ஆட்சேர்ப்புப் பள்ளி, கோயம்புத்தூர் காவலர் ஆட்சேர்ப்புப் பள்ளி மற்றும் அனைத்துத் தற்காலிக காவலர் ஆட்சேர்ப்புப் பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரியும் பயிற்சியாளர்களுக்கு தற்போது அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகிதம் பயிற்சிப் படியாக வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிப் படி இனி அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 16.64 இலட்சம் ரூபாய் செலவாகும். இந்தச் சலுகை இதுவரை வழங்கப்படாத தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி (Tamil Nadu Commando School), சிறப்புக் காவல் படை பயிற்சிப் பள்ளி (Special Branch Training School) ஆகியவற்றிலுள்ள பயிற்சியாளர் களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) காவலர்கள் மற்றும் பொது மக்களிடையே சுமுகமான உறவை மேம்படுத்துவதற்கு பயிலரங்கம், குறுகிய கால பயிற்சி வகுப்புகள், தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்கம் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றை ஆண்டுதோறும் நடத்துவதற்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் சுழல் நிதி ஒன்று அமைக்கப்படும். மேலும், இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும் சிறப்புப் பயிற்சியாளர்களுக்கு 5,000 ரூபாய் மதிப்பூதியம் வழங்க காவல் துறை பயிற்சி இயக்குனருக்கு அனுமதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) பெண்கள் மற்றும் குழந்தைகளை திட்டமிட்டு விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதை ஒடுக்கும் நோக்குடன் சென்னையில் குற்றத் தடுப்புப் படைப் பிரிவு—Anti-vice Squad—என்ற தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புதிய பிரிவு பெண்கள் மற்றும் குழந்தைகளை திட்டமிட்டு விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதைக் கண்டறிந்து தடுக்கும். இந்தப் பிரிவில் ஒரு துணை கண்காணிப்பாளர், ஓர் ஆய்வாளர், மூன்று சார் ஆய்வாளர்கள், மூன்று தலைமைக் காவலர்கள், ஆறு காவலர்கள் ஆகியோர் இருப்பார்கள். இந்தப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, கூடுதல் தலைமை இயக்குநரின் ஒட்டுமொத்த மேற்பார்வையின்கீழ் செயல்படும். (மேசையைத் தட்டும் ஒலி)





(7) உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள புதிய சவால்களை மாநில மற்றும் மாவட்ட புலனாய்வுப் பிரிவுகள் சிறந்த முறையில் எதிர்கொள்ள வேண்டும். இதற்காக மாநிலப் புலனாய்வுத் துறையின் செயல்பாடு மேலும் வலுவூட்டப்படும். உளவு தகவல் சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில் கூடுதல் பணியாளர்களும், தேவையான அடிப்படை வசதிகளும் உளவுத் துறைக்கு செய்து தரப்படும். 6 ஆய்வாளர்கள், 17 சார் ஆய்வாளர்கள், 46 தலைமைக் காவலர்கள், 57 காவலர்கள் ஆகிய பணியிடங்கள் வழங்கப்படும். மேசை, நாற்காலிகள், பேக்ஸ் இயந்திரங்கள், கணினிகள், நுண்ணலை தொலைபேசிகள், செல் போன்கள் போன்ற அடிப்படை வசதிகளும் வழங்கப்படும். Special Branch Training School–அதாவது, சிறப்புப் பிரிவு பயிற்சிப் பள்ளிக்கு மேலும் 2 ஆய்வாளர்கள் கூடுதலாக நியமிக்கப்படுவார்கள். மேலும், சிறப்புப் பிரிவு பயிற்சிப் பள்ளியில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தில் 15 சதவீதம் சிறப்பு ஊதியமாக ஆண்டொன்றுக்கு 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

(8) மத ரீதியான தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறித்து முன்னதாகவே, உளவுத் தகவல் சேகரிக்கவும் தமிழ்நாட்டில் அத்தகையோர் பல்வகை நிலைகளில் உருவாக்குகின்ற பிரச்சினைகளைச் சமாளிக்கவும் கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகரங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டொன்றுக்கு 37.27 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புப் படைப் பிரிவு (Special Wing) ஒன்று உருவாக்கப்படும். இந்தப் பிரிவுகள் மாநகரக் காவல் துறை ஆணையாளர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும். இந்த இரண்டு சிறப்புப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் 2 உதவி ஆணையாளர்கள், 4 ஆய்வாளர்கள், 8 சார் ஆய்வாளர்கள், 16 தலைமைக் காவலர்கள் ஆகியோர் இருப்பார்கள்.

(9) தமிழ்நாடு காவல் துறை உள்நாட்டுப் பாதுகாப்புப் பிரச்சினை களைச் சமாளிப்பதில் தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறபோதிலும் ஆந்த்ராக்ஸ் (Anthrax) போன்ற தொற்று நோய்க் கிருமிகள், பெரும் அழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்ற தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கவும் முக்கியமான அலுவலகங்கள், வெளிநாட்டு தூதரகங்கள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் புதிய சிறப்புக் காவல் படை (Special Force) ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக,

சென்னையை அடுத்துள்ள வீராபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு காவல் துறை சிறப்புக் காவல் பணிட் ஒன்று சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம் ஆகிய 6 இடங்களில் 6 சிறப்புப் படைப் பிரிவுகள் 14.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறப்புப் படைப் பிரிவுகளில் ஒரு தளவாய் (Commandant), ஒரு துணை தளவாய் (Deputy Commandant), 6 உதவி தளவாய்கள் (Assistant Commandants), 8 ஆய்வாளர்கள், 23 சார் ஆய்வாளர்கள், 124 ஹவில்தார்கள், 148 நாயக்குகள், 698 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோரும் அமைச்சுப் பணியில் 1 நேர்முக உதவியாளர், 3 கண்காணிப்பாளர்கள், 9 உதவியாளர்கள், 9 இளநிலை உதவியாளர்கள், 3 தட்டச்சர்கள், 1 சுருக்கெழுத்து-தட்டச்சர், 1 பதிவு எழுத்தர், 6 அலுவலக உதவியாளர்கள் ஆகியோர் இருப்பார்கள்.

(10) பெருகி வரும் மக்கள் தொகை, குற்ற நிகழ்வுகள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், வகுப்பு மோதல்கள், தொழிலாளர் போராட்டங்கள், யாத்ரீகர்கள், சுற்றுலாப் பயணிகள், போக்குவரத்து அதிகரிப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு குறிப்பிட்ட 5 காவல் நிலையங்களில் கூடுதலாகக் காவல் பணியாளர்கள் அமர்த்தப்படுவார்கள். அதாவது, மதுரை மாநகரில் அண்ணா நகர், விழுப்புரத்தில் திருவக்கரை, காஞ்சிபுரத்தில் இருங்காட்டுக்கோட்டை, தூத்துக்குடியில் சிப்காட் வளாகம் மற்றும் சண்முகாபுரம் ஆகிய 5 இடங்களில் கூடுதலாக காவல் பணியாளர்கள் அமர்த்தப்படுவார்கள். இந்தக் காவல் நிலையங்களுக்குக் கூடுதலாக 1 சார் ஆய்வாளர், 2 தலைமைக் காவலர்கள், 3 முதல் நிலைக் காவலர்கள், 6 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகிய புதிய பணியிடங்கள் வழங்கப்படும். மேலும் போக்குவரத்து வாகனங்களின் பயன்பாடு அதிகமாக உள்ள குறிப்பிட்ட 5 இடங்களில் புதிய போக்குவரத்துப் பிரிவு ஒன்று அதாவது திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்திலும், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் காவல் நிலையத்திலும், திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் காவல் நிலையத்திலும், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் காவல் நிலையத்திலும், நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கன்னி காவல் நிலையத்திலும் புதிய போக்குவரத்துப் பிரிவு ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் ஒரு சார் ஆய்வாளர், 2 தலைமைக் காவலர்கள், 2 முதல் நிலைக் காவலர்கள் மற்றும் 4 இரண்டாம் நிலைக் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்காக ஆண்டொன்றுக்கு 1.10 கோடி ரூபாய் செலவில் ஒட்டுமொத்தமாக 10 சார்-ஆய்வாளர்கள், 20 தலைமைக்



காவலர்கள், 25 முதல் நிலைக் காவலர்கள், 50 இரண்டாம் நிலைக் காவலர்கள் கூடுதலாக நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

(11) கடமையுணர்வுடன் பணியாற்றுதல், பாராட்டத்தக்க பணிபுரிதல், வீர தீரச் செயல்கள் ஆகியவற்றுக்காக காவல் துறை பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் வீரப் பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் புலனாய்வுப் பணியை சிறப்பாக ஆற்றுபவர்களுக்கு என்று தனியாக பதக்கம் ஏதும் வழங்கப்படுவதில்லை. ஆகவே, குற்றப் புலனாய்வுத் துறை, குற்றப்பிரிவு ஆகிய பிரிவுகளில் உள்ள காவல் துறை சார் ஆய்வாளர்கள் முதற்கொண்டு கூடுதல் கண்காணிப்பாளர் வரையிலுள்ள பணியாளர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் 10 பதக்கங்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்தப் பதக்கம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் 5 ஆயிரம் ரூபாய் வெகுமதி வழங்கப்படும்.

(12) பொதுவாக காவல் துறையினருக்கு நிதி உதவி, நிவாரணம் மற்றும் அவர்களின் குழந்தைகளின் படிப்பு உதவித் தொகை ஆகியவற்றின் அளவை உயர்த்த வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலும், காவல் துறையினர் தெரிவித்த கோரிக்கையின் அடிப்படையிலும் தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு, அதாவது Tamil Nadu Police Benevolent Fund-க்கு வழங்கப்படும் ஆண்டு மானியம், தற்பொழுதுள்ள ரூபாய் 25 இலட்சத்திலிருந்து இனி ரூபாய் 50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(13) இந்தியா முழுவதிலிருந்தும், சென்னை மாநகருக்கு மிக முக்கியப் பிரமுகர்கள் வருகைதரும்போது, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு சென்னை மாநகரில் தற்பொழுது தனியார் வண்டிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு வருகின்றன. சராசரியாக ஒவ்வொரு நாளும், மிக முக்கியப் பிரமுகர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய 10 முதல் 15 வண்டிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு வருகின்றன. மிக முக்கியப் பிரமுகர்களுக்கு

சிறந்த முறையில் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணிக்கென ஆண்டு ஒன்றுக்கு 21 இலட்சம் ரூபாய் செலவில் ஆண்டு ஒன்றுக்கு 5 கார்கள் என்ற விகிதத்தில் அடுத்த 4 ஆண்டுகளில் மொத்தம் 20 புதிய கார்கள் வாங்கி வழங்கப்படும்.

(14) போக்குவரத்துப் பணியை மேற்கொள்ளும் காவலர்கள் தமது பணியினை சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், சென்னை மாநகர் மற்றும் பிற மாநகர ஆணையாளர் அலுவலகங்கள் மற்றும் மாவட்டங்களிலுள்ள போக்குவரத்துப் பிரிவிலுள்ள காவல் துறைப் பணியாளர்களுக்கு தற்போது 4 ஜோடி சீருடைகள், 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் போக்குவரத்துப் பிரிவு காவலர்கள் வெயிலிலும், மழையிலும் நின்று பணிபுரிவதால், அவர்கள் சீருடை மிகவும் சீக்கிரமாக அழுக்கடைந்து விடுகிறது. ஆகவே, அவர்கள் சிறந்த முறையில் சீருடை அணிய ஏதுவாக ஆண்டு ஒன்றுக்கு 13.22 இலட்சம் ரூபாய் செலவில் அவர்களுக்குக் கூடுதலாக 3 வெள்ளை நிற டெரிகாட்டன் சட்டைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(15) உளவுத் தகவல் பிரிவுகளில் உள்ள காவல் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் கண்காணிப்புப் பணிகளை தங்குதடையின்றி மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் மிக முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மிகவும் மிடுக்கோடு தோற்றமளிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்தின் அடிப்படையில், அனைத்து ஆணையர் அலுவலகங்களில் உளவுத் தகவல் பிரிவு பணியாளர்களுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 6.66 இலட்சம் ரூபாய் செலவில் 2 செட் Safari Suit-களும், ஒரு ஜோடி கருப்பு நிற Leather Shoe மற்றும் 2 ஜோடி காலுறைகளும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(16) தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் தற்பொழுது கட்டிவரும் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்புகளில் உள்ள கட்டடப் பரப்பு 450 சதுர அடி மட்டுமேயாகும். இந்தக் குடியிருப்புகளில் உள்ள கூடம் மற்றும் உணவு அருந்தும் அறை மற்றும் படுக்கை அறை ஆகியவை மிகவும் சிறியதாக உள்ளன. இத்தகைய குடியிருப்புகளின் பரப்பளவை ஓரளவிற்கு அதிகரித்தால், அங்கு



வசிக்கின்ற காவலர்களின் குடும்பத்தினருக்கு மிகுந்த வசதியாக இருக்கும். எனவே, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் இனிமேல் கட்ட இருக்கும் காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்புகளின் கட்டடப் பரப்பை தற்போதுள்ள 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடியாக உயர்த்திக் கட்டித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 100 சதுர அடி என்ற கூடுதல் பரப்பு 2002-2003ஆம் ஆண்டில் கட்டடப்படவுள்ள அனைத்து வீடுகளிலும் இருக்கும். இந்தக் கூடுதல் வசதி, வீடு ஒன்றுக்கு 55,750 ரூபாய் வீதம் மொத்தம் 16.72 கோடி ரூபாய் செலவில் அமைத்துத் தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-35

(17) தமிழகக் காவல் துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகளை அதிகரித்துக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, இந்த ஆண்டில் 115 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின்மூலம் காவல் துறைப் பணியாளர்களுக்காக மொத்தம் 3000 புதிய வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(18) காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் இருப்புப் பாதை காவல் துறைக்கு அதாவது Railway Police-க்கு கூடுதலாக புதிய சாதனங்கள் வழங்கப்படும். அதாவது, சோதனையிடுவதற்கான விளக்குகள், வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனங்கள், மோப்ப நாய்கள், நிழற்பட சாதனங்கள் (still cameras), வாக்கி-டாக்கி செட்டுகள், எக்ஸ்ரே படக் கருவிகள் ஆகியவை இருப்புப் பாதை காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும். அவர்கள் இரவுப் பணிக்கு அமர்த்தப்படும்போது, அவர்களுக்கு சிறப்புப் படியும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(19) நடப்பு ஆண்டான 2002-2003 ஆம் ஆண்டில் கூடுதலாக 1056 ஊர்க் காவலர் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்வாயிலாக, தற்போதுள்ள தமிழ்நாடு ஊர்க் காவல் பணியாளர்களுடைய எண்ணிக்கையான 10566 என்பது 11622 ஆக உயர்த்தப்படும். இந்தக் கூடுதல் பதவிகள் அனைத்திலும் பெண்களே ஊர்க் காவலர்களாக

பணியமர்த்தப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மேலும், இதுமட்டுமின்றி, Home Guards-ல், ஊர்க் காவல் படையில் தற்போது காலியாகவுள்ள இடங்கள் அனைத்தும் மகளிரைக் கொண்டே நிரப்பப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(20) தமிழ்நாடு காவல் துறை, அதிகாரிகளை அதிக அளவில் கொண்டு விளங்கவும், காவலர் பதவி நிலுவையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திலும், தமிழ்நாடு காவல் துறையை அதிக அளவிற்கு அதிகாரிகளைக் கொண்டதாக மாற்றுவதற்கு—making the Police force Officer-Oriented—உரிய வழிமுறைகளை அரசுக்குத் தெரிவிக்க மூத்த காவல் துறை அதிகாரிகள் அடங்கிய 3 உறுப்பினர் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(21) கடந்த 13-12-2001 அன்று இந்திய நாடாளுமன்றத்தில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து, அத்தகைய தாக்குதல்களிலிருந்து சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்தைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, 5.42 கோடி ரூபாய் செலவில், காவல் துறை துணை ஆணையாளரின் மேற்பார்வையின்கீழ் தனியாக தலைமைச் செயலகப் பாதுகாப்பு மாவட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) Formation of Security District for Chennai City. இதற்காக ஒரு துணை ஆணையாளர், 1 உதவி ஆணையாளர், 5 ஆய்வாளர்கள், 98 சார்-ஆய்வாளர்கள், 40 தலைமைக் காவலர்கள், 190 காவலர்கள் வழங்கப்படுவார்கள். மேலும், Route Bandobust, அதாவது வழித்தடப் பாதுகாப்புப் பணிக்காக 2 உதவி ஆணையாளர், 4 ஆய்வாளர்கள், 8 சார்-ஆய்வாளர்கள், 16 தலைமைக் காவலர்கள், 32 முதல் நிலைக் காவலர்கள், 32 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோரும் மொத்தம் 94 பணியாளர்களுக்கு அனுமதியும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(22) தமிழ்நாடு அதிரடிப் படை, (Tamil Nadu Commando Force) மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை தனிப்பிரிவு, (Core Cell C.I.D.) ஆகியவற்றிற்கு வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழக்கச் செய்யும் படை



(Bomb Detection and Disposal Squad) ஏற்படுத்த அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கி, சென்னை மாநகரக் காவல் துறை, மதுரை மாவட்டம் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மாநகரங்களில் உள்ள குற்றப் புலனாய்வுத் துறை பாதுகாப்புப் பிரிவுகளுக்கு உரிய சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமின்றி, 12 சரகங்களுக்கும், சாதனங்கள் வழங்கப் பட்டுள்ளன. இருப்பினும், காவல் ஆணையாளர்கள் அலுவலகங்கள் அனைத்திற்கும், வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழக்கச் செய்யும் புதிய படைகளை ஏற்படுத்தவும், சென்னைக்கு இப்பிரிவில் உள்ள அடிப்படை வசதிகளை மேலும் வலுவூட்டவும் 6 காவல் துறை ஆணையாளர் அலுவலகங்கள், குற்றப் புலனாய்வுத் துறை பாதுகாப்புப் பிரிவு மற்றும் ஏற்கெனவே நான் கூறியவாறு, சென்னையில் உருவாக்கப்படவுள்ள தலைமைச் செயலக காவல் மாவட்டம் ஆகிய இடங்களில் இப்பிரிவுகள் 2.48 கோடி ரூபாய் செலவில் புதியதாக ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

(23) தற்போது சென்னை மாநகர காவல் துறையில் காவல் சார்ந்த சிறப்புப் பணிகளை மேற்கொள்ள தனியாக பணிக் குழு எதுவும் இல்லை. இயற்கைச் சீற்றங்கள் மற்றும் எதிர்பாராச் சம்பவங்கள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு இத்தகைய தனி சிறப்புப் பணிக் குழுவை அமைக்க வேண்டியது மிக அவசியம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இதற்காக ஒரு Special Action Group அதாவது, சிறப்புப் பணிக் குழு ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சிறப்புப் பணிக் குழுவில் ஓர் ஆய்வாளர், 4 சார் ஆய்வாளர்கள், 12 தலைமைக் காவலர்கள், 18 முதல் நிலைக் காவலர்கள், 90 இரண்டாம் நிலைக் காவலர்கள், ஆகமொத்தம் 125 பணியாளர்கள் பணிபுரிவார்கள். மேலும் இந்த சிறப்புப் பணிக் குழுவில் பணிபுரியும் காவல் துறைப் பணியாளர்கள் கடினமான சூழ்நிலையில் பணிபுரிய வேண்டியுள்ளதால், அவர்களுக்கு புதிய படிகள் அளிக்கப்படும்.

இடர்ப்படியாக - Risk Allowance-ஆக மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாயும், இடர்ப்பாட்டுப் படியாக - Hardship Allowance- ஆக மாதம் ஒன்றுக்கு 900 ரூபாயும், நாட்படியாக Daily Allowance - ஆக தற்போதுள்ள 50 ரூபாய் முதல் 120 ரூபாய் வரையுள்ள படியை இரண்டு மடங்காக

உயர்த்தியும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(24) காவல் துறையைச் சார்ந்த காவலர்கள் சமூகத்தின் பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்தி வருவதால், தங்கள் வீட்டைக் கவனிக்க அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. எனவே, காவலர்களுடைய குழந்தைகளின் கல்வித் திறனை ஊக்குவிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது என்று நான் கருதுகிறேன். இதனைக் கருத்தில்கொண்டு காவல் துறைப் பணியாளர்களின் திறமைமிக்க குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளி - School of Excellence ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பள்ளி வண்டலூரில் தமிழ்நாடு காவலர் கழகம் அமைந்துள்ள இடத்தில் ஏற்படுத்தப்படும். நடப்பு ஆண்டான இந்த 2002-2003-இல் இந்தத் திட்டத்தில் முதற்கட்டப் பணி எடுத்துக் கொள்ளப்படும்போது, புதிய பள்ளி மற்றும் மாணவர் தங்கும் விடுதிக் கட்டடங்களுக்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(25) காவல் பணி கடுமையான பணியாகும். காவல் துறை அதிகாரிகள், குறிப்பாக தொடக்க நிலையில் உள்ள சார் ஆய்வாளர்கள் சிறந்த அறிவும், குற்றவியல் சட்டம், தடய அறிவியல், புலனாய்வுத் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் நல்ல தேர்ச்சி பெற்று விளங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தற்போது புதிதாக நியமிக்கப்படும் சார் ஆய்வாளர்களுக்கு 12 மாதங்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது. நிறுவனப் பயிற்சியில் காவல் பணிக்குத் தேவைப்படும் அனைத்துத் தொழில் திறமைகளையும் கற்றுக் கொடுக்க இயலாது. எனவே, சார் ஆய்வாளர் நிலையில் உள்ள அதிகாரிகளுக்காகப் புதிதாக சார் ஆய்வாளர்கள் பயிற்சிக் கழகம் (Sub-Inspectors Cadet Academy) ஒன்று ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(26) காவலர்களுக்கும், மக்களுக்கும் இடையே சிறந்த தொடர்பை ஏற்படுத்தவும், பொதுமக்களிடையே காவல் துறையைப்பற்றி நம்பிக்கையை ஊட்டவும், காவல் பணியில் ஆக்கப்பூர்வமான அணுகுமுறைக்கு வழி வகுக்கவும் புதிதாக நடமாடும் காவல் நிலையங்கள்—Mobile Police Stations ஏற்படுத்தப்படும் என்பதைத்



தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக, சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த அண்ணா நகர் காவல் மாவட்டத்தில் சோதனை அடிப்படையில் நடமாடும் காவல் நிலையம், ஒன்று ஏற்படுத்தப்படும். இது அண்ணா நகர் காவல் மாவட்டம் முழுவதையும் தனது அதிகார வரம்பாகக் கொண்டு செயல்படும். இந்த நடமாடும் காவல் நிலையம், காவல் துறை துணை ஆணையாளரின் நேரடிக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின்கீழ் செயல்படும். இத்தகைய நடமாடும் காவல் நிலையங்கள் முன்னரே திட்டமிட்டு, அறிவிக்கப்பட்ட இடங்களில் செயல்படும். இதுபற்றிப் பொதுமக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். நடமாடும் காவல் நிலையம் செயல்படும் இடங்களில், மாவட்டத்தில் எந்த இடத்திலிருந்தும் பொதுமக்கள் புகார்களை அளிக்கலாம். மேலும், நடமாடும் காவல் நிலையம் முறையாக செய்திப் படங்களையும், விளம்பரப் படங்களையும் வெளியிடுவதன்மூலம் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள், போதைப் பொருள் மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாதல், வரதட்சணைக் கொடுமை போன்ற சமூகக் கொடுமைகள், பல்வேறு சமூகச் சட்டங்கள், அரசு நலத் திட்டங்கள் ஆகியவைபற்றியும் மக்களுக்கு எடுத்துரைக்கும். புதிய நடமாடும் காவல் நிலையம் 17.42 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(27) சென்னை மாநகரத்திலுள்ள ஆய்வாளர்கள் மற்றும் சார் ஆய்வாளர்களுக்கான உணவுக் கட்டணம்—Diet Charges நாளொன்றுக்கு தற்போதுள்ள 55 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும், தலைமைக் காவலர்கள் மற்றும் முதல் நிலைக் காவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு தற்போதுள்ள 50 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும், காவலர்களுக்கு நாளொன்றுக்கு தற்போதுள்ள 45 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

சென்னை மாநகரக் காவல் துறைக்கு இந்தச் சலுகை 9.68 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். சென்னையிலுள்ள காவல் துறைப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் இந்த உணவுக் கட்டண உயர்வு சென்னையிலுள்ள சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைப்பற்றி அதிகாரிகளோடு விவாதம் நடைபெற்றபோது, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் அளவில் கட்டணத்தை உயர்த்த லாம் என்று சொன்னார்கள். அதாவது, 50 ரூபாய் உள்ளவர்களுக்கு 70 ரூபாய் ஆக்கலாம், 55 ரூபாய் உள்ளவர்களுக்கு 75 ரூபாய் ஆக்கலாம் என்றார்கள். நான் சொன்னேன், அவர்கள் எந்த ரேங்கில் இருந்தாலும் பசி ஒன்றுதான். மனிதர்களுக்கு வயிறு என்பது ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எல்லோருக்கும் அதை 80 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று சொன்னேன். அதன்படிதான் இப்போது முடிவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(28) அதிகரித்து வருகின்ற அன்றாடச் செலவைக் கருத்திற்கொண்டு காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மிகை நேரப்பணி ஊதியம்—Extra time remuneration நாள் ஒன்றிற்கு தற்போதுள்ள 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வு ஆண்டு ஒன்றுக்கு 20.13 கோடி ரூபாய் செலவில் அமல்படுத்தப்படும். காவல் துறைப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் மிகை நேர ஊதிய உயர்வு சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைப் பணியாளர்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(29) அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட எல்லா காவல் நிலையங்களிலும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள், பொதுக் கூட்டங்கள், சவப் பரிசோதனை போன்றவற்றைப் படம் எடுப்பதற்காக வீடியோ காமிராக்கள் போன்ற உரிய சாதனங்கள் 6.54 கோடி ரூபாய் செலவில் சுருக்கெழுத்துப் பிரிவுகளை வலுப்படுத்தும் வகையில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவல் நிலையங்களிலுள்ள பணியாளர்கள் இந்தக் கருவிகளைத் திறம்படக் கையாள்வதற்காக அவர்களுக்குரிய பயிற்சியும் வழங்கப்படும்.

(30) மண்டல காவல் துறைத் தலைவர் பதவிகளின் எண்ணிக்கை தற்போதுள்ள இரண்டிலிருந்து நான்காக உயர்த்தப்படும். சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு வடக்கு மண்டலத்திற்கு ஒருவரும், திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு மத்திய மண்டலத்திற்கு ஒருவரும், ,கோயம்புத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேற்கு மண்டலத்திற்கு ஒருவரும்,



தெற்கு மண்டலத்திற்கு
மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு
நான்கு
ஒருவருமாக, ஆண்டு ஒன்றுக்கு 70 இலட்சம் ரூபாய் செலவில்
மண்டல காவல் துறைத் தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி)

(31) செங்கற்பட்டு கிழக்கு மாவட்டக் காவல் துறையினர், சென்னை
மாநகரைப் போன்றே நிறையப் பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர்.
ஆனால், சென்னை மாநகரத்துடன் ஒப்பிடும்போது, செங்கற்பட்டு
கிழக்கு மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட காவல் துறைப்
பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். எனவே,
செங்கற்பட்டு கிழக்கு மாவட்டத்திற்கு குற்றவியல் சட்டம்-ஒழுங்கு,
போக்குவரத்துப் பிரிவுகளுக்காக, தற்போதுள்ள காவல் நிலையங்களுக்கு
கூடுதலாகப் பணியாளர்களும், கூடுதல் வாகனங்கள், தகவல்
தொடர்பு சாதனங்கள், படைக்கலன்கள், ஆயுதங்கள் முதலியவற்றை
வழங்குவது மிகவும் அவசியம் என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது.
சென்னை மாநகர எல்லைகளில் உள்ள காவல் நிலையங்ளைப் பிரிவு
1 காவல் நிலையங்களாக நிலையை உயர்த்தவும், புதிய போக்குவரத்து
காவல் நிலையங்களையும், போக்குவரத்து புலனாய்வுப் பிரிவுகளையும்
ஏற்படுத்த அனுமதிக்கவும், ஆயுதம் தாங்கிய மாவட்ட சேமக் காவல்
படைக்காக கூடுதலாக நான்கு படைகளை அனுமதிக்கவும் வாகனங்கள்,
தகவல் தொடர்பு வசதிகள், படைக்கலன்கள், ஆயுதங்கள் ஆகியவற்றை
வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 33.71
கோடி ரூபாய் செலவில் இந்தக் கூடுதல் வசதிகள் செங்கற்பட்டு
கிழக்கு காவல் மாவட்டத்திற்கு இரண்டு ஆண்டுகளில் (மேசையைத்
தட்டும் ஒலி) அதாவது 2002-2003 மற்றும் 2003-2004 ஆகிய இரண்டு
ஆண்டுகளில் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(32) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்திற்கு
ஆட்சேர்க்கை மற்றும் பொருள்கள் கொள்முதல் செய்தல்
ஆகியவற்றிற்காக தனி நிதி அதிகாரங்களுடன் பதவிப் பெயர்
வைப்பீட்டுக் கணக்கு அதாவது Personal Deposit Account செயல்படுத்த
அனுமதி வழங்கப்படும்.

(33) சென்னை மத்திய குற்றப் பிரிவில் தற்போதுள்ள கூடுதல் துணை
ஆணையாளரின் பதவி, துணை ஆணையாளர் பதவியாக நிலை
உயர்த்தப்பட்டு, மேலும் வலுப்படுத்தப்படும்.

பிற்பகல் 1-50

(34) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையைப் பொறுத்த வரையில் நடப்பு நிதியாண்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஆணையம் - Tamil Nadu Fire and Rescue Services Commission - ஒன்று அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கைகள்மீது பேசினார்கள். இந்த இரண்டு துறைகளின்மீது வெட்டுத் தீர்மானங்களைப் பலர் கொடுத்திருக்கிறார்கள். காவல் துறையைப் பொறுத்தவரையில் 222 வெட்டுத் தீர்மானங்களும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைப் பொறுத்தவரையில் 129 வெட்டுத் தீர்மானங்களும், ஆக மொத்தம் 351 வெட்டுத் தீர்மானங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் விடுத்துள்ள பல்வேறு கோரிக்கைகளையும் இந்த அரசு கவனத்துடன் பரிசீலனை செய்து நிதிநிலைக்கேற்ப தக்க முடிவுகளை எடுக்கும் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டு, காவல் துறை, மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை ஆகியவற்றுக்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் கூறிய தகவலின் பேரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை கூறுகின்றபோது, Cosmopolitan Club மற்றும் Golf விளையாட்டு மைதானம் பற்றிக் குறிப்பிட்டு, அந்த இடம் India Cements நிறுவனத்தைச் சேர்ந்த திரு. சீனிவாசனுக்கு முந்தைய அரசு முறைகேடாக வழங்கியதாகக் குறிப்பிட்டார்கள். அது தவறல்ல. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதில் குறிப்பிடுகிறபோது அந்த சீனிவாசனுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் மாறன் அவர்களும், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களும் பினாமியாகச் செயல்பட்டார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள்....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீனிவாசனுக்கு பினாமியாக அல்ல. அவர்களுக்கு இவர் பினாமியாகச் செயல்பட்டார் என்றுதான் குறிப்பிட்டார்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** சீனிவாசனுடைய பினாமியாகச் செயல்பட்டார்கள் என்று அவர்கள் இங்கே சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரங்கநாதன், பசி நேரத்தில் குழம்பிப் போய் விட்டீர்கள் என்று நினைக்கிறேன். அப்படி அல்ல. முன்னாள் முதலமைச்சருக்கும், திரு. மாறனுக்கும் பினாமியாக சீனிவாசன் இருந்தார் என்றுதான் குறிப்பிட்டார்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** சரி அப்படியே இருக்கட்டும். அவர்கள் இரண்டு பேருக்கும் இவர் பினாமியாகச் செயல்பட்டார் என்று சொன்னார்கள். இந்த மன்றம் பல சிறப்புகளைப் பெற்ற மன்றம். பல மரபுகள் அடங்கிய மன்றம். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றம் மிகப் பெரிய சிறப்புகளையும், மரபுகளையும் கொண்ட மன்றம்தான். எவ்வளவு பெரிய சிறப்பு என்று சொன்னால் 1997ஆம் ஆண்டில் அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் ஒரு செய்தித்தாளில் வந்த புகைப்படத்தை இங்கே காண்பித்து, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் ராஜீவ் காந்தியின் கொலையாளிகள் சிவராசனும், தனுவும் இங்கே நின்று இருக்கிறார்கள் என்று சொல்லி, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இது ஒரு பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தப் போகிறது என்றெல்லாம் சொல்லி, என்னையே ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புபடுத்திய சிறப்பு வாய்ந்த மாமன்றம்தான் இந்த மன்றம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், நீங்கள் சொல்ல வந்த கருத்தைப் புரிந்துகொண்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) வாக்கியத்தை முடித்துவிடுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள். அவர்கள் கூறிய அந்த பினாமி என்ற வார்த்தையை அவைக் குறிப்பேட்டிலே பதிவு செய்தால் அது தவறான முன்மாதிரியாகிவிடும். ஆகவே மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் என்னுடைய வேண்டுகோளை ஏற்று அவர்களே அந்த பினாமி என்ற வார்த்தையை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எது எப்படியோ திரு. ரங்கநாதன், உங்களுடைய தனித்தன்மையை நிலைநாட்டக்கூடிய வகையில் நீங்களும் திரு. திருமாவளவன் அவர்களும் அவையில் இருந்ததற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். இன்றுபோல் என்றும் வாழ்க. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுடைய நீண்டநாள் கோரிக்கை, தங்களுக்கு சங்கம் வேண்டும் என்பது. கேரள மாநிலத்தில் இருக்கிறது. மேற்கு வங்க மாநிலத்திலும் இருக்கிறது. ஆகவே, ஏதாவது சட்டதிட்டங்களுக்குட்பட்டு, நிபந்தனைகளின் அடிப்படையில் இங்கேயும் வழங்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு விவாதம் வேண்டாம். ஏற்கெனவே எல்லாவற்றையும் பேசிவிட்டீர்கள். திருமதி யசோதா.

*பிற்பகல் 1-55*

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 34 அறிவிப்புகள், இனிப்புக்கு மேல் இனிப்பாக, திகட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், அம்மையார், நம்முடைய முதலமைச்சர் அவர்களை, ஒய்.எம்.சி.ஏ. நிலத்தை அரசு எடுத்துக்கொள்ளும் என்ற அறிவிப்பிற்காக நான் இந்த நேரத்தில் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மீது நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதை நாடு பார்க்க வேண்டும் என்பதோடு (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொரு சிறிய ஒரு கோரிக்கையையும் நான் வைத்து இருக்கிறேன். காவல் துறைக்கு வேண்டிய 84 ஆயிரம் ஜோடி ஷூக்கள் வாங்குவதற்காக, காதியிலே கொடுத்த அந்த ஆர்டர், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு, செருப்புத் தைக்கிற குழுக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியதைத் தனி ஒருவருக்குக் கொடுத்து, 95 இலட்சம் ரூபாய் அங்கே ஊழல் நடைபெற்றிருக்கிறது; அதைப்பற்றியும் அம்மையார் அவர்கள் பதிலுரையிலே சொல்வார்கள் என்று நினைத்தேன்; ஆகவே அதுகுறித்தும் அவர்களுடைய பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று, மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள், இந்தக் காலணிகள் வாங்கியதில் நடைபெற்ற ஊழலைப் பற்றிச் சொன்னபோதே அதை நான் குறித்துக் கொண்டேன். அதுபற்றி விசாரணை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நேரம் இன்மையால்தான் அதைப்பற்றி இங்கே குறிப்பிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் புகார்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இதிலே இன்னொரு விவாதம் வேண்டாம். நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஜனத்தொகைக்குத் தகுந்த அளவிலே, காவலாளர்கள் இருப்பதாக All India statistics எல்லாவற்றையும் quote பண்ணி, இங்கே பேசினார்கள். ஆனால், இங்கே, Policy Note-இலே Annexure-I-இலே 22-வது Item அதிலே, sanctioned strength *56,696*; Actual *46,917* என்று சொல்லப்பட்டிருக்கிறது. That is about *10,000* ஆட்கள் sanction ஆனதற்குப் பிறகும், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படவில்லயா? இல்லை, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையா? - இந்த *10* ஆயிரம் ஆட்களையும் சேர்த்தால்தானே இலட்சத்துக்கு *129* ratio என்பது fill up ஆகும்? இப்போது அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலுரையில் தெளிவாகக் குறிப்பிட்டேன். இப்போது, உண்மையில் actual-ஆகப் பணியில் இருக்கின்ற பணியாளர்களின் எண்ணிக்கைப்படிதான் இந்த விகிதம் அமைந்திருந்தது. ஆகவே, காலியிடங்களை நிரப்புவதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; Uniformed Services Recruitment Board தேர்வாணையம் மூலமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெளிவாக என்னுடைய பதிலுரையிலேயே குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முகப்புரையிலே பதில்

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 25

சொல்கிறபோது, அநேகமாக தமிழகத்திலே, எதிர்க்கட்சிகள் அத்தனையுமே காவல் துறைக்கு எதிரிக்கட்சிகள் போன்ற தோற்றத்தை உருவாக்குவது போன்ற நிலையிலே அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். காவல் துறை செய்திருக்கிற நல்ல பணிகளை நாங்கள் பாராட்டி இருக்கிறோம்; பேசி இருக்கிறோம். காவல் துறையினுடைய சிறப்புகளைப் பற்றி நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால், ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகள் இதுபோன்று செய்கிறார்களே என்று சொல்வது என்பது—எப்போதுமே ஆளுங்கட்சியின் தரப்பில், ஓர் ஆளுங்கட்சி தரப்பில் இருக்கக்கூடிய காவல் துறை, அதற்குக் கீழே பணியாற்றக்கூடிய துறை; எந்தவொரு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் உண்மைச் சம்பவம் என்பதை எடுத்துக் கூறிய வரலாறு இதுவரையிலேயும் இருந்தது கிடையாது. ஆகையால், ஆளுங்கட்சிக்காரர்கள் காதைத் திறந்து வைப்பதும், எதிர்க்கட்சிக் காரர்கள் வாயைத் திறந்திருப்பதும் வழக்கமாக இம்மன்றங்களில் நடைபெற்று வருகின்றன. அப்படிச் சொல்கிறபோது, ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகள், இந்தத் துறைக்கு ஓர் எதிரியாக களங்கம் கற்பிப்பது போன்று இருக்கிறது. நாங்கள் இந்தத் துறையைக் களங்கம் கற்பிக்கவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பதைப் பார்த்தோம் என்று சொன்னால், மறைமுகமாக, எதிர்க்கட்சிகளுக்கு காவல் துறை விரோதம் போன்று இன்றைக்கு ஒரு பார்வை வருகிறது என்றால், அது மீண்டும் எதிர்க்கட்சிகள் மீது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உள்நோக்கமாகச் சொல்லவில்லை. திரு. பழனிசாமி, உங்களுக்கு முதலமைச்சர் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், என்னுடைய தொடக்க உரையைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் கருதுகிறேன். நான் மிகவும் தத்துவரீதியாக—Philosophical—ஆக பேசினேன். என்னுடைய பேச்சுக்கு இப்படி உள்நோக்கம் கற்பிப்பது நியாயம் அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** நிச்சயமாக உள்நோக்கம் கிடையாது. உள்நோக்கம் இருந்தால், இப்படிப் பேசியிருக்க மாட்டேன். நான் உள்நோக்கம் கற்பிக்கின்ற அந்த நோக்கத்திலே பேசவில்லை.



2002 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, முதலமைச்சர் அவர்கள் தொடக்கத்திலேயே சொன்னார்கள். இந்த அவையே ஒழுங்காக நடக்கிறது என்று சொன்னால், காவலர்கள் வெளியிலே நிற்பதுதான் காரணம் என்று சொன்னார்கள். வெளியிலே நிற்பது மட்டுமல்ல; உள்ளேயும் வந்து அவர்கள் சில கடமைகளையும் செய்ய வேண்டிய காரணத்தினாலேதான், அவை ஒழுங்காக நடக்கிறது. (சிரிப்பு) (குறுக்கீடு) திரு. வி.கே. லட்சுமணன்.

பிற்பகல் 2-00

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே அல்-உம்மா தீவிரவாதிகளைக் கைது செய்ததிலே மிகுந்த இன்னல்களுக்கு மத்தியிலே உயிரைத் துச்சமாக மதித்துப் பணியாற்றிய 14 காவல் துறையினருக்கு பதவி உயர்வும், விருதும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாகப் பரிசீலனையில் இருக்கிறது. இந்த முறை முதல்வர் அவர்கள் அந்தப் பிரச்சினையைக் கனிவாகப் பார்த்து அவர்களுக்குப் பதவி உயர்வும், விருதும் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறையினர் படும் இன்னல்களை எல்லாம் இங்கே எடுத்து விளக்கி, கருணை உள்ளத்தோடு அவர்களுடைய நலன்களுக்காக பல நலத் திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். அதை நெஞ்சாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய ஜனநாயக உரிமைகளை உள்ளபடியே பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால், காவலர்கள் சங்கம் அமைத்துக்கொள்வதற்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அது சொல்லி முடிந்துவிட்டது; மணியும் அதைத்தான் சொன்னார்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 21 - உள்துறை-காவல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை, திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி.ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப் படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.





திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை. திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

**திரு. ப. அரசன்,** இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு சோ. இராசேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் பி. வள்ளல்பெருமான், இருக்கையில் இல்லை. டாக்டர் பி. வள்ளல்பெருமான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை. திரு. துரை கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை. திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"உள் துறை - காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 11,70,32,19,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,67,69,15,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 22-உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22 - உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்ரபாணி இருக்கையில் இல்லை. திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை. திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.



**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. கு. பிச்சாண்டி இருக்கையில் இல்லை. திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை. திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

**"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.58,88,47,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,29,27,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.**



D V211,3'P02 P02.242

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

165. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2001-2002)

166. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. (2001-2002)

167. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தைந்தாவது அறிக்கை. (2001-2002)

168. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஆறாவது அறிக்கை. (2001-2002)

169. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து ஏழாவது அறிக்கை. (2001-2002)

170. மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கை. (2001-2002)

171. மனுக்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2001-2002)

172. மனுக்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2001-2002)

* * * *

தமிழ்நாடு ... 2243716 சென்னை-600 ...